
வருஷ சந்தா ரூ. 1 8 0
ஆசிரியர்:—வை. மு. கோதை நாயகி அம்மாள்

# JEGAN MOHINI

# ஜகன்மோகினி

மலர் IV August 1927 இதழ் 9



...ன் மோகினி ஆபீஸ்,
26 தோடித் தெரு,
...தவல்லிக்கேணி, மதராஸ்.

JL
N22 JM
1927.4.9
182838.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

நமக்கு எழுதும் கடிதங்களில் சந்தா நம்பரை மறக்காமல் தெரிவிக்க வேண்டும்.

இடம் மாறும் சந்தா நேயர்கள் நமக்கு புது விலாசத்தை 25 தேதிக்குள் தெரிவிக்காவிடில் அவர்களது பழைய விலாசத்திற்கே சஞ்சிகை அனுப்பப்படும். இதனால் ஏற்படும் தவறுதலுக்கு நாம் பொறுப்பாளியல்ல.

---

## வைதேகி

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் எழுதப்பட்ட விநோதத் துப்பறியும் நாவல். இதில் கதாநாயகி தனக்கு நேரும் துன்பங்களையெல்லாம் சகித்துக்கொண்டு தனது கற்பை நிலை நாட்டுவதும், துப்பறிபவர் அயோக்கியர்களின் கூட்டத்தை ஒழிக்க வலை வீசும் விதமும், இடையில் வரும் ஹாஸ்ய விநோதங்களும், உலகாநுபவங்களும் படிப்பவர்க்கு இன்பமும் ஆச்சரியமும் உண்டாக்கும். அழகிய சித்திரப்படங்களுடன் கூடியது. இரண்டு பாகங்கள் விலை ரூ 2-8-0.

ஜகன்மோகினி சந்தா நேயர்களுக்கு விலை. 2-0-0

முன் பணம் அனுப்பினால் தபால் செலவு இனாம்.

ஜகன்மோகினிக்கு 12 சந்தாதார் சேர்த்துக் கொடுப்பவர்க்கு ஒரு வருஷ சஞ்சிகையும், வைதேகி 2 பாகங்களும் இனாம்.


"ஜகன்மோகினி" ஆபீஸ்

26, தோடித் தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
26 SEP 1927
MADRAS

உ

ஓம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! முனத்தைச் சார்ந்து



| மலர் IV | பிரபவஹு ஆவணிமீ<br>Aug, Sep 1927 | இதழ் 9-10 |
|---|---|---|



## திருமால் அவதார மாலை

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

ராகம் சுருட்டி - தாளம் ஜம்பை.

பிரமன் மிருகலக்கமொடு எங்குதவம் செய்வதென்று சிந்தித்திருக்க
பெருமையுடை வண்குரு கூர்க்ஷேத்திரத்தில் செய்யென்று வாணிமொழிய
சிரமமில்லாத்தவம் செய்து சித்திபெற்று உளமகிழ்ந்து சேவித்திருக்கும்
அரனொடயன் தொழுதேத்தும் ஆதிநாதன் கழலை அணுகுமனமே. 1.

ஏதமிலாமறைவாணர் எக்காலும் புகழ்பாடி ஏத்தியுறையும்
வேதவொலி விழாவொலியும் வரநன்செய் தோத்திரமும் விலகாமலுறையும்
போதமரும் பூமகளும் மண்மகளும் ஆய்மகளும் பொருந்தியுறையும்
நீத திலாத்திருக்குருகூர் பொலிந்து நின்றபிரான் கழலைப்போற்றுமனமே.2.

மிக்கபெரும் புகழுடைய மாவலிதன் வேள்விதனில் சென்று இரக்க
தக்கதிதுவன்றென்று தடைசெய்த சுக்கிரனின் கண்கள்தனிலே
சிக்கனொரு திரும்புதன் னலொரு கண்ணை யுபாயமொடு தொலைத்து இரந்து
சிக்கன வே திரி விக்கிரனுருவாகி யுலகளந்த சேவடியை யணுகுமனமே. 3.

வையணைந்த நுதிக்கோட்டு வாரகமொன்றாய்ப் பூமிதனை யிடந்து எடுத்தான்
நெய்யணைந்த திகிரியினல் வாணன் றன் திண்தோளை நேர்ந்த நிமலன்

செய்தமிகு போர்தனையே சிசுபாலன் தனையொழித்து சிரீதானுமாய்
கையதில் சங்காழியுடை கார்வண்ணன் தன்புகழைக் கழறுமனமே. 4.

தம்பியுடன் மைதிலியும் தன்னோடு பின்வரவே தண்டகமடைந்து
செம்பொன்மான் தனையெய்து சூர்ப்பநகை அங்கபங்கம் செய்து பின்போய்
உம்பர் தொழவே கடலை யணையிட்டு மதிலிலங்கைக் கோனை யொழித்த
செம்பொன்மதிலயோத்தியர்கோன் ராமபிரான்சீர்மைதனைச்செப்புமனமே.5.

இங்கு உளன் என்ன மிகு கோபமுட னிரணியனும் எதிரில்தூண் தனை
யுதைப்ப
அங்கு பிரகலாதனுக்கருள் செய்ய உளம்பற்றி ஆகி நரவரியுருவதாய்
செங்கல் நிறமாலை தன்னில் திருவுகிரால் இரணியனைப்பிளந்து கொன்று
அங்குபிரகலாதனுக்கருள்செய்தஅழகுசிங்கன் அடியிணையை அணுகுமனமே.

நின்றிலங்கு முடியனாய் ஐந்தாறுமேழுமுட னிரண்டு மொருகால்
வென்றியுடை நீள்மழுவால் மன்னர்தமைக் கொன்றுலகைக் காசிபருக்
கீந்தவிமலன்
சென்று திரைக்கடலதனுள் மீனாகிச் சோமுகனைக்கொன்று ஒழித்து
வென்றியுடன் வேதத்தை அருள்செய்த மூர்த்திதனின் திருவடியை
மேவுமனமே. 7.

பெருமையுடை மந்தரத்தை மத்தாகப் பாற்கடலுள் நாட்டி வைத்து
செருவின் மிக வாளெயிற்று வாசுகியைக் கயிறாகச் சுற்றி மிகவும்
வெருவரைய வெள்ளை வெள்ளம் குழம்பமிகுவேகமுடன் இடையோர்கடைய
பெருமையுடை ஆமையுரு வாய்முதுகில் தாங்கிய வப்பிரானடியை அணுகு
மனமே. 8.

வையகத்தில் மறை நான்கை யொண்டமிழால் செய்து திருக்குருகூர் வந்து
செய்யதலை மதுரகவி நாதமுனிக் கருள்செய்து திருப்புளியி னிழலின்கீழ்
கையதனில் ஞானமுத் திரைதரித் துய்யக்கொண்ட சடகோபரான
செய்யசுடராழிதிருச் சங்குடைய சீரீதரனின் சேவடியை அணுகுமனமே. 9.

குறைவின்றி யுகந்தோறும் சேதனரை உயக்கொளவந் தவதரித்த
சிறைவண்டு களிபாடும் திருமகள்கோன் சேவடியி லார்த்தியோடு
மறைபரவும் மாலருளை மனந்தனிலே தினந்தோறும் சிந்தை செய்து
முறையிலிவை பயிலவல அடியவர்கள் முனைவினைகள் முழுதகலுமே. 10.

அ. தே. ராமாநுஜ ஐயங்கார்

ஒரு பிழைதிருத்தம்:—

சென்ற மாதம் 8-வது சஞ்சிகையில் வெளியான தமிழ் நாட்டு நவமணி
களின் 5-வது பாட்டு முதலடியில் சீருடைக்குந்தி தன்னில், என்று விழுந்
திருப்பதைச் சீருடைக்குருகை தன்னில் என்று மாற்றிக்கொள்ளவும்.

அ. தே. ரா.

18238
சென்னை-600 008

# திருமால் இரட்டை மணி மாலை

காணுங் கருத்தொடு கானகத் தன்று கனிகளையே
பூணும் பெரும்பத்தி பொங்குற மென்று புரிந்துதரும்
மாணுஞ் சவரி மகிழ வருந்தியம் மாதவட்குச்
சேணுங் கடந்த பெரும்பதந் தந்தானைச் சேர்மனமே.

மனத்துறைய மாலை மதியாது மாதர்
இனத்துறைய நெஞ்சே யிணங்கேல்—தனத்துறையு
மாவிடத்தை யுண்டு மருதிடைபோய் நின்றானை
நாவிடத்து நிற்க நவில்.

நவிலு மருமறை நண்ணரி யானை நறுநுதலாள்
கவலுங் குறையை முடிப்பமுன் காகத்தின் கண்ணொழித்த
அவலங் கெடுத்தரு ளப்பனை யன்பி னிறைஞ்சுமெனைப்
புவன மளித்தருள் பொற்கொடி நோக்கிடும் பூமகளே.

ஸ்ரீ வீர ராகவ கவி.

திருமால் இரட்டைமணிமாலை முற்றிற்று.

---

## "5 ரூபாய்கள் இனும்"

(ஜகன் மோகினி பரிசு. நே. 4)

தும்பியுண்ணு பூமலருங் காயுமுண்டு
சோறுமுண்ணார் பசியாது வயிறுமுண்டு
வெம்பியதோர் பழம்பழுக்கு மெடுப்பார் தின்னார்
வீடுமுண்டு சம்பதனுல் மேய்ந்ததல்ல
நம்பியதோ ரவரவரே நம்பமாட்டார்
கல்லநல்ல நிலமுடையோர் நவிலுமப்போ
அம்புஜ நேர் முகமுடைய அறிஞரேநீர்
ஆராய்ந்து மிப்பொருளை யுறைகுவீரே

## விடு விடேப்புத் திரட்டு விதிகள்

8-வது சஞ்சிகையிலுள்ள வாறே காண்க. சந்தாதாரரை மாத்திரம் தான் போட்டியில் சேர்க்கப்படும்.

பரிசோதனை நாள் 20. 10. 1927 காலை பத்துமணி.

பரிசளிப்பவர்=டாக்டர் ஸ்ரீமான். கே- எஸ்- பீ. மணியம் அவர்கள்.

டைரெக்டர் ஆப் ஸௌத் இண்டியன் மாரல் யூனியன் சொஸைடி'ஸ், முகாம்=நரசை

பரிசோதகர்=மிஸ். ஆனந்தா— தமயந்திபாய்.

# அறிவிப்பு

கடந்த 8வது சஞ்சிகையில் வெளியான (ஜகன் மோகினி பரிசு. நெ. 3) விடுகவியின் சரியான பொருள்=

கர்னகைக்கு $\frac{1}{2}$ மாதகைக்கு $\frac{1}{4}$ சீதைக்கு $\frac{1}{8}$ பத்மினிக்கு $\frac{1}{9}$ = $\frac{1}{2}+\frac{1}{4}\times\frac{1}{8}$ $\frac{1}{9}$ = 36+18+9+8 = $\frac{71}{72}$ பாக்கி $\frac{1}{72}$. ஆகையால் மொத்த பழங்கள் 10× 72 = 720.

பரிசு பெற்றவர் =

மிஸ்ஸஸ். ஆர். ஞான செல்வாம்பாள்.

வடக்கு மூல வீதி, மதுரை.

8-வது சஞ்சிகையில் வெளியான மற்றொரு விடுகதைக்குச் சரியான விடை:— "கோட்டைப்பாக்கு"

பரிசு பெற்றவர்:—N. குப்புசாமி செட்டியார், சிதம்பரம்.

## ஹாஸ்யத்துணுக்குகள்

### விநோத காலக்ஷேபம்.

"சென்னை மாநகரில் திண்ணைத்தூங்கி தடிராமன் தெருவிலுள்ள தென்னை மர மண்டபத்தில் அவிவேக மகா சபையின் ஆதரவில் சொன்னயம், பொருணயம் பொருந்திய கனகசபை பாகவதர் "நந்தனார்" சரித்திரத்தை ஹரிகதா

காலக்ஷேபமாக அதியற்புதமாக மாலை 4-மணிக்கு நடத்துவார். சங்கீதத்தில் சக்கரவர்த்தி என்றே கூறும்படியானவருடைய அருமையான பின்பாட்டுடன் அது நடக்கும். அனைவரும் விஜயம்செய்யத்தவறுதீர்கள்." என்ற விளம்பரம்சென்னையில் சந்து முனையிலுள்ள எல்லாச் சுவர்களிலும், மூலை முடுக்குகளிலும், மனிதர்களின் தலைமீதும் அந்தரக்கொடிகளிலும் காணப்பட்டது. சங்கீதாபிமானிகளும் கதாபிமானிகளும் பகல் மூன்றுமணி முதல் ஆண்பாலரும் பெண்பாலருமாக வந்து கூடிவிட்டார்கள். மணி 4-அடிப்பதற்குள் பாகவதரும் அவரைச் சேர்ந்தவர்களும் உள்ளே வருவதற்குக்கூட இடமின்றி மிகுந்த ப்ரயாசையாய்விட்டது. மெல்ல சமாளித்துக்கொண்டு பாகவதர் வந்து சேர்ந்தார். ஏற்கெனவே பாகவதர் அனேகவிடங்களில் காலக்ஷேபம் செய்து வெகுமதியாகப் பெற்றிருக்கும் மெடல்களில் இடுப்பில் சிலவற்றை வரிசையாகவும் கையில் சிலவற்றையும், கழுத்தில் ருத்திராக்ஷத்தில் சிலவற்றையும் ஒழுங்காக அணிந்துகொண்டு, ஜரிகை வேஷ்டியும் பட்டையாக விபூதியும் தரித்துக்கொண்டு மெத்த காம்பீரமாக சபையில் எழுந்து நின்றார். அங்குக் கூடியிருக்கும் நூற்றுக் கணக்கான ஜனங்களைக் கண்டதும் பாகவதருக்கு உற்சாக முண்டாய்விட்டது, அவர் தமது திறமைமுற்றும் காட்டிப்பாடவும், கதைசெய்யவும் தீர்மானித்தவராய் சதஸ் வந்தனமும், கடவுள் வணக்கமும் செய்து பின் பீடிகையானதும் கதையைத் தொடங்கலானார்.

நந்தன் சரித்திரமாநந்தம், ஆனாலுமதி
யந்தம் பக்திரஸகந்தம், சொல்லச் சொல்ல— (ந)

நந்தன் சரித்திரம் வேதஅந்தம், சிவனாருக்குச்
சொந்தம் தொலையும் பவபந்தம் கேட்டபேர்க்கு (ந)

ஏது....................ஏது இவனைப்போல சாதுபூமியிலிருக்
காது. அரிது இருகாது படைத்த பேர்க்கு (ந)

இப்பாடலை வெகு திறமையாய் சங்கராபரண ராகத்தில் ஆலாபனத்துடன் அநேக சங்கதிகள் போட்டுப் பாடியதைக் கேட்ட ஜனங்கள், "ஆகா! ஆகா! பேஷ்! என்று ஆநந்தமாய் ஆமோதித்து மகிழ்ந்ததைக் கண்ட பாகவதருக்கு இன்னும் உற்சாகம் பிறந்துவிட்டது. தான் இன்னும் திறமையாகப் பாட எண்ணி, மூன்றாவது சரணத்தை ஆரம்பித்தார்.

வாடி இஇஇஇஇஇஇவாடி......................
மனதிளகிப்பாடி ஹரஹர வென்றடி,
கனகசபை நாடி சேருவோமென்ற........... (ந)

அவர் ஆரம்பித்து முதலடிபாடி ஆலாபனை செய்துகொண்டிருக்கையில் பெண்கள் கூட்டத்து மத்தியில் சிறிது குழப்பமேற்பட்டது. ஆடவர்கள் "உஸ்! உஸ்!" என்றபடியே ஆநந்தமாகக் கேட்டுக்கொண்டிருக்கையில், பர்வதகா

அதனிரண்டாவது அடியையும் பாடி முடித்தார். அதற்குள், பெண்கள் கூட்டத்து மத்தியில் நான்கு ஸ்திரீகள் வெகு கோபத்தோடும், ஆத்திரத்தோடும், ஆவேசம் கொண்டவர்போல் எழுந்து நின்று, "ஐயோ! அநியாயமே! இந்த அக்கிரமம் எந்த ஊரிலே நடக்கும்? இதுக்குத்தான் பட்டணத்தில் உள்ளவர்களெல்லாம் கெட்டுவிட்டார்கள் என்று சொல்ரா. ன்னுயிருக்குது. நாட்டுப்புரத்திலேயும் எத்தனையோ சாஸ்திரிகள் ராமாயணம், புராணம் படிச்சிக் கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட அநியாயம் அங்கு உண்டா? கதைக்கும் கச்சேரிக்கும் போகக்கூடாதென்று பெரியவாள் சொல்றது நிஜந்தான்னு இப்போதான் நாங்க தெரிஞ்சுண்டோம். இந்த மண்ணுங்கட்டி சபைக்கு யாரு வந்திருக்கிறு. இங்கு வந்திருக்கும் பெண்களெல்லாம் வழக்கமாய் வந்து துணிஞ்சு பூட்டாப்போல் இருக்கு. நானும் ஆரம்பிக்கிச்சே முதல் பார்க்கேன். அந்தப் பாவி பாகவதராம் அவனெ கட்டெடலே வெக்க. இந்தப் பக்கம் திரும்பித் திரும்பிப் பார்த்தான். அதுதான்போனு போர்துனு பாத்தா எங்களைப் பார்த்து, 'வாடி! வாடி!' என்று கையை ஆட்டினுன். அப்பவே வந்த கோவத்தில் அவனை அடித்து நசுக்கி இருப்போம். என்னமோ இன்னும் பார்ப்போம் என்னும் பொறுத்தோம். பிறகு, 'வாடி மனமிளகிப் பாடி, அழகாகவே ஆடி, கனகசபையை நாடி, சேருவோம்' என்று இந்தப் பாவி தான் கெட்ட வார்த்தையைப் பாட்டாகப் பாடி, நந்தன் சரித்திரப் பாட்டோடு அதையும் சேர்க்கிருனே. அதை யாரும் கவனித்து அவனுக்குப் புத்தி வரும்படி செய்யவேண்டாமா? நீங்களெல்லாம் ஆண்பிள்ளைகளா? பெண்களைப் பார்த்து அவன், வாடி, ஆடி,— பாவி தன் பெயரையே கூசாது சொல்லி—கனகசபையை நாடி, என்று இன்னும் விபரீதமாகச் சொல்வது தான் கதையோ? இதென்ன பாழாய்ப்போன காலக்ஷேபம்! இதென்ன சோதா சபை! அக்கிரம காலாடி ஜனங்கள் கூட்டம்! சீ! வாயை மூடடா? பாகவதராம்! பாகவதர்!" என்று சரமாரியாக நால்வரும் ஏககாலத்தில் அநேக வெடிகள் வெடிப்பதுபோலவும், சப்த மேகங்களும் ஒன்றுகூடி கர்ஜிப்பது போலவும் கூச்சலிட்டதைக் கேட்டு அங்குக் கூடியிருந்த ஜனங்கள் எல்லோரும் முதலில் ப்ரமிப்படைந்து, பிறகு இவர்கள் கூறும் விஷயத்தை யறிந்ததும் அவர்களுடைய மடத்தனமான புத்தியைக்கண்டு அடங்காத ஆச்சரியமும், நல்ல சமயத்தில் குழப்பத்தை உண்டாக்கியதற்கு ஆத்திரமும் கொண்டு அந்தப் பெண்களைப்பார்த்து, "மூடப்பிணம் உட்காரம்மே" என்று கூறத்தலைப் பட்டார்கள். அந்தப் பெண்களுடைய புருஷர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. அவர்கள் இங்கு நேரிட்ட அவமானத்தைத் தாங்கமாட்டாமல் தமது பெண்டுகளை அழைத்து "மூட மூதேவிகளே! கல்வி கற்பதனுல் கேடுவருமென்றும் அது மிக்க இழிவு என்றும், கூடாத காரியம் என்றும் கல்வி கற்றவர்களையெல்லாம் தூஷித்து முட்டாளாகக் கொழுப்

புப்பிடித்துச் சொல்லும் உங்களுக்குக் கல்வியின் அருமை இப்போதாவது தெரிந்ததா? கல்வி என்பது ஓர் நிதி என்பதுவும், அதைக் கற்றுள்ளவர்கள் இவ் வித சபையை அவமதித்தும் தாமும் அவமானமடைய மாட்டார்கள் என்பதை இப்போதாவது தெரிந்து கொண்டீர்களா? சீச்சீ! மட்டிப் பிணங்களா! உங்களுக் குச் சரியான அர்த்தம் தெரியாவிட்டால் அனர்த்தம் செய்யும்படி யார் கூறியது? வாயைத்திறவாது போங்கள் வீட்டுக்கு. தடிமாங்களா! உங்களை அழைத்துவந்து நாங்கள் அவமானமடைய நேர்ந்ததற்குக் காரணம் உங்களுக்குக் கல்விவாசனை யில்லாமையே. இப்போதாவது தெரிந்ததா! இனியேனும் நமது தாய்பாஷையைக் கற்று பாடல்களுக்கு அர்த்தம் தெரிந்துகொள்ளுங்கள். இன்றோடு புத்தி வரட்டும்'' என்று பெருத்த கூக்குரலிட்டு வைது அவர்களைத் துரத்திவிட்டார் கள். சந்தடி அடங்கியபிறகு பாகவதர் வெகு இனிமையாகக் காலக்ஷேபத்தை முற்றும் செய்து முடித்தார்.

வை. மு. கோ.

---

சுப்பு:—குப்பு! இவ்வரிசிமாவைப் பார்த்தால் எனது நாட்டுப் பெண் நினைவு வருகின்றது.

குப்பு:—அரிசிமாவிற்கும் உனது நாட்டுப்பெண்ணுக்கும் என்ன சம்பந்தம்?

சுப்பு:—அரிசிமாவைப்போல ஒரு மாவை தினம் என் நாட்டுப்பெண் முகத்தில் தடவிக்கொள்கிறாள். அந்த மாவு டப்பி ஒரு ரூபாயாம். ''ஒரு ரூபாய் கொடுத்து அதைத் தடவவேண்டாம் நானே வீட்டில் அரிசி மாவை அரைத்துத் தருகிறேன். அதையே தினம் தடவித் தொலைத்துக் கொள்'' என்றேன். அதற்கு அந்தச் சிறுக்கி என்னை வாயில் வந்தபடி திட்டி விட்டு உள்ளேயிருந்த அரிசி மாவை பாத்திரத்துடன் கொண்டு வந்து என் தலையில் போட்டு ''இதோ! நீயே பூசிக்கொள்'' என்றாள். அது என்னுயிசுவரையில் நினைவிருக் காதா? அதனால் தான் சொன்னேன்.

A. கிருஷ்ணபாய்.

# சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

எமது சொந்த ஜோலியின் நிமித்தமாக 9, 10-ஆகிய இரண்டு இதழ்களையும் ஒன்றாக வெளியிட்டனுப்ப வேண்டியதாய்விட்டபடியால், நமது பத்திரிகையை இதுகாறும் அனுப்பியதுபோல் குறித்த தேதியில் அனுப்பமுடியாமற்போயிற்று. 10-வது இதழ் சீக்கிரமாக வருவதை நோக்கி 9-வது இதழ் வெளிவரத் தாமத மானதைக்குறித்து நமது சந்தா நேயர்கள் மன்னிப்பார்கள் என்று நம்புகிறோம். 11-வது இதழ், அக்டோபர் மாதக் கடைசியில் வெளியாகுமென்பதைக் கவ னிக்கவும்.

பத்திராதிபர்.

## நீங்கள் எதிர்பார்த்திருந்த

# இன்பரகசியம்.

**வெளிவந்துவிட்டது!** **வாங்கிப்பாருங்கள்!!**


| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| ஜீவவசியபரமரகசியம் | 3 | 0 | ஸ்திரீபுருஷ சமத்துவம் | 1 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மம் | 2 | 4 | கொக்கோகம் | 1 | 0 |
| மதிமோசக்களஞ்சியம் 2-பாகம் | 2 | 0 | மதனரதிரகசியம் | 1 | 0 |
| மனோவசிய சாஸ்திரம் | 1 | 8 | ஸ்திரிபுருஷ ரகசியம் | 1 | 0 |
| கைத்தொழில்வணிகரகசியம் | 1 | 8 | இரதிமதனசிருங்கார ரகசியம் | 0 | 12 |
| மாயாஜால வினோதம் | 1 | 0 | சிற்றின்பசாஸ்திர சிந்தாமணி | 0 | 8 |
| சதிபதிகளின் மர்மம் | 1 | 0 | இரகசிய சாஸ்திர சிந்தாமணி | 0 | 8 |
| சரீரமர்ம சாஸ்திரம் | 1 | 0 | விகடசித்தர்கோவை | 0 | 8 |
| பிரம்மஞான பரமரகசியம் | 1 | 0 | காதலரின் வெற்றி | 0 | 6 |

குறிப்பு:—வி—பி. சிஸ்டமில்லாத பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய வெளி நாட்டு நண்பர்கள் புத்தகவிலையுடன், தபால் செலவையுஞ் சேர்த்து முன்பணமாக அனுப்பிப் பெறவும்

விலாசம்:—**எஸ். ஸி. ஆர். பகவான் கம்பெனி,**

சௌகார்பேட்டை, சென்னை.





## ALARM TIME-PIECE.

| | | | | |
|---|---|---|---|---|
| German Made | Rs. | 6 | 0 | 0 |
| New Echo with Alarm | ,, | 7 | 8 | 0 |
| Do. without | ,, | 6 | 8 | 0 |
| Ansonia make Princes | ,, | 6 | 0 | 0 |
| Startle Alarm Time-piece | ,, | 10 | 0 | 0 |

**GAUTHA & CO.,**

*333. Thaumbu Chetty Strec,*

*Madras.*

## 12-வது அதிகாரம்.

### இன்பமும் துன்பமும்—இரவும் பகலும்.

தந்தியைக் கண்டு கலங்கிச் சென்ற சுந்தரன் மனமுற்றும் ஒருவித நிலைமையில் அமைதியடையாமல் கலங்கித் தவிக்கின்றது. "தன் தந்தையின் தேக ஸ்திதி எவ்வாறிருக்கின்றதோ! தான் அங்குச் செல்வதற்குள் அவர் பூரண சுகம் அடைந்திருப்பாரா?" என்ற கவலை ஒருபுறமும், பத்மாவைப் பிரிந்துவந்த வருத்தம் ஒருபுறமுமிருக்க, அவன், "அவளது அறைக் கதவைத் தாளிட்டது யாராயிருக்கும்? ஒருகால் கள்ளர்தான் அங்கு எங்காகிலும் பதுங்கிக்கொண்டிருப்பார்களோ! அவர்களால் அங்கு யாருக்கேனும் ஆபத்து சம்பவிக்குமோ! இச்சமயத்தில் நமக்கும் அவ்விடத்தை விட்டுப் பிரியும்படியான சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டதே!" என்று கருதி, "கருணாகரா! இரண்டிடங்களிலும் எவருக்கும் எவ்விதமான கெடுதலும் நேராவண்ணம் பாதுகாத்தருளல் வேண்டும். என்னப்பனே! உன்னுடைய கருணாசாகரத்தின் காற்று வீசும் வரையில் குறைகளும் உண்டாகுமோ? உனது அருள்மாரி நிரம்பியிருக்குமானால் பிரஜைகளுக்குத் துன்பமென்பதைக் காணவும் போகுமா? அப்பனே! ஸாரதே! என் தந்தைக்கு வந்துள்ள பிணியைப்போக்கிக் காப்பாற்றுவாயாக!" என்று மனமுருகிக் கடவுளிடம் சரணம் புகுந்தான். அவன் தன் இளம்பிராயமுதல் தந்தைதாய் அடிமலர் பணிந்து அவர்களையே தெய்வமாக எண்ணிப் போற்றும் உத்தம புத்திரனாகையால், அவனுடைய தந்தைக்குத் தேக அசௌக்கியமென்பதைக் கேட்டதுமுதல் அவன் கண்களில் நீர் அருவிபோலப் பெருகத் தொடங்கியது. அவன் மனத்தில் முள் தைத்ததுபோலான வேதனை யுண்டாயிற்று.

"தந்தைதாய் பணித்தல் செய்யுந் தவமலாற் றவம்வேறில்லை
மைந்தருக் கெதிக ளேனும் வணங்குவர் தாயைத் தந்தை
யந்தமைந் தனையே போற்றல் வேண்டும் மற்றுத நன்னாற்
சிந்தையுற் றுணரிற் றுயே தந்தையிற் சிறந்தாண்மன்னே."

—காசிகண்டம்.

என்ற நீதி வாக்கிற்கொப்ப அவன் நடந்துவந்தான். தனது நித்திய கர்மானுஷ்டானத்தில்,

"வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து—வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை." —ஆசாரக்கோவை

இதை முக்கியமாகக் கொண்டு தனது தாய்தந்தையரின் புகைப்படத்திற்கேனும் வணங்கி வந்தான். தன் தாய் தன்னைக் கர்ப்பத்தில் வைத்துக்கொண்டு பட்ட துன்பமும், பின்னர் தன்னை ஈன்று, ஈ, எறும்பு முதலிய சிறிய ஜந்துக்களும் தீண்டாவாறு அன்புடன் பாதுகாக்கப் பட்ட கஷ்டமும் கொஞ்சமல்ல என்பதை அவன் அடிக்கடி சிந்திப்பான். பின், தன் தந்தை தனக்குக் கல்வி என்னும் கலாவல்லியின் பிரசாதமாகிய அமுதை யூட்டி வளர்த்த நன்றியறிதலை அவன் ஒருபோதும் மறப்பதேயில்லை. தன்பாற்கொண்ட அவர்களின் மனம் கோண ஒருசிறிதும் அவன் நடக்கவே மாட்டான்.

"ஒன்றொரு பயன்றனை யுதவினோர் மனங்
கன்றிட வொருவினை கருதிச் செய்வரேற்
புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூற்றும் வேண்டுமோ?" —கந்தபுராணம்

என்று பெரியார் கூறியுள்ள நீதிவாக்கை அவனுள்ளம் அடிக்கடி எண்ணும். ஆகையினால் அவர்கள் தன் பொருட்டுப் பட்டிருக்கும் கஷ்டங்களை எண்ணி அவர்களிடம் பக்தி விசுவாசமும், மரியாதையும் பாராட்டி வந்தான். தந்தைபாற் கொண்ட அன்பு தனித்தொரு புறம் வாட்ட, மங்கையைப் பிரிந்த துன்பம் ஒருபுறம் வருத்த, கதவைத் தாளிட்டது யார் என்ற கேள்வியொருபுறம் வதைக்க, அவன் மனம் ஒருவழியில் நில்லாமல் சிதறி நின்றது. அவன் ஏறியிருந்த வண்டி இருபுறமும் மரங்களடர்ந்த ரஸ்தாவில் வெகு வேகமாகச் சென்றது. அந்த வேளையில் நிலவும் ஏதோ சிறிது சிறிது மரத்தின் நிழலில் மறைந்து தெரிந்தது. அப்போது சுமார் ஒரு மணி இருக்கலாம். வண்டி வேகமாகச் சென்றுகொண்டிருக்கையில் எதிரில் சுமார் அரைக்கால் மையிலுக்குள்ளாக ஆள்கள் நிற்பது போலவும், பனந்துண்டுகளைக் கீழே ரஸ்தாவில் குறுக்கே அடுக்

கிட்டு வைத்திருப்பதுபோலவும் வண்டியோட்டிக்கு விளக்கின் வெளிச்சத்தினால் தெரிந்தது. அதைக் கண்டவுடனே அவன் திடுக்கிட்டுத் திடீரென்று நடுங்கலானான். வண்டியின் விசையை அழுத்த இயலாமல் கை நடுங்கியபடியால் வண்டியின் வேகம் குறைவுபட ஆரம்பித்தது. சுந்தரனுக்குத் தன் நினைவு முற்றும் சிதறுண்டு கிடப்பதால் அங்கு வண்டி மெல்ல நின்று போவதையும் சற்றுமறிந்தானில்லை. அந்நிலையில் வண்டியோட்டி, சுந்தரனைப்பார்த்து, "எஜமானே! எஜமானே! என்ன இது, தாங்கள் பேசாதிருக்கின்றீர்களே! நாம் இப்போது பெரிய ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றோமே! அதோ பாருங்கள். பனந் துண்டுகளை வழியில் குறுக்கிட்டுக் கிடத்தியிருக்கின்றது. யாரோ கள்ளர்கள் நம்முடைய வண்டியை மடக்கிக்கொள்ள எண்ணி அப்படிச் செய்திருக்கிறார்கள் என்று தோன்றுகின்றது. ஐயோ! நாம் இத்தருணம் எவ்விதம் இந்த ஆபத்தைக் கடந்து செல்வது? வண்டியைத் திருப்பி வந்தவழியே விட்டால்தான் பிழைத்தோம். என்ன செய்யலாம்?" என்று மிகுந்த பயத்துடனும், குரல் நடுங்கவும் கேட்டான்.

நிலையழிந்து உட்கார்ந்திருக்கும் தருணம் தன்னை அழைத்து வண்டியோட்டி இப்படிக் கேட்கவே சுந்தரன் திடுக்கிட்டான். "ஆ நமக்கு இத்தகைய ஆபத்தும் நேரிடுமோ! ஐயோ கஷ்டகாலமே! துரிதமாகத் தந்தையைக் காணவேண்டுமென்று நாம் ஆவலாக ஓடி வருவதெல்லாம் ஆபத்தாகவா முடியவேண்டும்? ஆ ஜகதீசா! இதென்ன கோலமப்பா? இத் திருவிளையாடலும் உன் கூத்தோ?" என்று கலங்கினான். ஆயினும் அவன் சுத்தவீரனாகையால் தனது தைரியத்தைவிட்டுக் கோழைத்தனமாக வருந்திப் பயப்பட அவன் மனம் இடந்தரவில்லை. ஆகவே அவன் துணிபே கொண்டு, "ஆண்மையை மறந்து வீணே வருந்துவது அழகல்ல. எவ்வித ஆபத்திலும் தனது தைரியத்தைக் கைவிடாமல் முயற்சிப்பவனே தீரனாவான்" என்றெண்ணிப் பின்,

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்"
"மெய் வருத்தக் கூலிதரும்." —திருக்குறள்

என்றுதெய்வப்புலமைத் திருவள்ளுவனார் திருவாய்மலர்ந்தருளியபடி முயற்சியால் முன்னிற்கத் துணிந்து,

"விடாது தனுவிற் செயுமுயற்சி மென்மேற் பொருளை மிகவளர்க்குங்
கெடாது சுற்ற நட்பினர்தங் கிளையுந் தாங்கும் யாவர்க்குந்
தடாத வுபகா ரமும்புரியுந் தடந்தா மரையா ளையுஞ்சேர்க்கும்
படாத வூழ்வந் திடுகாறும் பயனே விளைக்கும் பழியின்றும்."

—விநாயகபுராணம்.

என்னும் பெரியார் போதனையையும் சிந்தித்து, "என்னப்பனே பார்த்தஸாரதே! கருணுகரா!

"உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்
மயர்வற மதிநல மருளின னெவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யெவனவன்
துயரறு சுடரடி தொழுதெ ழென்மனனே" திருவாய்மொழி.

என்னும் உறுதிவாக்குப்படிக் கடவுளைத் தியானித்து, இத்தருணம் பலவிதமான துன்பங்களை விளைவித்ததுபோதாதென்று இந்தக் கள்ளர் பயமும் உண்டாக்கினுயா? மாரியே பயிரை அழிப்பதும் செழிப்பிப்பதும் போலவே உன்னருள்மாரியினுலேயே ஆக்குவதும் அழிவதுமாகச் செய்கின்றுய். என்னப்பனே!

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலு
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
வலகிலா விளையாட் டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரணுங் களே" கம்பராமாயணம்.

என்று பாடிப் பகவானைச் சரண்புகுந்து, "இந்த அர்த்த ராத்திரி வேளையில் என்னைக் கள்ளரிடம் காட்டிக்கொடுக்க உனது கருணைக்கு நான் பாத்திரமாகாததே காரணமல்லவா? உனது கருணை ஓரிடத்தில்தா னுள்ளதாமோ? பேதாபேத முன்னிடமுண்டோ? சிறிதுமில்லையன்றே?

"வானுகி மண்ணுகி வளியாகி யொளியாகி
யூனுகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனுகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்றுயை யென்சொல்லி வாழ்த்துவனே" திருவாசகம்.

என்றபடி எவ்வுயிர்களிலும் எப்பொருள்களிலும் இருக்கிறுய். என் விஷயத்தில் பொய்த்துப்போகும்படியாக நீ நடந்துகொள்வாயா! என்னப்பனே! உன் சரணத்தையே நம்பித் துணிவடைகின்றேன். நீ அங்கெங்கெனுத படி எங்கும் பிரகாசிக்கும் ஜோதியல்லவா? உன்னருள் ஜோதி பக்தர்கள் பாடியுள்ளபடி இங்குமிருக்கவே வேண்டும்.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில." திருக்குறள்

என்ற ஆன்றோர் திருவாக்கின்படி உன்னடியை நம்பின என்னைக் கைவிடமாட்டாயென்று நம்பியே முயற்சி செய்கின்றேன்" என்று பலவாருகத் தன் மனத்தினுள்ளேயே தோத்திரம் செய்துகொண்டே மெய்மறந்திருக்கும் தருணம் மீண்டும் வண்டியோட்டி, "எஜமானே! நாம் வண்டியை நிறுத்திவிட்டு இங்கு நிற்பதை அவர்கள் தமக்குப் பயந்து நிற்பதாகச் சடுதியில் ஊகித்தறிந்துகொண்டு இங்கு துரத்தி வருவார்களேயானல் நாம் எவ்விதம் தப்புவது? நாம் உடனே வண்டியைத் திருப்பிக்கொண்டு போவதே உசிதமல்லவா? தாங்கள் இத்தருணம் பேசாதிருப்பது தகுமோ?" என்ருன்.

இதைக்கேட்ட சுந்தரன் கண்விழித்தவனுய் வண்டியோட்டியை நோக்கி, "அப்பா! நாம் ஆண்மக்களாய்ப் பிறந்தும் ஆண்மையற்றவரைப்போல் பின்னிட்டுச் செல்வது நமக்கு வீரத்தனமாகுமா? நாம் எத்தகைய ஆபத்து வந்தபோதிலும் பின்னடையாமல் துணிந்து ஈசன் சரணங்களை நம்பி முயற்சிப்பதே நமக்கு வீரத்தன்மை. அதைத் தளரவிடுவது சிறிதும் நன்ருயிராதாகையாலும், எனது தந்தையை நான் எவ்விதமேனும் இன்றிரவே சென்று பார்க்க வேண்டுமாகையாலும் நாம் பின்னடையாமல் முன்னிடுவதே நலமும் ஆண்மையுமாம். ஆகையால் நான் கூறுகின்றபடி செய்வோம். இப்பொழுது நாமிருக்கும் இந்த இடம் இருள் சூழ்ந்திருப்பதுடன் நமது வண்டியின் விளக்கின் பிரகாசம் எதிர்ப்பக்கம் அடிப்பதால் அங்குள்ளவர்களுக்கு இங்குள்ளவை தெரியவரா. ஆகையால் நாம் என்ன செய்யவேண்டுமென்ருல் வண்டியோடு நாம் நேரில் செல்வோமேயானல் குறுக்கிலுள்ள பனைமரங்களால் வண்டி தடுக்கப்பட்டு நின்றுவிடும். நாம் எப்படியும் கள்ளர் கையில் அகப்படநேரும். நாமும் தப்பித்துக்கொள்ள வேண்டும். கள்ளர்களையும் முடிந்தால் பிடித்துவிடவேண்டும். அதற்கு ஒரு தந்திரம் செய்துதான் தப்ப வேண்டும். என்னிடம் முதலியார் கொடுத்த பணமும் மருந்துகளுமிருக்கின்றன. அவற்றை யெல்லாம் எடுத்து ஒரு மூட்டையாகக் கட்டி இந்த மரத்தின்மேல் வைத்துவிட்டு நீயும் உட்காரு. நான் எனது வைத்தியருக்கு வண்டியோட்டி வழக்கமாகையால் இவ்

வண்டியின் விசையை நன்ருக முடுக்கி விட்டுவிடுகிறேன். வண்டி அவ்விடத்தில் சென்று மரங்களைத் தாண்டி மோதி அடித்துக்கொண்டு சென்ருலும் சரி, இல்லையேல் தடுக்கப்பட்டு நின்றுவிட்டாலும் அவர்கள் யாவரும் வண்டியண்டை வந்து வளைத்துக்கொள்வார்கள். அத்தருணம் நாம் அவர்களையறியாமல் மெல்லச்சென்று என் கையிலுள்ள மயக்க மருந்தை ஒரு சவுக்கத்தில் கொட்டி அவர்கள் மூக்கில் சுவாசத்திற்கு நேரே காட்டி உடனே அவர்களைக் கட்டிவிடுகின்றேன்'' என்ருன்.

இதைக்கேட்ட வண்டியோட்டி நடுங்கி வியந்து, ''ஐயோ! இது நம்மாலாகும் காரியமா? இவ்விதம் செய்ய நாம் துணிந்தால் நாம் கட்டாயம் அவர்கள் கையில் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம். இந்தச் சிரமத்தைவிட நாம் திரும்பிவிடுவதே நலமல்லவா?'' என்று கூறித் திரும்பி வந்தவழியை உற்று நோக்கினன். அந்தோ! அவன் இடியுண்ட நாகம்போல் நடுங்கி, '' ஆ எஜமானே! அதோ பாருங்கள். மரத்திற்கு மரம் குறுக்காகக் கயிற்றைக் கட்டி வைத்திருக்கின்றது. ஐயோ! அங்கும் ஆட்கள் இருப்பதுபோல் காண்கின்றதே! என்ன செய்வோம்? நாம் கட்டாயமவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு விட்டோம். இனித் தப்ப வழியே இல்லை. முன்னரே சென்றிருந்தால் நாம் தப்பியிருக்கலாம். இனி என்ன செய்வது?'' என்று துடிக்கின்ருன்.

இது கேட்ட சுந்தரன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். இப்புறமுள்ள மரங்களில் கயிறு கட்டியிருப்பதை நிலவின் வெளிச்சத்தினல் அவன் தெரிந்து கொண்டான். அஞ்சாத சுந்தரனையும் இச்சம்பவம் அஞ்சும்படியாகச் செய்ததென்ருலும், அவன் தைரியத்தைக் கைவிடாமல் இனிமேல் தாமதிக்கலாகாதென்று எண்ணியவனுய்த் தனது உடைகளையும், மருந்துகள், ரூபாய் முதலிய யாவற்றையும் மூட்டையாகக் கட்டி வண்டியோட்டியிடம் கொடுத்துவிட்டுத் தான் ஒரு சவுக்கத்தை உடுத்துக்கொண்டு மற்ருெரு சவுக்கத்தையும் மயக்க மருந்தையும் தயாராகக் கையில் வைத்துக்கொண்டு ஈசனை நம்பி வண்டியின் விசையை நன்ருக அழுத்தி விர்ர்ர் என்று விட்டுவிட்டுத்தான் ஒரு மரத்தோடு மரமாக ஒட்டிக்கொண்டான். வண்டியோட்டி மூட்டையோடு மரத்தின்மேல் உட்கார்ந்து நடுங்குகின்

ருன். சுந்தரன் மனம் பதறியவாறு நிற்கின்ருன். வண்டி அதிவேக மாகச் சென்று அம்மரங்களின்மேல் ஏறித் தாறுமாருக ஓடி அப்பால் சென்றுவிட்டதைக் கண்ட சுந்தரன் இன்பமும் துன்பமும் அடைந்தான். "ஐயோ! நாமும் வண்டியோடு சென்றிருந்தால் அவர்களைத் தாண்டிக்கொண்டு சென்றிருக்கலாகுமே! ஒரு கால் கள்ளர்கள் இவ்வழியே வந்தால் என்ன செய்வது? நாம் ஒன்று நினைக்கக் காரியம் வேருக முடிந்துவிட்டதே! என்ன செய்வது?" என்று யோசித்துக்கொண் டிருக்கையில் கள்ளர்கள் ஒவென்று பெருத்தக் கூக்குரலிட்டுக்கொண்டே "அடே அந்த வண்டியில் வந்தவன் என்ன சாமர்த்தியமாய்த் தனது திறமை எல்லாங்காட்டி வண்டியை உட்டுட்டாண்டா! அந்த வண்டி எப்படியும் இந்தப் பக்கமானும் அந்தப் பக்கமானும் ஆப்பிட்டுக்கத்தான் போறது என்று தைரியமாக விருந்தும் அது நம்மைக் கடந்துப் போயுட்டுதே! பலே! அவன் நல்ல கெட்டிக்காரப் பேர்வழிடா! அவ்வளவு வேகமாயும் தாறுமாருகவும் ஓடின வண்டி எங்கானும் பள்ளத்திலோ வேறு எந்தவிடத்திலோ நின்ருே, விழுந்தோதா னிருக்கும். அடே! எல்லோரும் வாங்கள்; நாம் உடனே அந்த வண்டியைத் துரத்திக்கொண்டு ஓடுவோம்" என்று கூவினர்கள்.

இதைக் கேட்ட சுந்தரன் சரேலென்று மரத்தில் ஏறி அடர்ந்த கிளையில் உட்கார்ந்து கொண்டான். பின்புறத்தில் கயிற்றைக் கட்டியிருந்த கள்ளர்கள் அந்தக்கயிற்றை அவிழ்த்துவிட்டு எல்லோருமாக இங்கு ஓடிவந்தார்கள். இருதிறத்தாரும் சுமார் 4-5 பெயருக்கு இருந்தார்கள். எல்லோரும் ஒன்றுகூடி ஒரே ஓட்டமெடுத்து வண்டி சென்ற வழியே சென்றூர்கள்:

மரத்தின் மீது உட்கார்ந்தபடியே இவற்றையெல்லாம் கவனித்த சுந்தரனும் வண்டியோட்டியும் "அடடா! நாம் பெருத்த துன்பத்திலல்லவா மாட்டிக்கொண்டோம்? வண்டிக்கும் சேதமேற்பட்டிருக்கும். நாமும் அபாய நிலைமையில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கலானேமே" என்று சற்று வருந்தினர்கள்.

சுந்தரன் "அந்தோ! தந்தையைப் பார்க்க வெகு ஆவலுடன் செல்லும் நமக்கு இத்தகைய இடையூறுகள் வந்து நேர்ந்தனவே" என்றெண்ணி மனம் துடித்தானுயினும் அப்போதும் தைரியத்தைக்

கைவிடாமல் வண்டியோட்டியை மரத்தினின்றும் இறங்கச் சொல்லித்தானும் இறங்கினன். கடவுளின் சரணங்களை நம்பி மனதில் தைரிய லக்ஷ்மியை உறுதியாகக்கொண்டு ஒரு முடிவிற்கு வந்தான்; வண்டியோட்டிக்குத் தைரியம் சொல்லிக்கொண்டேயிருந்தான். இருவரும் அந்த மரத்தில் நன்ருக உலர்ந்து கிடந்த குச்சிகளையும் கிளைகளையும் உடைத்து எடுத்துக்கொண்டார்கள். சுந்தரன் வண்டியோட்டியின் கையில் கொடுத்த மூட்டையை வாங்கி வயிற்றில் வைத்து ஒரு சவுக்கத்தால் இறுகக் கட்டிக்கொண்டான். அதற்கு மேல் ஒடிந்திருந்த கிளைகளைத் தேகத்தில் கால் முதல் தலைவரையில் வைத்து நன்ருக இருவரும் கட்டிக்கொண்டார்கள். உலர்ந்த கிளைகளில் தனது வஸ்திரத்தில் ஒன்றைக் கிழித்து நன்ருகச் சுற்றிவிட்டுத் தன் கையில் வைத்திருந்த மருந்தெண்ணையில் அந்தத் துணியை நனைத்து அந்தப் புட்டியை மீண்டும் மடியில் வைத்துக்கொண்டான். வண்டியோட்டி சுருட்டுப் பிடிக்கும் வழக்கமுடையவனுகையால் அவன் தன்கையிலிருந்த தீக்குச்சியைக் கிழித்து இந்தக் கிளைகளைக் கொளுத்திக்கொண்டு மற்றக்குச்சிகளையெல்லாம் சேர்த்து உலர்ந்த சருகுகளையும் சேர்த்து அவற்றைக் கும்பலாக வைத்து அதையும் கொளுத்திவிட்டான். சுந்தரன் வண்டியோட்டியை நோக்கி, "அப்பா! நாம் சற்றும் பயமில்லாமல் இந்தக் கிளையைக் கையில் பிடித்துக்கொண்டு ஹா-ஹு என்று கொள்ளிவாய்ப்பிசாசுபோல் கூச்சலிட்டுக்கொண்டோட்டமாக அந்த வழியே செல்வோம். அவர்கள் நம்மைக் கண்டு பயந்து ஓடினுல் நாம் வண்டியைச் சரிப்படுத்திக்கொண்டு ஓடிவிடுவோம். இல்லையேல் நாம் கையில் வைத்திருக்கும் மயக்க மருந்தைக் கொடுத்து அவர்களை மயங்கவைத்து தப்பித்துக்கொள்ளும் வழியைத் தேடுவோம். அதற்கும் இயலாவிட்டால் கடவுளிருக்கிருர்" என்று கூறிவிட்டுத் தானும் அவ்வாறே எரியும் கிளையைப் பிடித்துக்கொண்டான். பிறகு இருவரும் ஹா-ஹு ஹா-ஹு என்று பெரிய ஆரவாரத்துடன் ஓடவாரம்பித்தார்கள்.

அவர்கள் சுமார் கால் மைல் தூரத்திற்கப்பால் சென்ருர்கள். அப்போது கள்ளர்கள் ஒன்றுசேர்ந்து, ஒரு பள்ளத்தில் சாய்ந்து சக்கரம் புதைந்து கிடந்த மோட்டார்காரை மெல்லத் தூக்கி நேரே ரஸ்தாவிற்குக் கொண்டுவந்து நிற்க வைத்து, வியந்தவண்ணம்

"ஆஹா! என்ன ஆச்சரியமடா! வண்டி சாய்ந்து கிடக்கின்றது! அதிலிருந்த மனிதர்கள் எங்கு சென்றிருக்கலாம்? நாம் தான் இத னுடன் கூடவே துரத்திக்கொண்டே வருகின்றோமே? இதற்குள் இதிலிருந்த மனிதர் எவ்வாறு மாயமாய் மறைந்திருப்பார்கள்? ஒருகால் இந்த வண்டியைத் தூக்கமாட்டாமல் ஓடியிருப்பார் களோ? மேலும் இந்த வண்டியில் மனிதரில்லாமல் இது எவ்வாறு ஓடி வந்திருக்கும்? சரி; நல்லதாயிற்று. வண்டியைத் திருப்பி நாம் ஓட்டிக்கொண்டு போய் விடுவோம். நமக்கு மிக்க அநுகூல மாகவிருக்கும்" என்று கூறிக்கொண்டேயிருக்கையில் இவர்க ளுடைய கூக்குரல் அவர்கள் காதில் விழுந்தது. விழுந்ததும் அவர் கள் திரும்பிப் பார்த்தார்கள். எரியும் நெருப்புடன் இவர்கள் வரு வதைக்கண்ட அவர்கள் நடுநடுங்கி, "டேய்! தீவட்டிக் கொள்ளைக் கள்ளர்கள் வருகின்றார்கள். உடனே திரும்புங்கள். குறுக்கே பாய்ந்து எங்காவது ஓடி ஒளிந்தால் பிழைத்துக் கொள்ளலாம். இல்லையேல் நாம் நமது கையிலிருக்கும் பொருளையும் பறிகொடுத்து தீவட்டிக்கிரையாக வேண்டும். உடனே கிளம்புங்கள்" என்று தமக் குள் கூறிக்கொண்டு ஒரே ஓட்டமாகக் குறுக்கு வழியாகப் பாய்ந்து ஓடத் தலைப்பட்டார்கள்.

இதைக்கண்ட சுந்தரனும் வண்டியோட்டியும் கடவுளைத் தோத் திரம்செய்து "ஆ! ஊ!" என்று கூச்சலிட்டுக்கொண்டே வண்டியரு கில் வந்து சேர்ந்தார்கள். வண்டி ரஸ்தாவில் இழுத்து விடப்பட் டிருந்ததால் வண்டியோட்டி உடனே வண்டியின் விசை கெடாமலிருக் கின்றதா என்று பார்த்தான்; டயர் அபாய நிலைமையில் இருந்த படியால் கையிலிருந்த புதிய டயரைச் சக்கரத்தில் பிணைத்து மற்ற யந்திரங்களிலேற்பட்டிருந்த சில சேதங்களையும் டிரைவர் தன் னால் கூடியமட்டும் சரிவரச்செய்து வண்டியை விடத் துவக்கினான். "வண்டி வேறுவிதத் தடைக்குள்ளாகாமல் நேரே எனது தந்தை யைக் காணும்படியாக என்னை அதிசீக்கிரமாகக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமே! ஈசா!" என்றெண்ணிக்கொண்டே சென்றான் சுந்தரன். அவனது தந்தையின் நினைவே அவனைப் பற்றிக்கொண்டு மனத்தை வருத்தியது. வண்டி அதிவேகமாகச் செல்லாமல் சற்று நிதானமாகவே சென்று விடியற்காலை சுமார் நான்கு மணிக்குச் சுந் தரனின் விடுதியை அடைந்தது.

சுந்தரன் தன் வீடு சென்றதும் தாய்ப்பசுவைக் காணவரும் கன்றுக்குட்டி போல் துள்ளிக் குதித்துச் சரேலென்று ஓடி வாயிற் படியில் நின்று கதவை இடித்தான். உள்ளிருந்து தனக்கு என்ன செய்தி கிடைக்குமோ என்ற பெருங்கவலையுடன் அவன் "அம்மா! அம்மா!" என்று அன்பாயழைத்தான். இதற்குள் உள்ளிருந்து "இதோ வந்தேனடா! என் கண்ணே!" என்ற அன்பான குரல் ஒன்று கேட்டது. உடனே கதவும் திறக்கப்பட்டது. சுந்தரன் வாசற் படியைத் தாண்டியதும் தன் அன்னையைக் கண்டு அவள் காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து பாதத்தைத் தொட்டுக் கண்க ளில் ஒற்றிக்கொண்டு நமஸ்காரஞ் செய்தான்.

புத்திரனைக் கண்ட பேரானந்தத்தினால் பூரித்துப் புளகாங்கித மடைந்த உமாமகேச்வரியம்மாள் ஆனந்தக் கண்ணீர் அருவிபோலப் பாய்ந்தோட தன்னிரு கரங்களினாலும் சுந்தரனைத் தழுவி யணைத் துச் சிறிய குழந்தையைப் போல் உச்சிமுகந்து நின்றாள். சுந்தர னும் வணங்கி எழுந்தவுடன் முதற் கேள்வியாக "அம்மா! அப்பா வுக்குத் தேக சுகம் எவ்வாறிருக்கிறது? அப்பா எங்கே படுத்திருக் கிறார்?" என்று ஆவலோடு கேட்டான். இதைக்கேட்ட தாயார் "குழந்தாய்! அப்பா உன்னைப்பற்றியே எப்போதும் பிதற்றிக்கொண் டிருக்கிறார். நீ இன்னும் வந்து சேரவில்லையே என்று நாங்கள் வருத்தப்பட்டுக்கொண்டே இருந்தோம். உள்ளே வாடா என்னப் பனே!" என்று அன்பாய்க் கூறி அழைத்துக்கொண்டு உள்ளே சென்றாள். சுந்தரன் தன் தந்தையைக் காண வெகு ஆவலாய் உள்ளே நுழைந்தான். அப்பொழுது அவன் தந்தை, "குழந்தை வந்தானா? சுந்தரன் வந்தானா? அப்பா! சண்முகசுந்தரம்! சுந்தரம்! குழந்தை இன்னும் வரவில்லையா? அவன் இன்சொல்லையும், மதிமுகத் தையும் கண்டால் உடனே என் தேகப் பிணி நீங்கிவிடும்போலவிருக் கிறதே! இன்னும் தந்தி போய்ச் சேர்ந்திருக்காதா? குழந்தை சீக்கிரம் வருவானா?" என்று புலம்பிக்கொண்டே இருந்தார். சுந்த ரன் விரைந்து தன் தந்தையருகில் சென்று அவர் தனது வரு கையை எதிர்பார்த்து ஏங்கித் தவிப்பதைக் கேட்டு "ஆ! இப்போ தாவது வந்து சேர்ந்தேனே!" என்று கருதிக் கண்ணீர் பெருகக் கதறி நாத்தடுமாற, "ஆ! என்னருமை அப்பா! அப்பா! இதோ

அடியேன் வந்துவிட்டேன். தங்கள் உடம்புக்கு என்ன?" என்று கேட்டுக்கொண்டே அவர் பக்கத்தில் உட்கார்ந்து அவர் தேகத்தைத் தனது கரத்தால் வருடிக்கொண்டே அவர் முகத்தை அன்பாய் நோக்கினான்.

சுந்தரனுடைய குரலைக் கேட்டதும் அவனது தந்தை தமது தேகபாதை முற்றும் நீங்கப்பெற்றவர்போல் ஆநந்தப் பரவசமடைந்து தமதிருகரங்களையும் விரித்துச் சுந்தரனை இறுகத்தழுவிக்கொண்டு, 'ஹா! என்னப்பா சுந்தரா! என் கண்ணே! என் கண்ணே! என் தேகபாதை நீங்கிவிட்டதடா செல்வா! உனது முகாரவிந்தத்திலிருந்து வந்த அமுதத்திவலைபோன்ற இன்பமொழிகளைக் கேட்டு உன்னைக் கண்ணால் கண்டமாத்திரத்தில் எனது பிணிகளெல்லாம் க்ஷணத்தில் விலகிவிட்டன. எனது தேகமும் மனமும் பொங்கிப் பூரிக்கின்றதடா. என் சுதனே! சுந்தரம்!" என்று கண்ணீர் பெருகச் சுந்தரனைக் கட்டியணைத்து முத்தமிட்டு மார்போடு சாற்றிக்கொண்டார்.

தன் தந்தை தன்மீது வைத்துள்ள வாஞ்சையையும், அத்யந்த அந்தக் கரணபரிபூரணமான அன்பையும், தந்தையின் தேகம் தன்மீது பட்ட காலத்தில் அனலைப்போன்று தாபமாக ஜுரம் காய்வதையும் கண்ட சுந்தரன் இன்பமும் துன்பமும் ஒருங்கே அடையப்பெற்றவனாய், "ஆ! எனதரிய தந்தையே! கடுமையாகக் காய்ச்சல் காய்கின்றதே! தாங்கள் என்ன மருந்து உட்கொண்டீர்கள்? தற்போதுள்ள நிலைமையைக் கவனிக்கின் 104-டிகிரிக்குக் குறையாமல் ஜுரம் காய்வதாகத் தோன்றுகின்றதே! அப்பா! நான் மருந்து கொண்டு வந்திருக்கிறேன். அதை உட்கொள்ளுங்கள் முதலில்" என்று கூறித் தந்தையின் ஆலிங்கனத்தினின்று மெல்ல நழுவியனாய் எழுந்தான்.

வண்டியோட்டி வண்டியிலிருந்த சகல சாமான்களையும் உள்ளே சேர்த்துவிட்டுச் சுந்தரனை அவன் தாயும் தந்தையும் அன்புடன் நடத்தும் மாதிரியையும், அவர்களது ஏழ்மை நிலைமையையும், கண்ணியமான தன்மையையும், அவர்கள் புத்திரன்பால் கொண்ட பரம பிரீதியையும், புத்திரன் பெற்றோரிடத்தில் கொண்டுள்ள பயபக்தி,

வினய விசுவாசத்தையும் கண்டு கரைபுரண்ட ஆநந்த மடைந்தவண்ணம் வியப்பே உருக்கொண்டதென நின்றுகொண்டிருந்தான்.

"ஆஹா! உலகத்தில் இத்தகைய அன்பும் பிரேமையும் கொண்ட பெற்றோர்களும் அதற்கேற்ப புத்திரனும் ஒருங்குகூடிய அன்புடையவர்களாய் அகப்படுவதே அரிதினும் அரிதன்றோ! ஆஹா! என்ன அன்பு! என்ன வாஞ்சை! என்ன உத்தமலக்ஷணம் பொருந்திய மனிதர்கள்!" என்று தனக்குள் கூறிக்கொண்டு அதிசயித்தான்.

தந்தையை விட்டு எழுந்த தனயன் தான் கொண்டுவந்த தர்மாமிட்டர், நச்சுக்குழாய் முதலியவைகளைத் தனது தந்தைக்கு வைத்துப் பார்த்து அதற்குத் தக்க பல அரிய அவுடதங்களை முறையே உட்செலுத்தி மற்றுமுள்ள சிகிச்சைகளையும் செய்து, "அப்பா! எனதாருயிர் அப்பா! தங்களுக்கு என்ன செய்கின்றது? ஏதேனும் ஆகாராதிகள் தேவையாக இருக்கின்றனவா! தலை முதலிய எந்தவிடத்திலாவது வலி இருக்கின்றதா? அதைத் தெரிவித்தால் அதற்குத் தக்க மருந்துகளை உபயோகப்படுத்துகின்றேன்" என்று மிக்க வணக்கமாயும் அன்பாயும் கேட்டான்.

இதைக் கேட்ட அவனது தந்தை "அப்பா! அருமை மகனே! எனக்குத் தலையில் வலியில்லை. கழுத்தின் பின்புறம் தான் அற்றுப்போய் விடும்போல இருக்கின்றது. அதற்குப்பற்றோ அல்லது தைலாதிகளோ இருப்பின் தடவினால் சற்று அநுகூலமாக இருக்கும்" என்றார். உடனே சுந்தரன் ஒருவித தைலத்தைப் பின் கழுத்தில் தடவி உருவியவாறு சற்றுப் பிடித்தான். பிறகு அவர் அப்படியே அயர்ந்து நித்திரை போய்விட்டார். சுந்தரனும் அவன் தாயாரும் அவர் பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு, ஏதோ யோக க்ஷேமங்களையும், சுந்தரனின் சிநேகிதர்கள், வைத்தியர் முதலியவர்களுடைய க்ஷேமங்களையும் உமாமகேச்வரியம்மாள் விசாரித்துக்கொண்டே இருந்தாள். சுந்தரனும் தந்தைக்கு ஜுரம் வந்ததற்குக் காரணம் முதலியவற்றை எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டான்; தான் வழியில் வரும்போது தனக்கு நேர்ந்த ஆபத்தையும் தான் தப்பித்து வந்ததையும் கூறினான். இதைக்கேட்டு உமாமகேச்வரியம்மாள் மிக்க கவலையும் வருத்தமும் கொண்டு தவித்து

அவன் தப்பித்ததற்கு மகிழ்ந்தாள். சுந்தரன் வந்த வண்டியை அவனுடைய வைத்தியரின் வண்டியென்றே அவள் எண்ணியிருக்கிருள். சுந்தரனும் அந்தத்தகவலைத் தெரிவிக்க வெட்கிப் பேசாமலிருந்துவிட்டான்.

பொழுதும் புலர்ந்தது. மகேச்வரியம்மாள் தனது கிருகக்ருத்யங்களைக் கவனிக்கச் சென்ருள். சுந்தரன் தன் நித்தியக்கடன்களை முடித்துக்கொண்டு பெற்ரேர், கடவுள் முதலியவர்களை வணங்கிப் பின் தன் தந்தையைக் கவனித்துக்கொண்டே வந்தான். தன்னுடன் வந்த வண்டியோட்டிக்கு ஒரு ரூபாயைக் கொடுத்து அவனை ஒட்டலுக்குச் சென்று ஆகாரம் செய்துவிட்டு வரும்படியாக அனுப்பினுன். 7-மணி சுமாருக்கு அவன் தந்தை கண்ணை விழித்துக் கொண்டார். அவன் அவருக்கு மருந்து முதலியவைகளைக் கொடுத்து ஆகாரம் செய்வித்து அவர் பக்கத்திலேயே உட்கார்ந்து அவரைப் பாதுகாத்து வந்தான்.

அன்று சிறுகச் சிறுக ஜுரம் தணிந்துகொண்டே வந்தது. தேகத்திலுள்ள வலியும் குறையவாரம்பித்தது. அன்று கழிய மறுநாள் ஜுரம் நன்ருய் விட்டுவிட்டது. அது கண்டு சுந்தரன் மகிழ்ந்தான். இனிமேல் புறப்படலாமா என்று யோசித்துக் கொண்டேயிருக்கையில், அவன் தாய் தந்தையர்கள் சிரித்த முகத்துடன் சுந்தரனை நோக்கி மகிழ்ந்தவாறு, "அப்பா சுந்தரம்! இந்தக் கடிதத்தைப் படியப்பா!" என்று கூறி ஒரு கவரை எடுத்துக் கொடுத்தார்கள். அதை வாங்கிய சுந்தரன் அதன் மேல்விலாசத்தைப் படித்ததும், "இந்தக் கையெழுத்து நாம் ஏற்கெனவே பார்த்த மாதிரியாக இருக்கின்றதே! தந்தையாருக்கு இதை யார் எழுதியிருப்பார்கள்?" என்று எண்ணியவாறே "அப்பா! இது யாரிடமிருந்து வந்திருக்கின்றது?" என்று கேட்டான். அதற்குத் தந்தை "படித்துப் பாரப்பா தெரியவரும்" என்று கூறினுர். சுந்தரன் கடிதத்தைப் பிரித்துத் தனக்குள் பின்வருமாறு படிக்கலானுன்.

மகா-ா-ா-ஸ்ரீ பரமசிவ முதலியார் அவர்களுடைய திவ்விய சமுகத்திற்குத் தங்களுடைய மேலான கனத்தைக் கோரும் விதேயன் கேசவமுதலி அநந்தகோடி தெண்டனிட்டுச் செய்யும் விண்ணப்பம். கடவுளின் கிருபையாலும் பெரியாரின் ஆசீர்வாதத்தினு

லும் இவ்விடத்தில் யாவரும் க்ஷேமம். அவ்விடத்தில் தங்களுடைய க்ஷேமத்தைப்பற்றி அடிக்கடி தெரியப்படுத்தக் கோருகிறேன். தங்களுக்கு அடியேனைப்பற்றித் தெரியாது. ஆயினும் அடியேன் தங்களை, நேரில் காணுவிடினும், நன்கறிவேனுகையால் இதை எழுதத் துணிந்தேன். அவிந்துவிடும் தருவாயிலிருந்த விளக்கை அடியேனுடைய குலத்தில் ஏற்றிவைத்த உத்தம ரத்தினமாகிய தங்களுடைய அருந்தவப் புதல்வனுருடைய பிரக்யாதியையும், மற்றுமுள்ள சகல சற்குண அம்சங்களின் விசேஷங்களையும், பரோபகார காருண்ய மனத்தையும் நேரில் கண்டறிந்தபின்னர் அந்த ஆநந்தத்தைத் தமக்குத் தெரிவிக்காமலிருக்க என் மனம் இடந்தரவில்லை. யார் செய்த புண்ணியவசமோ! அச்சுதனின் அருள் பிரகாசமோ! தங்களுடைய திருக்குமாரர் அடியேன் குடிசையில் இரண்டு நாளாக இருக்கும்படியான பாக்கியத்தைக் கேவலம் பாவியாகிய நான் பெற்றேன், அதைத் தினம் எண்ணி மிக்க மகிழ்ந்து பூரித்துப் புளகாங்கிதமடைகின்றேன். என்னுடைய துன்ப நிலைமையில் இன்பநிலயம்போன்ற தங்கள் திருக்குமாரரைக் காண்பதால் என் மனம் அடையும் ஆநந்தத்திற்கும் ஓர் எல்லையுண்டோ? என்னுடைய குடும்ப வரலாற்றை அறியாதவர்கள் பாக்கியசாலிகளாவார்கள். அதனை யான் தெரிவிக்காமலிருப்பதே நலமாகும். கேவலம் அபாக்யவந்தனுகிய நான் ஓர் உயர்தர மாணிக்கத்தை இச்சிப்பதென்றுல் அது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோல இருக்கின்றது என்பதை நான் அறிகின்றேன் எனினும், யான் அவ்வித மாணிக்கத்திற்கு அருகனல்லவெனினும், அதற்குச் சற்றேறக்குறைய இணையான கல் இந்தப் பாவியின் கிருகத்தில் இருப்பதால் அதனை உத்தேசித்து இதைத் துணிந்து எழுதலானேன். அது அசம்பாவிதமாக இருப்பின் மன்னிக்கவும்.

நிற்க, என் குழந்தையின் சகல அம்சங்களைப் பற்றியும் நான் கூற வேண்டுவது ஒன்றுமில்லை. தாங்களே தங்கள் குமாரரின் மூலமேனும், நேரிலேனும் அறிந்துகொண்டு உங்கள் உசிதப்படிச் செய்யலாம். தங்கள் குமாரருக்கு எங்களுடைய குடும்ப வரலாறு முற்றும் தெரியவரும். அவருடைய பரிபூர்ணமான இஷ்டமும் தங்களுடைய சம்மதமும், ஆசீர்வாதமும் இருக்குமாயின் இப்பாவி

யின் இச்சை ஈடேறும் என்று எதிர்பார்க்கிறேன். இதோடு என் குழந்தையின் ஜாதகமும் அனுப்பியுள்ளேன். அதையும் பார்த்துத் தாங்கள் சம்மதத்துடன் ஏழையேன் குடிசைக்கு வருவீர்களென்று நம்புகிறேன். ஈசன் எங்களைப் பரம்பரையாக ஜமீந்தார்கள் பதவியில் வைத்துப் பட்டம் கொடுத்திருந்தும் தற்போது எனக்குள்ள மனக் கஷ்டத்தினால் அதனை யான் தெரிவித்துக் கொள்வதற்கும் வெட்கமடைகின்றேன். என்றாலும், கடவுள் கிருபையினால் அளிக்கப்பட்ட என்னிடமிருக்கும் ஒரு பொருளை அதற்குத் தகுந்த இடத்தில் சேர்த்துவிட்டால் என் மனம் நிம்மதியடைந்துவிடும். என்னுடைய ஆவலும் அடங்கிவிடும். என்னுடைய குறைதீர என் கண்மணி பத்மவல்லிக்குத் தக்க நாயகனாக வரிப்பதற்குத் தங்கள் புத்திரர் ஒருவர்தான் ஏற்றவர் என நாங்கள் நிச்சயித்துக்கொண்டோம். ஈசனருளும், தங்களின் ஆசியும் எத்தகையதாக உள்ளதோ அறியோம்.

நிற்க, நமக்குள் சம்பந்தம் கடவுளின் அருளால் ஏற்பட்டாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நான் சுந்தரனை விட்டுப் பிரிய மனம் தாங்கமாட்டேன்; தாங்கள் எனது சொந்த சகோதரர்போல் என்னுடன் கூடவே இருக்கவேண்டும். தங்களுடைய குணாதிசயத்தைப் பற்றி, டாக்டர் சாமிநாதரின் மூலமாக அறிந்தேன். அதுமுதல் தங்களைப் பார்ப்பதற்காக என் மனம் பறக்கின்றது. தற்போதுள்ள என்னுடைய நிலைமையில் நான் அவ்விடம் வருவதற்கு மிக்க அசக்தனாயிருக்கிறேன். முன் பின்னறியாத அன்னியன் யான் இவ்வளவு தூரம் எழுதியதைப்பற்றி ஆயாசப்படமாட்டீர்களென்று நம்புகிறேன். தாங்கள் பெண்ணைப் பார்க்கப் பிரியப்படலாம். அதற்காக இதோடு அவளுடைய உருவப்படமும் ஒன்று அனுப்பியிருக்கின்றேன். கூடிய சீக்கிரத்தில் தங்களுடைய முடிவான பதிலையும் வரவையும் எதிர்பார்க்கிறேன். பிழை பொறுத்தருள்க.

வேணும் நமஸ்காரம்.

இங்ஙனம், தங்கள் விதேயன்,

M. கேசவ முதலியார்

மேற்படி கடிதத்தைப் படித்துக்கொண்டே வரும்போது சுந்தரனுக்குண்டான ஆநந்தத்திற்கும் வியப்புக்கும் அளவே கிடையாது.

அவன் அவற்றை யெல்லாம் வெளியில் காட்டிக்கொள்ளாமல் மறைத்துக்கொண்டு தனக்குள் "ஆகா! நமக்குத் தெரியாமல் அந்த முதலியார் இங்கும் அவரது அபிப்பிராயத்தைக் குறித்து எத்தனை அழகாய் எழுதியிருக்கிறார்! என்ன பெருந்தன்மையான குணம்! அடடா! அத்தனை பெரிய ஜமீந்தார் இந்தக் கடிதத்தில் தன்னை மிகவும் தாழ்மையாகவும் கர்வமில்லாமலும் எழுதியுள்ள ஒன்றே அவருடைய சகல பெருந்தன்மையையும் விளக்கிக் காட்டுகின்றதே!" என்று எண்ணி வியந்தான். இதற்குள் அவனது பெற்றோர்கள் "என்னப்பா சுந்தரம்! வாளாவிருக்கின்றாய்? இந்த முதலியார் யார்? இவர்களுடைய வரலாறு யாது? ஜமீந்தாரின் வம்சத்தைச் சேர்ந்த இவர் கேவலம் பரம ஏழையாகிய நம்மைக் கவுரவப் படுத்தி எழுதியிருப்பதைப் பார்த்தால் அவர் மகா குணவானாக இருக்கவேண்டும் என்று தெரிகின்றதே! உன்னையவர் எவ்வாறறிவார்? உனக்குமவருக்கும் எப்போதிலிருந்து பரிச்சயம்? அவர் வரைந்திருப்பதெல்லாம் உண்மையானவைகள்தானா? அல்லது உன்மீது ஏதாவது சினங்கொண்டு வேடிக்கையார்த்தமாக வரைந்துள்ளாரா? உனக்குத் தெரிந்தவற்றைக் கூறு. நீ ஏதேனும் தவறுதலாக அவர்களிடம் நடந்துவிட்டாயா? அதற்காக அவர்கள் ஏளனமாய் இவ்வாறு வரைந்திருக்கின்றார்களா? எனக்கு ஒன்றுமே புலப்படவில்லையே! அந்த விவரங்களை அறியும்பொருட்டே உன்னை அவசரத் தந்தியடித்து வரவழைத்தோமப்பா! அவர்களோ பெரிய மனிதர்கள்; நாமோ கேவலமான ஏழைகள். நம்மையவர்கள் எதற்கு இவ்வாறு கொண்டாடி எழுதியிருக்கிறார்கள்? இதன் உண்மையான காரணம் யாது?" என்று வரிசையாகக் கேட்டனர்.

சுந்தரன் வியப்பும் திகைப்பும் கொண்டு, "ஆ! இவர்கள் நாம் ஏதோ தப்பிதமாக நடந்துவிட்டதாக எண்ணுகிறார்களே! என்று நினைத்தவனாய், தான் பத்மவல்லியைக் கடலிலிருந்து காப்பாற்றியது, பிறகு முதலியார் தன்னை அழைத்தது, தான் மறுத்தவனாகவே அவர்கள் இன்னார் என்பதை யறியாமல் அங்கு சென்று பிறகு தெரிந்துகொண்டது, அதன்பின் முதலியார் தன்மேல் வெகு பக்ஷம் காட்டி மனப்பூர்வமாகத் தன்னிடம் கூறிய வார்த்தைகளையும் கூறி அதன்பின் தனக்குத் தனிவிருந்து செய்தது, அங்கு

தீயினல் விபத்து நேர்ந்ததை அவித்தது, முதலியாரின் குடும்ப வரலாறும் புதல்வனின் கதி முதலியவற்றையும், தன்னை இப்போதும் அவருடைய வண்டியிலேயே 100 ரூபாய் நோட்டை ஜோபியில் வைத்தனுப்பியது, தந்தையை உடனே அவ்விடத்திற்கே அழைத்து வரும்படி ஆயிரம் தடவை சொல்லியது, தன்னைவிட்டுப் பிரிய மனமற்று வருந்தியது, தன்மீது உண்மையாகவே அந்தரங்கமான பிரியம் அவ்வீட்டில் யாவரும் வைத்திருப்பது, தன்னை அவர்கள் சொந்த மகன்போல் மதிப்பது(தான் பத்மாவை இச்சிப்பதையும், அவள் தன்மேல் அன்பு கொண்டிருப்பதையும், தங்களுக்குள் நடந்த சம்பாஷணைகளையும் கூறுமல்விட்டு விட்டு) முதலிய சகல வரலாற்றையும் கூறி முடித்தான்.

சுந்தரனுடைய தாய் தந்தையர் இவைகளைக் கேட்டதும் இன்னதென்று விவரிக்க இயலாத மகிழ்ச்சியுற்றனர். பிறகு தந்தை சுந்தரனைப் பார்த்து, "நாமிருக்கும் நிலைமைக்கும் அவர்களுடைய அந்தஸ்திற்கும் மலைக்கும் மடுவிற்குமுள்ள தாரதம்மியமல்லவா இருக்கின்றது? அப்பா! சுந்தரம்! இந்தக் கடிதத்திற்கு நானென்ன பதிலை எழுதுவதப்பா! எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே! அந்தப் பெண்மணியின் படத்தைப் பார்த்தால், அது உண்மையான மனிதர்களின் படமோ அல்லது தேவமாதோ என ஐயுறும்படியாக இருக்கின்றது. ஆகா! அத்தகைய எழில்வாய்ந்த சுந்தரியைக் கோடீசுவரர்களாகிய அவர்கள் கேவலமான ஸ்திதியிலுள்ள நமக்கு எவ்விதம் கொடுக்க முன் வந்துள்ளார்கள்? நான் விளையாட்டாக அன்றே ஜாதகங்களைப் பார்வையிட்டதில் அவை மிகவும் நன்றாய் அமைந்திருக்கின்றன. எனக்கிருந்த பெரிய பயம் என்னவென்றால் நீ ஏதேனும் அவர்களிடத்தில் பிசகாக நடந்துவிட்டாயோ என்பதுதான். அவற்றைத் தெரிந்துகொள்ளவும், எனது தேக அசௌக்கியத்தை முன்னிட்டும் உன்னை உடனே வரும்படியாகத் தந்தியடித்தேன். ஆகா! அவர்களுடைய நல்ல உன்னத பதவியையும் உயர்தர குணத்தையும் நினைத்து அவர்களுடைய புத்திரனின் தற்போதைய நிலைமையை நினைத்து என் மனம் மிகவும் வருத்தப்படுகின்றது. ஆகா! இந்தத் திருட்டின் உண்மையைக் கண்டுபிடிக்க நல்ல கெட்டிக்காரர்களை நியமிக்கவில்லையா?" என்றார்.

இதைக்கேட்ட சுந்தரன், "அவர்கள் வெறுமனேயில்லை அப்பா! நமது சென்னை ராஜதானியில் மிக்க பிரக்யாதி பெற்ற துப்பறியும் நிபுணர் ராஜாராம் நாயுடுவைத்தான் அவர்கள் நியமித்திருக்கின்றார்கள். அவர் கூடிய சீக்கிரத்தில் திருட்டைக் கண்டுபிடித்து விடுவாரென்று நம்பித்தானிருக்கிறார்கள். எல்லாமிறைவனருளல்லவா?" என்றான்.

தந்தை:— அப்பா! உன்னிடம் அவர்கள் இத்தகைய பிரியம் காட்டுவது உன் மனத்திற்கு உண்மை என்று நம்பிக்கையாகப் படுகின்றதா?

சுந்தரன்:—அதைப்பற்றித் தாங்கள் சிறிதும் சந்தேகமே கொள்ளவேண்டாம். அவர்கள் மனப்பூர்வமான உள்ளாழ்ந்த அன்பே வைத்திருக்கிறார்கள். தாங்கள் என்மேல் எத்தகைய ப்ரீதியுட னிருக்கின்றீர்களோ அதேபோல் அவர்களும் இருக்கின்றார்கள்.

தாயார்:—அவர்தான் சம்மதப்பட்டு எழுதியுள்ளார். அவர் புதல்வியின் இஷ்டம் எவ்வாறிருக்குமோ அதை எவ்வித மறிவது?

சுந்தரன்:—அம்மா! அந்த வீட்டில் யார் எந்தக்காரியம் செய்த போதிலும் அவர்களுடைய புதல்வியின் அனுமதியின்பேரில் தான் செய்வது வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். ஆகையால் முதலியார் தமது பெண்ணுக்குத் தெரியாமல் கடிதம் எழுதியே இருக்கமாட்டார். அவர்கள் வீட்டு அநுபவ வழக்க தோரணையிலிருந்து நான் தெரிந்து கூறுகின்றேன்—என்று பத்மம் தன்னை மணக்க இசைந்திருப்பதை இப்படி தந்திரமாகக் கூறினான்.

இதைக்கேட்ட இருவரும் மிகவும் மகிழ்ந்தார்கள். தந்தை "கடவுளின் அருளிருக்குமானால் எதுதான் நடவாது? எல்லாமவனருள், எல்லாமவன் பொருள், எல்லாமவன் செயலே. அவர்கள் எழுதியுள்ளபடி நான் எனது தேகம் சுகமடைந்த பின்னர் அவ்விடம் வந்து பார்க்கிறேன். அவர்கள் எத்துணை பிரியமாய் உபசரித்தாலும் நீ அவர்களுடைய வீட்டிலேயே இராதே. எப்போதும் ஓர் அடி தூரத்தில் இருப்பதே அழகு. அதுவே மேன்மை. கடவுளின் திருவருள் எவ்விதம் நடக்கின்றதோ நடக்கட்டும். நீ இன்னும் இங்கு எத்தனை நாள் இருக்கலாம்?" என்றார்கள்.

சுந்தரன்:—தங்களுக்குச் சற்று குணமடைந்ததும், என்னை வந்துவிடும்படியாக எனது வைத்தியர் கூறியுள்ளார். ஆகையால், நான் இன்றே சென்றாலும் செல்லலாம். தங்களுக்குத்தான் சற்று குணமாக இருக்கின்றதே!" என்றான். உடனே தந்தை "ஆமப்பா! உன்னுடைய கடமைப்படி நீ செய்ய வேண்டியவன்தான். சரி, வண்டியுமில்லாமல் அவர்களுக்கு மிகுந்த கஷ்டமாக இருக்கும். நீ தகுந்த மருந்தை என்னிடம் கொடுத்து விட்டு நாளைக் காலையில் சென்றுவா. நான் கடிதமெழுதுகிறேன். நீ புத்திசாலியாகையால் உனக்கு அதிகம் நான் சொல்ல வேண்டுவதில்லை. உன்னை யோசனை கேட்டால் எங்களிஷ்டம் என்றுதான் சொல்வாய். ஆகையால் யோசித்துச் சொல்லுவோம். நீ மரியாதையாகவே நடந்துகொள். உன்னைக் கடித விஷயத்தைப்பற்றிக் கேட்டால், "முற்றும் குணமானதும் என் தந்தை நேரில் வந்து காண்பதாகக் கூறினர்" என்று கூறிவிடு" என்றார்.

அன்று வேறு விசேஷமின்றிப் பொழுது சாய்ந்தது. மறுநாள் உதயத்திற்கு அவன்தான் வந்த வண்டியிலேயே ஏறிச் செல்வதற்குப் பிரயாணமாகிப் பெற்றோரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அவர்களை வணங்கிவிட்டு வண்டியில் ஏறினன். வண்டியிலுள்ளசில யந்திரங்களை வண்டியோட்டி நன்றாகச் சரிப்படுத்தியிருந்தபடியால் வண்டி தடைபடாமல் சென்றது. சுந்தரன், தனது தந்தைக்குக் குணமானதைப் பற்றியும், தனது பெற்றோரும் விவாக விஷயத்தில் சம்மதப்பட்டிருப்பதுபற்றியும் அடைந்த மகிழ்ச்சியையே துணையாகக்கொண்டு வண்டியில் சென்றான். காதலி பத்மவல்லியைப் பார்க்கலாமென்ற ஆவலும் அவனுக்குத் துணை செய்தது. வண்டியும் வேகமாகச் சென்று, சில மணிநேரத்தில் பங்களாவை யடைந்தது. சுந்தரன் ஆவலோடு இறங்கி வாயிற்படியண்டை போகும்போதே இவனைக் கண்ட பணிமக்கள் ஓவென்று கதறி அழவாரம்பித்தார்கள். இதைக் கண்ட சுந்தரனும் வண்டியோட்டியும் இன்னதென்று விஷயத்தைத் தெரிந்துகொள்ள முடியாமல் துடிதுடித்து அவர்களையே விசாரிக்க அவர்கள் நடந்த வரலாற்றைக் கூறினர்கள். இதைக்கேட்ட சுந்தரன் வேரற்ற மரம்போல் "ஆ!" என்று விழுந்துவிட்டான். வண்டியோட்டியும் கதிகலங்கி விட்டான்.

---

## 13-வது அதிகாரம்

### எட்டியே கற்கண்டு கட்டி

பத்மவல்லி காணுமல் போனதும், முதலியார் கடிதமெழுதி வைத்துவிட்டு உயிரைத் துறக்க வெளியே புறப்பட அந்தக் கலக்கத்தினுல் லக்ஷ்மியம்மாள் பயித்தியம் பிடித்ததுபோலாய்விட்டமையாலும், நாயுடுகாரு எதுவும் தகவல் தெரிவிக்காமையினுலும்குமாஸ்தா பெருங் குழப்பமடைந்து ஏக்கமடைந்திருந்ததாலும் செல்லப்பாவிற்கு வக்கீல் வைத்து வாதிக்கும்படியாகச் செய்வதற்கு அவர்களால் சாத்தியமில்லாமற்போய்விட்டது. செல்லப்பாவின்மேலுள்ள பழிகளை எவ்விதமேனும் விலக்கி அவனை மீட்பதற்கு, உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விடும்படி நாயுடுவிற்கு குமாஸ்தா தினந்தோறும் கூறிக்கொண்டே வருகிருர். நாயுடு தன் சாமர்த்தினுல் முயற்சி செய்துதான் வருகிருர்.

பிறகு ஒரு வாரத்திற்கெல்லாம் செல்லப்பாவின் கொலைக் குற்றவழக்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. சாக்ஷிகளெல்லாம் செல்லப்பாவிற்கு விரோதமாகவே இருந்தமையால், அவனைக் குற்றவாளி என்றே மதித்து ஸெஷன்ஸுக்கு அனுப்பிவிட்டார்கள்.

செல்லப்பா தனக்கு நேர்ந்த அவமானத்தையும், காந்தாமணியின் நேசம் தனக்கில்லாமல் போனதுமல்லாமல் அவளுடைய உயிரையும் தானே வாங்கியதாய்ப் படாப்பழி வந்துள்ளதைப்பற்றியும் நினைந்து உருகி உருகி நாளுக்கு நாள் மெலிந்து துரும்பாய் இளைத்து உருமாறிவிட்டான். அப்போதும் அவனது மனத்தில் பெற்றோரிடத்தில் கொண்ட பகைமை குறைந்தபாடில்லை. அவன் காந்தாமணியையே எண்ணி எண்ணி ஏக்கங்கொண்டு கண்ணீர் விட்டுக் கதறுவான். "ஹா! என் கண்மணீ! காந்தாமணீ! என் மனத்தைக் கொள்ளைகொண்ட கோகிலாமணி! நன்மணீ! நவமணீ! என்னை விட்டு நீ மட்டும் செல்வது தகுமோ! கிளியே! கனியே!" என்று தனக்குத்தானே பேத்துவான். காந்தாமணியை எதிரில் கண்ட

வன்போல் கையை விரித்துக்கொண்டு கட்ட முயலுவான். கொஞ்சிக் குதிப்பான். மீண்டும் தானே தேறுதலடைவான்.

ஒரு பாபமும் அறியாத, தன்மேல் இப்படித் தீர்ப்பு செய்யப்பட்டிருப்பதை எண்ணி அவன், "ஆகா! என்ன உலகம்! என்ன நியாயம்! ஐயோ! இக்காலத்தில் நீதி என்பதே மறைந்து விட்டதே! ஒரு குற்றத்தையும் மனதினாலும் நினைத்தறியாத என்னைக் குற்றவாளி என்று தீர்மானித்து அதை ஸ்தாபனம் செய்து விட்டநியாயாதிபதியா நீதிவான்? அநியாயம், நியாயம் என்பது அவனுடைய அறிவுக்குப் புலப்படவில்லையா? ஐயோ! முன்பு நம்மை ஜாமீனில் மீட்கவந்தவர்கள் இப்போது எட்டியும் பார்க்கவில்லையே! என்னை இத்தகைய கதிக்கு ஆளாக்கிவிட்டுக் கண்குளிர வேடிக்கை பார்க்கின்றார்களே! ஆ! என்னுடைய நிலைமையை எண்ணினால் எனது உள்ளம் உருகிக் கருகுகின்றதே! பத்மவல்லியைக் காணவில்லை என்று கூறுவது உண்மையாக இருக்குமோ? ஹா! என தருமை பத்மத்தை நான் என்னுடைய ஆத்திரத்தில் கொலைசெய்து விடும்படியாக ரத்தினசாமியிடத்தில் சொல்லியதை அவன் நிறைவேற்றி விட்டானோ! அந்தத் தகவலை அவன் என்னிடத்தில் இன்னும் தெரிவிக்கவில்லையே! சிநேகிதனும் என்னைக் கைவிட்டு விட்டானே! ஆ! பத்மம் என்ற பெயரை நினைக்கும்போதே என்னை என்னவோ செய்கின்றதே! என்னுடைய முதல் உயிர்நிலையாகிய பத்மாவிற்கு எறும்பு கடிக்கவும் எண்ணச்சகியாத என் மனம் அவளுயிரையே வாங்கும்படியாகத் துணிந்து சொல்லி விட்டதே! ஐயோ! அந்தக் கொடுமையை இப்போது நினைத்தால் என்னுள்ளம் துடிக்கின்றதே! ஆ! என் செல்வமே! பத்மம்! உன்னைக் காணவில்லை என்ற செய்தியைக் கேட்டதும் என்னுயிர் தவிக்கின்றதே! என்ன செய்வேன்? உன்னுடைய பெயரை எண்ணும் போதே என் மனம் தவிக்கின்றதே! பத்மவல்லீ! உன்னை நான் எத்துணை பிரியமாய் மதித்திருந்தேன். நான் உன்மேல் கொண்டுள்ள வாஞ்சையானது என்னை நிமிடத்திற்கு நிமிடம் உருக்குகின்றதே! ஆ! அப்பாவும் ஏதோ கடிதமெழுதிவிட்டு இறக்கத்துணிந்து கடலில் விழுவதற்குச் சென்றுவிட்டதாகச் சொல்லுகிறார்களே! ஐயோ! இதென்ன விந்தையாக இருக்கின்றதே! என் மனம் அவர்

களை முற்றும் மறந்தது. அவர்களுடைய தற்போதைய நிலைமையைக் கேட்டதும் என்னை மீறி ஏதோ ஒருவித எண்ணம் மனத்தில் உண்டாகின்றதே! அம்மாளுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதாமே! அட அநியாயமே! அங்கு அப்பா எழுதிவைத்துவிட்டுச் சென்ற கடிதத்தை சேவகன் எனக்குக் காட்டியதை நான் படித்ததும் என் மனத்தில் என்னவோ பாதை உண்டாகிறதே! அதை இன்னதென்று விவரிக்க முடியவில்லையே! காந்தாமணியின் சவம் அந்தப் பங்களாவிற்குள் எவ்விதம் கொண்டுபோகப்பட்டிருக்கும்? நான் கொலைசெய்ததாக அந்தக் குற்றத்தை என்மேலேயே ஊர்ஜிதப் படுத்துவதற்காக அதை யாரோ தந்திரமாக அவ்விடத்திலுள்ள ரகஸிய அறையில் வைத்துவிட்டார்கள்போ விருக்கின்றதே! ஐயோ! அநியாயமாக என் பத்மவல்லியைக் கொலை செய்யும்படியாக பாவியான் ஏன் கூறினேன்? அவள் காணமல் போன அன்றே அப்பாவும் இறக்கத் துணிந்ததாகத் தெரிவிக்கின்றார்களே! அவளை அப்பா யாருக்கோ விவாகம் செய்துவைக்கும்படியாகக் கூறியுள்ளாரே! அவள் காணமற்போனது தெரிந்திருந்தால் அப்படி எழுதுவார்களா? அவர் நம்முடைய செய்தியைப் பத்திரிகையில் கண்டபின் இறக்கத் துணிந்ததாகவல்லவா கடிதத்தில் எழுதியுள்ளது. அப்பா எழுதியிருக்கும் மாதிரியையும் செய்யத் துணிந்துள்ள காரியத்தையும் நினைத்தால் நாம் அவர்கள் பேரில் கொண்டுள்ள பகைமையும் அவதூறான எண்ணமும் நம்முடைய மதியீனத்தினுல் உண்டானதாகவல்லவா தோன்றுகின்றது? ஐயோ! எனக்கு மூளை சிதறிவிடும்போ லிருக்கின்றதே! நாம் கொண்டுள்ள வைராக்கியமெல்லாம் எங்கேயோ மறைந்தது! மனம் குழம்ப ஆரம்பித்துவிட்டது! அடடா! என் மனத்தை எவ்வகையில் மாற்றினுலும் காந்தாமணி, பத்மம், அப்பா, அம்மா ஆகிய நால்வரையும் விநாடியும் மறக்க மாட்டாமல் தவிக்கின்றதே! இதென்ன காரணமோ தெரியவில்லையே!" என்று செல்லப்பா தனக்குள் புலம்பியவாறு படுத்திருந்தான். அப்போது காலம் இரவாகையால் வேலைக்காரர் முதலிய எல்லோருடைய நடமாட்டமும் அடங்கி நிச்சப்தமாயிருந்தது.

செல்லப்பாவிருந்த சிறைச்சாலைக்குப் பக்கத்து அறையில் ஒரு கைதி தலைவிதியை எண்ணிப் புலம்பிக்கொண்டிருந்தான். அவன்

புலம்பியது செல்லப்பாவிருந்த அறையில் நன்ருகக் கேட்டது. "நமக்குற்ற துன்பங்களை எண்ணி நாம் உருகுவதுபோல் இவ்விடத்திலும் யாரோ ஒருவன் அழுது வருந்துகிருன் போலவிருக்கிறது" என்று செல்லப்பா எண்ணியவாறு மெல்லச் சாய்ந்தான்.

அப்போது பக்கத்துச் சிறையிலிருந்தவன் மெல்ல வாய்விட்டு அலற்றுகிருன்.—"ஐயோ! ஒரு பாபமும் செய்தறியாத என் தலைக்குத் தீம்புவைத்து என்னை இக்கதிக்கு ஆளாக்கவேண்டுமா? 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று பள்ளியில் நான் சிறிய பிராயத்தில் படித்த காலத்தில் எனக்கு உபாத்தியாயர் கற்பித்ததை நான் எனது முதன்மைப் பாடமாகக் கற்று அங்ஙனமே நான் என் தந்தையையும் தாயையும் விடாது பணிந்துவருகையில், எனக்கு இக்கதியும் நேரவேண்டுமா? ஆ! என்னருமை மாதா பிதாக்களே! நான் மீண்டும் தங்களை என்று கண்டு தொண்டுபுரிவேன்? ஆ! என் அங்கம் பதறுகின்றதே! அடீ சண்டாளி! நான் உன்னிஷ்டத்திற்கு இணங்கவில்லை என்ற அகங்காரத்தினுல் நீ என் கண்ணெதிரிலேயே அக்குழந்தையின் கழுத்தை முறித்துக் கொன்ருய்! உன் நெஞ்சு துணிந்து, என்மேல் பழியை வைத்தாய்! பாதகி! நீ நன்ருக வாழ்வாயா? அடீ சண்டாளி! உன்னுடைய துராக்கிருதத்தைக் கடவுளால் நியமிக்கப்பட்டவர்கள் தண்டிக்காவிடினும் கடவுள் ஒருநாளும் தண்டிக்காமல் விடமாட்டார் என்பதை மறந்துவிட்டாயா? ஐயோ! தாயையும் தந்தையையும் விட வேறு தெய்வம் புவியில் உள்ளதோ? "தந்தை தாய்ப் பேண்" என்னும் ஆன்ருேர் வாக்கின்படி, அத்தகைய பணியைக் கைவிட்டு எத்தனை தினங்களாய்விட்டன! ஐயோ! அவர்களுக்குத் தொண்டு செய்து அவர்களை மகிழச் செய்வதைவிடச் சந்தோஷம் எனக்கு வேறு எதுவும் இல்லையே! ஐயோ! அவர்களுடைய ரணத்தை நான் எவ்வகையில் தீர்ப்பேன்? ஆகா! என்னுடைய தாயின் கர்ப்பத்தில் யான் இருந்த காலமுதல் எனக்காக அவர்கள் பட்டுள்ள கஷ்டங்களையும், கண்விழித்து ஈ, எறும்பு தீண்டாமல் பாதுகாத்த பேருபகாரத்துக்கு நான் அவர்களுக்கு எவ்விதமாகப் பிரதியுபகாரம் செய்தாலும் தீராதே! என் தேகத்திலுள்ள தோலை எடுத்துச் செருப்பாகத் தைத்து என்னருமைத் தாய் தந்தையர்க்கு

நான் அன்புடனளித்தாலும் என்னுடைய கடமை தீராதே! அந்தோ!

> "ஈன்று வளர்த்த தாய் தந்தைக் கெவரே கைம்மா றியற்றிடுவா
> ரான்ற மதலை நூறுவய தளவு மடிமைத் திறம்பூண்டு
> மூன்று புவனத் துள்ளபொருண் முற்றுமளித்து முறைமுறையே
> யேன்று வழிபா டியற்றிடினு மொருநாள் வளர்த்தற் கியையாதே."

என்றபடி என்னுடைய ஆயிசுகால முழுதும் நானவர்களுக்கு அடிமைத்தொண்டு புரிந்தாலும் அது அவர்கள் எனக்காகப்பட்ட ஒரு நாளைய சிரமத்திற்கும் ஈடாகமாட்டாதே! ஆகா! என்னுருயிர்த் தாயும்! தந்தையும் அருமையாகவும் வெகு அன்பாயும் 'அப்பா! குழந்தாய்!' என்று அழைக்குங் காலத்தில் என் மனம் பூரித்துப் புளகாங்கிதமடைந்து விம்முகின்றது அற்றுப்போய் அவர் குரலைக்கேட்கவும் ஏங்கித் தவிக்கும்படியாக விதி வாய்ந்துவிட்டதே! ஐயோ! என்னுடைய நிலைமையை எண்ணி அவர்கள் என்ன துடிக்கின்றார்களோ! என்ன செய்கிறார்களோ! ஆ! அவர்களுடைய முதிர்ந்த பருவ காலத்தில் என்னைப் பிரித்து அவர்களை வருத்துவதான கொடுமை அந்தப் பாதகியை விட்டு நீங்குமா? அடீ கொலைபாதகீ! உன்னுடைய மேனாட்டுப் படிப்பின் திமிரல்லவா நீ இக்காரியத்தைச் செய்யத் துணிந்ததுமல்லாமல் இந்த அபாண்டத்தை என் தலையின் மேலும் போடத் துணிந்தாய்? ஐயோ! அட பெண்பேயே! பிரம்ம ராக்ஷஸே! உன்னுடைய படிப்பின் ஆணவத்தைத் தீயவழியிலா செலவிடவேண்டும்? அடீ சண்டாளி! படிப்பைக்கொண்டு, நமது அறிவை விளக்கிக்கொள்வதற்காகப் பெரியார் நியமித்திருக்கிறார்களேயன்றி, இவ்விதத் தீயொழுக்கத்தில் துணிபு கொள்ளுவதற்காக நிர்மாணிக்கவில்லையே! எந்த ஜாதி பாஷையைக் கற்றாலும் அதனால் நன்மார்க்கத்தை யடைந்து நன்னெறியில் ஒழுகிப் பெற்றோரைத் தெய்வமாகக் கொண்டாடிப் பூஜிப்பதும், பர்த்தாவைக் கடவுளாகக் கொண்டாடுவதும், நற்கிருத்தியங்களைச் செய்வதும் மதியாகுமேயன்றி அளவற்றப் பணத்தைச் செலவிட்டுப் படித்து மனம்போனபடி திரிந்து பாழாய்ப் போவதோ அதனால் விளையும் மதியாகும்? ஐயோ! நாம் ஒவ்வொருவரும் உண்ணும் உணவு நமது தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் வலுவையும்

கொடுப்பதற்காகவோ அல்லது நாக்கின் ருசிக்கும், பொருள் செலவிட்டோம் என்ற பெருமைக்குமா? கல்வி என்பதை யும் நாம் நம்முடைய உணவாகக்கொண்டு அதனால் நமது அறி விற்கும் ஆத்மாவுக்கும் மனத்திற்கும் நல்ல உறுதியைப் பெற வேண்டும். அதைவிட்டுக் கேவலம் படிப்பின் கொழுப்பினால் துர்க் கிருத்தியங்களைச்செய்யவும் பெற்றோர், பெரியோர், கடவுள் முதலியவர்களை அறவே மறந்து பாபமூட்டையைச் சுமந்து அதை ஜாக்கிரதையாக வைத்து அநுபவிக்க நரகமென்னும் பெட்டி யைத் தயாரித்துக் கொள்ளவுமா கல்வி கற்பது? ஐயோ! அநி யாயமே! அடீ சண்டாளி! நீ டாக்டருக்குப் படித்துப் பாழாய்ப் போனாய்! உன்னுடைய கையினால் மனிதரின் பிணியைத் தீர்க்கப்படிப் பதாகத் தெரியவில்லை. படிப்பதெல்லாம் நடிப்புப்போலத் தோன்று கிறது. உன்னிடம் மனிதர்களின் நோயைத்தீர்க்கக் கூடிய இரக்கம், பச்சாதாபம் முதலிய குணங்களிருப்பதாகத் தெரியவில்லையே! மனத்தில் இரக்கம், பச்சாதாபம் முதலியன இருந்தாலன்றோ மருத்துவம் பலிக்கும்? கொலை செய்யவும் துணிந்துள்ள நீ நோயாளி களையும் உயிருடன் கொன்றுவிடுவாயே! அடீ சண்டாளி! மஹா சத்பாத்திரமாகிய என்னுடைய அத்தையின் கருப்பத்தில் நீ எவ் வாறு ஜனித்தாயடீ! ஆ! உன்னை நினைக்கும்போதே என்னுள்ளம் பற்றி எரிகின்றதே! ஆ! என்ன காலம்! என்ன அநியாயம்! என்ன கொடுமை! ஐயோ! நான் என்ன செய்வேன்? என்று அவர் களுடைய அருமையான வார்த்தையைக் கேட்பேன்? என்று அவர் களுடைய பாதபூஜை செய்வேன்? என்று அவர்களுக்கு அறுசுவை யுண்டி செய்து அன்பாயளிப்பேன்! ஆ! அப்பா! அம்மா! நான் என்ன பாவம் செய்தது இந்தக்கதியை அநுபவிக்கின்றேனே! ஐயோ! ஆதியில் நான் சிசுப்பருவத்தில் தங்களை ஏதேனும் வைதிருப் பேனோ! அல்லது அழுது தொந்தரைசெய்து தங்கள் மனம் நோவும்படிச் செய்திருப்பேனோ! என்னுடைய உபத்திரவத்தால் தாங்கள் எங்கும் வெளியில் புறப்படமாட்டாமல் சிறையிலடைப்பட் டதுபோல் இருந்து என்மேல் வருத்தங் கொண்டீர்களோ? அதன் பயனே என்னை இப்போது சிறையிலடைத்ததோ? தாங்கள் எனக்கு நன்மையை உரைக்க நானதை மறுத்துத் தங்களைச் சினந்து

பேசியிருப்பேனு! அதே எனக்கிப்போது மூண்டதோ! ஆ! நான் எவ்வகையிலும் என் புத்தியறிந்தபின் உங்களை மனதினுலும் வசையாக எண்ணியதில்லையே! என்னுடைய போன ஜென்மத்தின் கர்மபலனே இது? ஆ! நான் என்ன செய்வேன்? எவ்விதம் என்னுயிரை வைத்துக்கொண்டு வாழ்வேன்? ஆ! என்னருமைப் பெற்றோர்களே! பாவி என்னுல் தங்களுக்குற்ற இந்தத் துன்பத்தை நான் எவ்விதமாகத் தீர்ப்பேன்? என்ன செய்வேன்?'' என்று அவன் கண்ணீர்விட்டுக் கலங்கித் துடித்தான்.

ஏற்கெனவே தனது தந்தையின் கடிதத்தையும், பத்மவல்லியைக் காணவில்லை என்ற செய்தியையும், தாயாருக்குப்பயித்தியம் பிடித்துவிட்டதென்பதையும் கேட்ட செல்லப்பா சற்று உறுதியாகஇருந்தும் தாயின் உதரத்தில் ஊறிய பாசம் அவனைச் சற்று பாசியைப்போல் மறைக்க ஆரம்பித்தது. பின் அவன் அதே நினைவாக விருந்து கலங்கி நொந்தான். அத்தருணம் அழுகையும் காதில் விழவே, அவன் மனத்தில் ஆணியை அடிப்பதுபோலவும், ஈட்டிகளைப் பாய்ச்சுவது போலவும் தான் தனது பெற்றோரை வைததெல்லாம் நினைவிற்கு வந்து வருத்தின. அதனுல் அவனுடைய மனம் முற்றும் மாறுதலடைந்து கொண்டே வந்து,வர வர உருகிக் கரைந்தது. கண்ணீர் பெருகி ஆருக ஓடத் தலைப்பட்டது. அவனுடைய மனமானது கொதிக்கும் பாகுபோல் உருகிக் கொதித்தது. அவன் அப்போது நிலைதவறி இருப்பவன்போலக் காணப்பட்டான். பக்கத்துச் சிறையில் அவன் புலம்பப் புலம்பச் செல்லப்பா தன்னை மறந்து தாய் தந்தையரின் நினைவிலேயே இருந்தான். இப்போது அவனுடைய நிலைமை காண்பதற்கு வெகு பரிதாபகரமாயிருக்கின்றது. "ஐயோ! அம்மா! அப்பா! உங்களுடைய பெருமையை அறியாத பாவிபாய் விட்டேனே! ஆ! பத்மா! பத்மா! என்னருமை பத்மா! உன்னை அநியாயம் செய்த சண்டாளன் நானுகவே ஆய்விட்டேனே! என் ஆருயிர் பத்மா! ஐயோ! நான் சொல்லியபடி உன்னைக் கொன்றிருப்பானேயானுல் நான் என் செய்வேன், என் குடல் நடுங்குகின்றதே! ஐயோ! பாவி என்னுலன்றே என் குடும்பத்திற்கே அநர்த்தம் வந்துவிட்டது. ஆ! அந்த மகானுபாவன் யாரோ தெரியவில்லையே! தமது தாய் தந்

தையைக் குறித்து மிக்க வருத்தமடைகின்றாரே! 'அடீ சண்டாளி!' என்பதைப் பார்த்தால் இவருக்கு வந்த தீங்கும் நமக்கு வந்தது போல் ஒரு பெண்பிள்ளையால் ஏற்பட்டது போலவே தோன்று கிறதே! ஐயோ! என்ன அநியாயம்! யாரோ எந்தச் சிசுவின் கழுத்தையோ முறித்துக் கொன்றுவிட்டு இவர்மீது பழி வைத்துவிட்டார்கள் போலத் தோற்றுகின்றதே! ஆகா! தமது பெற்றோரிடத்தில் இவர் கொண்டுள்ள பிரேமையும், பயபக்தியும், அவர்களுடைய சிறப்பைப்பற்றிப் பெரியார் பாடியுள்ள செய்யுட்களை இவர் உருக்கமாகப் பாடும்போதும் என்னுடைய உள்ளம் என்னையறியாமலே கரைந்துருகி மாறுபாடடைகின்றதே! தான் தமது ஆயுள்கால முற்றும் தமது பெற்றோருக்கு அடிமைத்தொண்டு பூண்டாலும் பெற்றோர் தமக்குப்பட்டுள்ள ஒரு நாளைய சிரமத்திற்கு ஈடாக மாட்டாது என்று சற்றுமுன் அவர் பாடிய பாடலின் இன்சுவையானது என்னை அடியோடு மாற்றுகின்றதே! ஆகா! என்ன மடத்தனம் செய்துவிட்டேன்? ஐயோ! எனதருமைத் தாய் தந்தையர்க்கு நான் பலவிதத்திலும் அபராதியாய் விட்டேனே! என்னால் அவர்கள் ஓராணுவேனும் சுகப்படாமல் உயிர் துறக்கும்படியான நிலைமைக்கும் வந்துவிட்டார்களே! ஆ! பாழும் புது நாகரிகப் பேய்க்கு அடிமையாகியதன் பயனன்றோ, நான் டீபார்ட்டி என்னும் நூதன விருந்திற்குச் சென்றதும் அதனால் இத்தனை தீங்குகள் நேர்ந்ததும்? முன்பு ஒருநாள் பத்மவல்லி நமக்கு எடுத்துரைத்த நீதிகளையெல்லாம் சற்றும் சட்டை செய்யாமல் காலால் அவளை உதைத்துத் தள்ளிய பாதகனல்லவா நான்? ஐயோ! பெண்புத்தி பின்புத்தி என்பார்கள். என் புத்தியே பின்புத்தியாய் விட்டதே! காந்தாமணியை நான் கொலை செய்யாதிருக்கும்போதே அக்குற்றம் என்மேல் வந்து கண்டவர் நகைக்கும்படியாய் ஆய்விட்டதே! ஐயோ! என்னருமை பத்மவல்லியை, கொலை செய்யும்படி கூறிய அப்பாதகம் என்னை விட்டகலுமா? ஐயயோ! பிறரறியாவிடினும் எனது மனச்சாக்ஷியும் கடவுளும் அறிந்த கொலையல்லவா இது? என் கையினால் செய்ததைவிட என் வாய் மொழியினால் சொல்லி அவள் உயிரை வாங்கும்படியாகக் கூறிவிட்டேனே! என் தந்தையின் உயிரை அவர் தாமே மாய்த்துக்கொள்ளும்

படியாக நடத்தையில் செய்து காட்டிவிட்டேனே! ஆ! என்னுடைய மனம் தற்போது தாமரையிலையின் நீர்த்துளிபோலத் தத்தளிக்கின்றதே! என்ன செய்வேன்! ஐயோ! பத்மம்! அன்று உன்னை உதைத்துத் தள்ளிவந்ததன் பலனாகத்தான் எனக்குச் சம்பவித்த இடர்களெல்லாம் என்று இப்போது என் மனம் உறுதி கொள்ளுகின்றது. சாக்ஷாத் ஸ்ரீமகா லக்ஷ்மிபோன்ற உன்னைப் பாவியாகிய நான் உதைத்ததற்குப் பலனை வேண்டியமட்டும் அனுபவிக்கின்றேன். என் செல்வமே! உன்னை உயிருடன் வைத்திருக்கின்றானோ, கொன்றுவிட்டானோ தெரியவில்லையே! பாவி யான் அன்று ஜாமீனில் விடுபட்டபோதே என் இல்லம் சென்றிருந்தால் இக்கொடுமைக்காளாய் இருக்கமாட்டேனல்லவா! ஆ! "கெடுவான் கேடு நினைப்பான்" என்றதுபோல் எனக்கு இத்தகைய கெட்ட காலம் வருவதற்காகத் தானோ நான் எனக்கு வலியவந்த இடர்களுக்கெல்லாம் என் பெற்றோரே காரணமென்று கூறிவிட்டேன்? உண்மையில் எனது பெற்றோர்கள் அவ்விதம் செய்திருப்பார்களேயானால் என் தந்தை இவ்விதம் மனமுடைந்து கடிதமெழுதி வைத்துவிட்டு இறக்கத் துணிவாரோ? என் தாயாருக்கு என்னினைவாகவே பயித்தியம் பிடித்துவிடுமா? பத்மாவைக் காணவில்லை; அதனால் என் தந்தை உயிர் துறக்கச் சென்றிருப்பார் என்று கூறவும் நியாயமில்லை. அவள் காணாமல் போனதை அவர் அறியவேமாட்டார். அவளுக்கு விவாகம் செய்விக்கும் படிக்கும், எனக்குப் புத்தி புகட்டும்படிக்கும் வெகு விசனத்துடன் கடிதம் எழுதப்பட்டிருக்கிறதே. இவற்றையெல்லாம் கவனிக்குங்கால் அவர்கள் ஒரு பாபமும் அறியாதவர்களென்றே தோன்றுகின்றது. ஐயோ! நான் உண்மையை அறியாமல் ஆத்திரத்தில் எத்தனை பாவங்களைச் செய்துவிட்டேன்? ஆ! அவற்றையெல்லாம் நான் எவ்விதம் தீர்ப்பேன்? என்னை என்னவோ செய்கின்றதே!" என்று தனக்குத் தானே வாய்விட்டுக் கூறிக் கதறுகின்றான். அவனுக்குக் கண்களில் நீர் ஆறாய்ப்பெருகுகின்றது. அவனுடைய மனமுற்றும் அவனது ஈன்றோர் மீதும் பத்மவல்லி, காந்தாமணி இவர்களின் மீதும் சென்று லயித்துப் போயிற்று. அவன் மாறி மாறி அந்த நால்வரையும் கூறிப் புலம்பியவாறு அப்படியே நித்திரையிலாழ்ந்தான்.

மறுநாள் உதயமாய் வெகுநேரங் கழித்தே அவன் கண் விழித்தான். அவன் இரவு முற்றும் பத்மவல்லியுடன் சந்தோஷமாய்ப்பேசுவது போலவும், தாய் தந்தையர்கள் பக்கத்தில் மலர்ந்த முகத்துடன் உட்கார்ந்து சம்பாஷிப்பது போலவும், தான் செய்த அக்ரமத்திற்கு மன்னிப்பு கேட்பது போலவும் கனவு கண்டு மிகுந்த களிப்புடனிருந்தான். கண் விழித்ததும் தான் கண்டவையெல்லாம் கனவு என்பதையறிந்து மிகுந்த துக்கத்தை அடைந்து "அத்தகைய நாள் மீண்டும் வருமோ ?" என்று எண்ணி ஏக்கமுற்று உட்கார்ந்திருந்தான். அத்தருணம் அந்தஅறைக் கருகாமையில் 'ஆ! ஆ! என் செல்லப்பா! என் செல்லப்பா! என் கண்மணீ!' என்று ஒரு பெரிய கூக்குரலுடன் யாரோ ஓடிவருவதுபோல் சத்தம் கேட்டது. செல்லப்பா திடுக்கிட்டுத் தன்னை யார் அழைக்கின்றார்கள் பார்ப்போம் என்று வியப்புடன் கம்பிக் கதவருகில் வந்து நின்றான். அவன் விசனத்தால் மெலிந்து மிகுந்த துக்கத்தையடைந்ததனால் துரும்பென இளைத்து வாடி அடையாளம் தெரியாமல் மாறிவிட்டான். அப்பொழுது அவன் ஒரு பயித்தியக்காரன் போலவும் இருந்தான்.

அச்சமயம் அந்தச் சிறையின் பக்கமாக லக்ஷ்மியம்மாள் ஓடிவருகிறாள். அவளை ஒருபுறம் இந்திராணியும் ஒருபுறம் வேலைக்காரியும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு வருகிறார்கள். அந்தோ! லக்ஷ்மியம்மாளின் கேசமெல்லாம் தாறுமாறாக ஜடை திரிபட்டதுபோல் சிக்குண்டு கிடக்கின்றது. தேகமுற்றும் அழுக்குப் படிந்து கிடக்கின்றது. இடையிலுள்ள ஆடையானது பழைய ஆடையாகவும் கந்தலாகவும் கிடக்கின்றது. சுமார் 50000 ரூபாய் நகைகளை அணிந்து கொண்டிருக்குமவள் அன்று ஏதோ சில தங்க நாணய நகைகளே தாறுமாறாக அணிந்து கொண்டிருந்தாள். அவளுடைய பால் வடிந்த முகமானது கண்ணீர் வழிந்து துயரம் மேலிட்டுக் காணப்பட்டது. அந்தம்மாள் முகத்தில் குங்குமப் பொட்டுதான் பிரகாசிக்கின்றதே யன்றி மற்றவையெல்லாம் உருமாறிக் கிடக்கின்றன. அத்தகைய கோலத்துடன் அந்தம்மாள் அவர்களுடைய கட்டுக்கு அடங்காமல் ஆவேசங் கொண்டவள்போல் ஓடி வருகின்றாள். இவர்களுக்கு முன்னால் ஜெயிலதிகாரி வந்து சிறைச்சாலைக் கதவைத் திறந்துவிட்டார். லக்ஷ்மியம்மாள் 'ஆ! ஆ'

என்று அலறியவாறு ஓடிவந்து தமதிருகரத்தையும் விரித்துக் கொண்டு "ஆ! என் கண்ணனை செல்லப்பா!" என்று அலறியவாறு செல்லப்பாவை இறுகத் தழுவிக் கட்டியணைத்துக் கொண்டாள்.

செல்லப்பாவிற்குச்சற்றும் தான் எதிர்பாராதவிதமாகத் தனது தாயார் மிகுந்த பரிதாபப்படத் தக்கவிதமான கோலத்தோடும் துயரத்துடனும் வந்து தன்னைக் கட்டியணைத்ததும் அவனுடைய துயரமுற்றும் இன்னுமதிகரித்துவிட்டது. அவன் தன்னையும், அந்த இடத்தையும், அங்குள்ள மனிதர்களையும் மறந்து, "ஆ! என்னருமை அன்னையே!" என்று ஒரு கர்ஜனை செய்தவாறு ஆலிங்கனத்தினின்றும் விலகித் தாயின் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து இருபாதங்களையும் தனது முகத்தில் வைத்துக்கொண்டு கோவெனக் கதறி அழுதான். இந்த கோரமான காட்சியைக் கண்ட ஏனையோரும் கண்ணீரைச் சொரிகின்றார்கள்.

சித்த ஸ்வாதீனமற்ற லக்ஷ்மியம்மாள் தமது புதல்வனைத் தூக்கி எடுக்கத் தெரியாமல் "என் கண்ணே! செல்லப்பா! செல்லப்பா! பத்மவல்லி!........பத்மவல்லி!........அப்பா!.......சுந்தரம்!........ சுந்தரம்........இந்திராணீ!........நடராஜா!.......செல்லப்பா! எங்கே சென்றாய்? என் கண்ணே! நான் யார் தெரியுமா! ஐகோர்ட்டு மகாராணியடா என் செல்லப்பா! உன்னை இப்போது பார்த்தேனே எங்கே சென்றுவிட்டாய்? பத்மா! அண்ணாவை நமஸ்கரியம்மா!" என்று தாறுமாறாகப் பேசுவதைக் கேட்ட செல்லப்பா எழுந்து தனது தாயைத் தழுவியணைத்துக் கண்ணீர் பெருக்கியவண்ணம், "அம்மா! அ....ம்....மா!........ஐ....யோ!........ச....ண்....டா....ள....ன் நா....ன்.......எ....ன்...ன.......பா....ப....ம்......செ...ய்...தோ இத்தகைய.....கோ....ல....த்....து...ட....ன்......த...ங்...க...ளை...க்.... கா....ணும்....ப....டி....நே....ர்....ந்....த....து.....ஆ!.....அ....ம்....மா.... அ....ம்....மா!........கொ....டு...ம்...பா....வி........எ.....ன்...ஞ....ல்.... கு....ல...த்...தி...ற்...கே......கொ...டு...மை........வ...ந்து....விட்டா....தே!...... ஆ!.......எ....ன்...ஞ...ரு...யி...ர்.......தா....யே....ய! என்....... மூ....ளை.......சி....த...று....கி....ன்...ற....தே!........அ....ப்பா!.........ப...த்...ம....வ...ல்...லி!........க...ண்....ம...ணீ...... எ...ங்...கே.......ஆ!......என்.........ப....த்....ம....ம்!.........ப...த்

ம...ம்!......ஐ...யோ!... ...எ...ன்....ன......செ....ய்...வே...ன்..." என்று திணறித் திணறிப் புலம்பியவாறு திடீரென்று மூர்ச்சையாய் விழுந்துவிட்டான். இதைக் கண்ட அங்குள்ளவர்களெல்லாம் என்னே இது வென்று துடி துடிக்கின்றார்கள்.

லக்ஷ்மியம்மாள் செல்லப்பா விழுந்ததைக் கண்டு பெரிய நகைபுரிந்தவாறு தானும் கீழே உட்கார்ந்து "என் செல்வமே! ஏனடா நித்திரை வருகின்றதா கண்ணே! இதோ என் மடியில் படுத்துக்கொள்" என்று செல்லப்பாவின் தலையைத் தன் மடியில் வைத்துகொண்டு,

என் கண்மணியே! செல்வ துரையே!
விண்மணியே! வியன்சுவையே!
நன்மணியே! நவமணியே! கண்வளராய் தாலேலலோ.

என்று பாடக் கிளம்பி விட்டாள். இதைக் கண்ட எல்லோரும் துக்கம் தாங்கமாட்டாமல் கலங்கியவாறு செல்லப்பாவை அவள் மடியிலிருந்து அப்புறப்படுத்தி அவனது மூர்ச்சையைத் தெளிவித்தார்கள். இந்திராணியும் வேலைக்காரியும் லக்ஷ்மியம்மாளுக்கு ஏதோ போக்குவார்த்தைகள் கூறிப் பிடித்துக்கொண்டார்கள். இவர்கள் பிடிப்பிலிருந்து திமிறிக்கொண்ட லக்ஷ்மியம்மாள் செல்லப்பாவை யிழுத்து மடியிற்போட்டுக்கொண்டு, "கண்ணே! கதை சொன்னால் தான் சாப்பிடுவாயோ? சரி; சொல்லுகிறேன் கேள். ஒரு ஊரில் ஒரு ராஜனிருந்தானும். உம்; வாயைத் திற" என்று கூறியவாறு செல்லப்பாவின் வாயைத் திறக்கப் பலமாக முயன்றாள்.

உடனே அங்கிருந்தவர்கள் 'ஐயோ! சதா செல்லப்பா என்று பிதற்றுவதால் அவனைக் காண்பித்தால் பயித்தியம் தீரும் என்று எண்ணியதும் தற்போது பலிக்கவில்லையே!" என்று கூறியவாறு பலவந்தமாகச்செல்லப்பாவை விலக்கி விட்டு லக்ஷ்மியம்மாளைப் பிடித்துக்கொண்டார்கள்.

நாம் இங்கிருந்து நமது சுந்தரனைக் கவனிப்போம். தனது தந்தையிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு பத்மவல்லியைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவலினால் தூண்டப்பட்டவனாய் இங்கு ஓடிவந்த அவன், இத்தகைய விபரீதமான செய்தியைக் கேட்ட

தும் வேரற்ற மரம்போல் விழுந்துவிட்டான்; பிறகு சற்று நேரங் கழிந்து எழுந்தான். இதற்குள் குமாஸ்தா, நடராஜன் இருவரும் இவனிடம் வந்து கூடி இவனுக்கு அங்கு நடந்த சகல வரலாறுகளையும் விஸ்தாரமாகக் கூறி, முதலியார் எழுதிவைத்த கடிதத்தைக் காட்டினார்கள். ஆகா! சுந்தரனின் மனம் அப்பொழுது எவ்வாறிருக்கும்? அவன் ஊருக்குச் செல்வதற்கு முன்னால் பத்மவல்லியோடு பேசிய காலத்தில் உண்டான இன்பத்திற்கும் இப்போது அடைந்துள்ள துன்பத்திற்கும் ஓரெல்லையுண்டோ? அன்று கதவு தாளிடப்பட்டதற்கேற்ப காரியமும் நடந்துவிட்டதே! ஆ! அவன் உள்ளே இருந்த சமயம் கதவு தாளிடப்பெற்றிருந்ததால் அந்த ரகஸியத்தை அவன் யாருடன் தெரிவிப்பான்? அதைத் தெரிவித்தால் அவனைப் பிறர் என்ன மதிப்பார்கள்? இந்த இடரில் அகப்பட்ட அவன் "ஆ! தேள் கொட்டியகதையாய் விட்டதே! ஐயோ! என் கண்மணீ! பத்மவல்லீ! பத்மவல்லி! என்றும் அழியாத சுகத்தை உன்னாலடைய எண்ணியஎன்னை அடியோடு மடியவைத்துவிட்டாயே! கிளியே!" என்று தனக்குள் புலம்பினான்; அலற்றினான்; தனது துரதிர்ஷ்டமே இவ்விதம் இடர்களாக வந்து மூண்டதென்றெண்ணித் துடித்தான்; லக்ஷ்மியம்மாளுடைய நிலைமையைக் கண்டு மிகுந்த வருத்தமும் பரிதாபமும் அடைந்து அவளுக்குத் தன்னால் கூடிய சிகிச்சைகளையும் செய்தான்; காந்தாமணியின் சவம் இங்குக் கிடந்ததென்று கேட்டு மிகுந்த வியப்பும் திகைப்புமடைந்தான்; எப்பாடு பட்டேனும் இந்த வீட்டிற்கு வந்துள்ள ஆபத்துகளை நீக்க முயற்சிக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு நமது நிபுணர் ராஜாராம் நாயுடுவைக் கண்டு அவரிடம் பத்மவல்லியையும், செல்லப்பா வைப்பற்றிய உண்மையைக் கண்டு பிடிக்கும் படிக்கு வெகுவாய்க் கேட்டுக்கொண்டான். அதற்கு உதவிக்குத் தன்னை பழைத்தாலும் வருவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தான்; வருவதாகத் தெரிவித்த தன் தந்தை வந்து வீணே திரும்பாமலிருக்கக் கருதி, வரவேண்டாமென்று அவருக்குக் கடிதம் எழுதிவிட்டான்; அவன் பத்மவல்லியின் நினைவிலேயே சதா உருகுகிறான். அவனுக்கு ஊணுறக்கமும் ஒழிந்தன. வேலையில் வலிவும் குறைந்தது. அவன் உள்ளத்தில்

ஏக்கமே குடிகொண்டமையால் மெலிந்து துரும்பாய் இளைத்துவிட்டான். முதலியாரின் உத்தரவின்படி குமாஸ்தா, சுந்தரனை அவ்விடத்திலேயே இருக்கும்படி பலாத்காரம் செய்தார். லக்ஷ்மியம்மாளின் சிகிச்சைக்காகவும் சுந்தரன் அவ்விடத்திலேயே இருப்பதாக ஒப்புக்கொண்டான்; ஒரு வாரகாலமாக அவன் பத்மவல்லியைக் கண்டுபிடிக்க முயற்சித்தும் ஒருவித புலனும் ஏற்படாமல் போகவே, இன்னும் அதிக கிலேசத்தையடைந்து துடித்தான். லக்ஷ்மியம்மாள் சதா "செல்லப்பா! செல்லப்பா! பத்மம்!" என்று பிதற்றுவதால் செல்லப்பாவிடம் அழைத்துவந்து காட்டினால் சற்று தெளிவடையுமோ என்று யோசித்து ஜெயிலதிகாரிகளிடம் தெரிவித்து உத்தரவு பெற்றுக்கொண்டு அவனை இங்கு அழைத்து வந்தார்கள். செல்லப்பா பெற்றோர்களைப் பகைத்துக்கொண்டு திட்டுவதாயும் இந்தக் காரியங்களை அவர்களே செய்துவிட்டதாகக் கூறுவதாகவும் குமாஸ்தா தெரிவித்தாராதலால், "இவர்களைக் கண்டதும் அவன் என்ன சொல்வானோ! ஏது செய்வானோ!" என்று எல்லோரும் எண்ணிவந்ததற்கு மாறாகச் செல்லப்பா தன் தாயைக்கட்டி அணைத்து வணங்கிச் சோகத்தால் மூர்ச்சையாய் விட்டதைக் கண்டு வியந்தார்கள். மூர்ச்சையாய் விழுந்த செல்லப்பாவிடம் சுந்தரன் ஓடிவந்து வாயில் தீர்த்தம் வார்த்து, விசிறி, முகத்தில் ஜலம் தெளித்து மூர்ச்சை தெளியவைத்து, எழுப்பி உட்காரவைத்தான். செல்லப்பா எழுந்ததும் மீண்டும் அங்குள்ள அனைவரையும் நோக்கிப் பொதுவாக வணங்கி, "ஐயோ! நான் என்ன பாபத்தைச் செய்து பிறந்தேனோ! அடாத மொழியும் படாத பழியும் கேட்டுச் சிறையிலிருக்கின்றேன். ஆ! என் குடிக்கே நான் பெரிய கோடரிக்காம்பாகப் பிறந்துவிட்டேனே! அம்மா! அம்மா! ஐயோ! தாங்கள் இருந்த இருப்பெல்லாம் பொய்யாய் இப்போது இக்கோலத்தில் தங்களைக் காண்பதுதான் பாவி என்னால் மெய்யாய் விட்டதே! அம்மா! தாங்களோ இவ்விதம் அலங்கோலமாக நிற்பது? தங்களையா இருவர் பிடித்துக் கட்டிக் காப்பது? ஐயோ! பாவி என்னால் என்னரிய தந்தையின் ஆவிக்கே ஹானி வந்துவிட்டதே! ஆ! பத்மா! பத்மா! அம்மா! என்னைப்பற்றி வருந்தாதீர்கள். சண்டாளன் என்னைத் தாக்ஷண்யமின்றித் தூக்கிலிட்டுக் கொல்லட்டும்.



182838.

என்னுடைய உயிரைக் கூடிய சீக்கிரத்தில் மாய்க்கட்டும். நான் மறு ஜென்மத்திலேனும் உங்கள் வயிற்றில் பிறந்து என்னுடைய ரணத்தைத் தீர்க்கும் அருள் எனக்குண்டாகுமோ? என் தாயே! நான் தங்களிடம் நடந்துகொண்டதைக் கூறவும் நா எழவில்லையே! அம்மா! என் மனத்தினுலும் நினைக்காத கொடிய காரியத்தை நானே செய்ததாக வந்த பழிக்குத் தங்களை நான் பகைத்துக் கொண்டு விலகியதே காரணமாகும். இந்தச் சிறைவாசம் செய்யும் குற்றத்தைச் சிறிதும் நான் கடவுளறிய அறியாதவன். நான் நிரபராதி என்பதைக் கடவுள் ஒருவரே அறிவார்" என்று அவன் கூறிப் புலம்பிக்கொண்டே வருகையில் லக்ஷ்மியம்மாள் அங்கு நின்ற ஜெயிலதிகாரியை நோக்கி, "ஐயா! நான் விக்டோரியா மகாராணி என்பதை நீரறியமாட்டீரா? என் குழந்தையை வெளியில் விடும் என் பத்மவல்லியை வெளியில் அனுப்பும். அவனை நானழைத்துச் செல்லத்தான் வந்தேன். எங்கே அவனை அனுப்பும். செல்லப்பா! என் கண்மணீ! செல்லப்பா! செல்லப்பா! வாடா என் கண்ணே!" என்று செல்லப்பாவை மார்போடு தழுவி யணைத்துக்கொண்டு "அப்பா உன்னை யழைக்கின்ருர்; வாடா கண்ணே!" என்று கூறிய வாறு அவனை இழுத்துக்கொண்டு வரத் தொடங்கினுள். இதற்குள் எல்லோரும் அவளைத் தடுத்து அப்புறப்படுத்தினுர்கள். ஜெயிலதிகாரியும் "நேரமாய்விட்டது; எல்லோரும் வெளியே செல்லுங்கள்" என்று கூறினுர். அங்குள்ளவர்களைக் கண்டு கோவென்று கதறிப்புலம்புகின்ற செல்லப்பாவைப் பார்த்து எல்லோரும் வெளியே செல்வதற்கு மனமில்லாமல் கண்ணீர் விட்டுக்கலங்கிய வாறு வெளியில் செல்லலாயினர், செல்லும்போது குமாஸ்தா அருகில் சென்று, "அப்பா!செல்லப்பா! இவருக்குத் தான் நமது பத்மத்தை விவாகம் செய்விக்கும்படியாக அப்பா எழுதியிருப்பது. இவருடைய பெருமையைக் கூறுவதற்குப் பொழுதுதானில்லை. சுந்தரம் என்ற பெயருடையவர் இவர்தான்" என்ருர்.

செல்லப்பா சுந்தரனைப் பார்த்ததும் அவனுடைய அழகையும், அங்கு தனக்கு மூர்ச்சை தெளியவைத்தவன் இவன்தானென்றதையும், அவனுடைய காருண்ய குணத்தையும் நோக்குகையில் அவன் மனம் பத்மாவை எண்ணியது, "ஆ! ஐயோ! பாதகத்திலும்

பெரும்பாதகம் செய்துவிட்டோமே! சகல அம்சங்களும் அழகும் வாய்ந்த பத்மாவிற்கு ஏற்ற புருஷன் எனது நண்பன் தான் என்று அடாவடியாகக் கூறி அன்று அவளை உதைத்துத் தள்ளியதுமல்லாமல் அவளுடைய உயிருக்கே உலைவைத்துவிட்டேனே! இனி அவளை உயிரோடு காண்பேனு? ஆ!...என் செய்வேன்?" என்றுகூறி மீண்டும் விழுந்துவிட்டான். சுந்தரனும் குமாஸ்தாவும், "இதென்ன! இவன் இப்படி திடீரென்று மீண்டும் விழுந்துவிட்டானே" என்று வியந்து பிரமித்தனர். மற்றவர்கள் லக்ஷ்மியம்மாளை வண்டியில் ஏற்றி வீட்டிற்கு அழைத்துச் சென்றுர்கள்.

---

## 14-வது அதிகாரம்

### உன்மத்த வீரன்; தந்திரச் செய்கை

நமது துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடுகாரு பதமவல்லி பங்களாவிலிருந்து காணுமற் போனபின்பு அவளுடைய தாய்க்குத் தேறுதல் கூறிவிட்டு வீடு சென்றுர். கடிதத்தில் தன்னை மீன் தின்னுமலிருந்தால் காணலாம் என்று வரைந்திருந்தமையால், முதலியாரைக் கடலில் தேடும்படியாகச் சில செம்படவர்களுக்குப் பணம் கொடுத்து நியமித்தார்கள். ஆறுகள், குளங்கள், ஏரிகள் முதலிய இடங்களிலும் அவ்வாறே வலை முதலியன போட்டுத் தேடும்படி ஆட்களை நியமித்தார்கள். பிறகு ஒருவாரம் சென்றது. அப்போதும் யாதொரு தகவலும் முதலியாரைப்பற்றித் தெரியவில்லை.

நாயுடுகாரு அன்று முதல் தாம் எவ்விதமேனும் முயற்சித்து உண்மைக் கொலையாளியையும் பத்மவல்லியையும் கண்டு பிடிக்க வேண்டுமென்று எண்ணிச் சபதம் செய்துகொண்டார். அவருடைய காரியத்தை எந்தவிதமாக ஆரம்பிக்கலாம் என்று தீர்க்கமாக ஆலோசித்தார்; "நாம் சாதாரணமாகத் திடீர் திடீர் என்று எல்லோருடைய வீட்டிற்குள்ளும் போவதற்கு முடியாத காரியம். ஆகையால் நாம் வாயில்லாத ஊமையாக நடிக்கவேண்டும். அதோடு பயித்தியம்போலும் நடித்தால்தான் ஒருவரும் சந்தேகிக்காத வழியில் வேலை செய்யலாம்" என்று நிச்சயித்துக்கொண்டு உடனே எழுந்து,

தம்மிடம் தயாராக வைத்துக்கொண்டிருந்த நரைத்த மயிர் ஜடையை எடுத்துக் கட்டிக்கொண்டார்; தாடி, மீசையையும் அவ்விதமே கட்டிக் கொண்டார்; கிழிந்த வஸ்திரங்களைத் தாறுமாருக உடுத்துக்கொண்டு ஒரு சுமை சந்தத்துணிகளைச் சேர்த்து அதனுள் கொட்டாங்கிச்சி தகரக்கோவளை, குச்சிகள், காகிதங்கள், உடைந்துபோன பானை யோடுகள், உடைந்துபோன புட்டிகள், உடைந்த பீங்கான் துண்டு கள், கிழிந்த இலைகள் இவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டார். தமக்கு முக்கியமாய்த் தேவையுள்ள சாமான்களை ஒரு பையில் வைத்து அதைத் தமது இடுப்பிலேயே இறுகக் கட்டிக்கொண்டார். முகத்தில் ஒரு புறம் குங்குமம், மற்றொருபுறம் விபூதி, வேறொருபுறம் நாமம், சந்தணப் பொட்டு முதலியவற்றை இட்டுக்கொண்டார். கழுத்தில் பாலாடை, கிளிஞ்சல் முதலியவை கோர்த்து மாலையாகப் போட்டுக்கொண் டார்; கையில் கரு வளையல்களை அடுக்கிக்கொண்டார்; தலையில் வைக்கோலைத் திரித்துக் கட்டிக்கொண்டார்; தோள்மீது சில கந்தைகளை வாரிப் போட்டுக்கொண்டார்; கையில் ஒரு தடி எடுத் துக்கொண்டார்; காலில் செருப்பைப் போட்டுக்கொண்டு பித்த ளைக்காப்பையும் மாட்டிக்கொண்டார். இத்தனை கோலங்கள் செய்து கொண்டு தம்மைத் தமது ஆட்களின் மூலமாகவே புகைப்படம் பிடிக்கச்செய்தார். அன்று இரவு தான் வெளிக்கிளம்புவதாகத் தீர்மானித்து அதற்கு வேண்டியபடி செய்துகொண்டார். தமது கையாட்களில் சிலரைத் தாம் எவ்விடத்திற்கு வரும்படியாக டெலிபோனில் சொன்னாலும் அவ்வாறு தம்மை வந்து சந்திக்கும்படி திட்டம் செய்தார்; இன்னும் சிலரைத் தமக்கு முகமறியாத அன்னியர்போலவும், பயித்தியக்காரரிடம் வேடிக்கை பார்ப்பவர்கள் போலவும், கூடவே தொடரும்படியாயும் சொல்லி விட்டு அன்று இரவு வீட்டைவிட்டு வெளியில் வந்து, சர் சவலை ராமசாமி முதலியார் சத்திரத்தில் வந்து தங்கினர்.

அன்று இரவு முற்றும் அவ்விடத்தில் அவருக்கு நித்திரை வரவேயில்லை; தாம் எடுத்த காரியத்தை முடிப்பதிலேயே கவன மாக விருந்தார் எனினும், தமது வேடத்திற்குச் சரியாகத்தான்

நடத்தித் தீரவேண்டியதை மறக்காமல் செய்யத் தொடங்கி, "ஓ" வென்று ஒரு கூச்சலிட்டுக் கத்துவார். உடனே பே! பே!....ப்ரு! ப்ரு! என்று கத்துவார். ஹீ! ஹீ! ஹீ! ஹீ! என்று பெருத்தச் சத்தமிட்டுச் சிரிப்பார். சற்றுநேரம் பேசாமல் மூலையிலே உட்கார்ந் திருப்பார்; மீண்டும் கத்துவார். இவ்வாறு இவர் செய்வதைக் கண்ட அங்குள்ளவர்களில் சிலர் இவரிடம் நெருங்கி வேடிக்கைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்தார்கள். அவர்களுக்குச் சரியாக இவ ரும் நடித்து இரவைக் கடத்தினர். விடிந்தபிறகு அங்கே தங்கி யிருந்தவர்களில் ஒருவர் இவருக்குச் சில தின்பண்டங்களைக் கொடுத் தார். அதை வாங்கிய நாயுடு ஒரு துண்டம் வாயில் போட்டுக் கொள்வது, ஒரு துண்டத்தைப் பக்கத்தில் வீசியெறிவது, ஓட் டின்மேல் போடுவது, அதைக் கையில் வைத்துக்கொண்டு பார்த் துச் சிரிப்பது, அழுவது, உடனே அதைப் பந்தடிப்பதுபோல் ஆடுவது இவ்விதமெல்லாம் செய்துகொண்டே அவ்விடத்தைவிட் டுப் புறப்பட்டு அடையாற்றை நோக்கி நடக்கலானர். அடை யாற்றையடைந்து அங்குள்ள காந்தாமணியின் சிநேகிதர்களைக் காண்பதற்காக அவர்களில் ஒருவர் வீட்டிற்குப் போய் வாசல் திண்ணையில் உட்கார்ந்தார். தன் கையில் தேன்மெழுக்கை அடை யாகத் தட்டி வைத்துக்கொண்டு அதோடு விளையாடிக்கொண்டிருந் தார்.

அப்போது வீதியில் ஒரு வண்டி வந்து நின்றது. அதிலி ருந்து ஒரு வாலிபன் இறங்கி உள்ளே வந்தான். திண்ணையின் மேல் உட்கார்ந்திருந்த பைத்தியத்தைக் கண்டதும் அவன் நகைத்த படி சற்று தூரத்தில் நின்றுகொண்டு உற்றுப் பார்த்தான். இவனைக் கண்ட நாயுடு முகத்தையும் வாயையும் ஆயிரம் கோண லாக வைத்துக்கொண்டு, பும்! பும்! பும்! பே! பே! என்றார். இதைக் கண்ட அவன் மீண்டும் நகைத்தவாறே அருகில் வந்து, "நீ யாரு" என்றான். இதைக் கேட்ட நாயுடு எதுவும் பதில் கூறமல் அவனை விரைக்க விரைக்கப் பார்த்தபடியே 'இவன் வீட்டு மனி தனே, அயல் மனிதனே தெரியவில்லையே' என்று தியங்கினர். இதற் குள் அந்த மனிதன் உரத்த குரலில் "நீ யார்?" என்றான். அப் போது உள்ளிருந்து ஒரு மாது வந்து "என்னடா சாமி விளையாட்டு?

உள்ளே வாடா! காலேஜுக்கு நேரமாயிற்று. எழுந்து வாடா!'' என்ருள். இதைக் கேட்ட நாயுடு "அவள் வீட்டுப் பையந்தான் இவன்; இவன்பெயர் எம். ஜி. சாமி என்று வண்டியோட்டி எழுதிக்கொடுத்திருக்கிருன். கோவிந்தசாமி என்பதாகவிருக்கலாம். அதை ஜி. சாமி என்றுநவீனநாகரிகர்களைப்போல்குறுக்கிக்கொண்டிருக்கிருன்' என்று தீர்மானித்துக்கொண்டார். உடனே அந்த வாலிபன் நாயுடுவின்மீது ஏதோ ஒரு துரும்பை வீசி எறிந்தான். இதுதான் சாக்கென்று எண்ணிய நாயுடு குபீரென்று அந்த வாலிபன்மீது பாய்ந்து தன் கையிலுள்ள மெழுகை அவன் விரலில் நன்ருக அமுக்கி எடுத்துச் சரேலென்று ஜேபியில் போட்டுக்கொண்டார். இதற்குள் அந்த வாலிபன் கூக்குரலிட்டுத் திமிறிக்கொண்டு விலகிக்கொண்டான். நாயுடு சும்மாவிருந்தால் சந்தேகம் உண்டாகும் என்று எண்ணி பே! பே! பும்! பும்! ப்ரு ப்ரு ப்ரு! என்று கூவிக் கூத்தாடினர். இதற்குள் வாலிபன் உள்ளே போய்விட்டான். இவர் மீண்டும் தெருத் திண்ணை மீதே வெகுநேரம் உட்கார்ந்திருந்து பிறகு எழுந்து இன்னெரு வீட்டையடைந்தார். அது பெரிய பங்களாவாகவிருக்கக் கண்டு அதனுள் நுழைந்து உட்பக்கமுள்ள ஒரு பாறையின் மேல் வந்து அட்டகாசமாக உட்கார்ந்துகொண்டார்.

அங்குள்ள வேலைக்காரர்கள் கூக்குரலிட்டு இவரை விரட்ட முயன்றனர். அது வீணாய்விட்டது. இவர் அவ்விடத்தைவிட்டுஅசையவில்லை. இதற்குள் ஓர் ஆள் வந்து இவரது கரத்தைப் பிடித்து தடதடவென்று இழுக்க முயன்ருன். அப்போது உள்ளிருந்து ஒரு மனிதர் 'இதென்ன கூச்சல்?' என்று கேட்டுக்கொண்டு வீதியில் வந்தார். அவரைப் பின்தொடர்ந்து ஒரு விருத்தர், "அடே! அருணசலம்! அந்த பைத்தியத்தினிடம் போகாதே! உள்ளேவா!" என்று கூறிக்கொண்டே வருவதைக் கவனித்த நாயுடு முன்போலவே ஒரு மெழுகைக் கையில் தயாராக வைத்துக் கொண்டு அவ்விடத்தில் கோணல் மாணலாய் ஓட்டங் காட்டிக் கூத்தாடியவாறு அவன்மீது பாய்ந்து கை விரலில் மெழுக்கையமுக்கி வேருெரு ஜேபியில் போட்டுக்கொண்டு மீண்டும் ஆடவாரம்பித்தார். இதற்குள் இரண்டு மூன்று பெயராக இவரை இழுத்துத் தரதரவென்று நடத்திக்கொண்டு வீதியிற்கொண்டு வந்து தள்ளினர்கள்.

இதுவும் நல்ல வேலைதான் என்றெண்ணி அவர் வெளியே சென்று விட்டார். இவ்விதமே தினம் ஆடிப்பாடிக் கூத்தடித்துக் கொண்டு ஒவ்வொரு வீட்டில் செல்வதும் தமக்கு வேண்டியதைப் பார்ப்பதுமாக இருக்கிறார். சில வீடுகளில் இவர் தேடிச் சென்ற ஆட்கள் அகப்படாமல் மீண்டும் மீண்டும் சென்று காரியத்தை உஷாராகப் பார்த்துவருகிறார். இவர் இக்கோலத்துடன் தான் எண்ணியபடி எல்லா வீடுகளுக்கும் போவதற்குள் அனேக நாட்களாய்விட்டன. சுமார் 15 தினத்திற்குள் சில வீடுகளே பார்த்தார். இவர் பார்த்துவந்த வீட்டின் வேலைகளெல்லாம் பயனற்று விட்டதை யெண்ணி வருந்தி முற்றும் செய்தே தீருவதென்று எண்ணினர்.

பதினைந்து தினங்களாக இவர் எவ்விதத் தகவலும் முதலியார் வீட்டிற்குத் தெரிவிக்கவே இல்லை. தமது ஆட்களிடமும் தெரிவிக்க வேண்டாமெனத் திட்டம் செய்திருந்தார். ஆகையால் இங்கு குமாஸ்தா, சுந்தரன், நடராஜன்முதலிய எல்லோரும் நாயுடுகாருவின் தகவல் தெரியவில்லையே என்று மிக்க வருத்தமடைந்து ஒருவிதமும் தோன்றாமல் தவிக்கின்றார்கள்.

நாயுடுகாரு இவ்விதமே கூத்தடித்துக்கொண்டு முத்துச்சாமி வீட்டிற்குச்சென்றார். அங்கு வீதிக் கதவு தாளிட்டுப் பூட்டப்பெற்றிருந்தமையால்அவர் திண்ணையின்மீது உட்கார்ந்துகொண்டுஇரண்டு நாளாயிற்று. ஒருவிதத் தகவலும் கிடைக்கவில்லை. மனிதர்களொருவரையும் காணவில்லை. மனதுக்கு எதுவும் தோன்றவில்லை. "நாமோ ஊமையாக நடிக்கிறோம். நாம் இந்த வீட்டின் செய்தியை யாரை விசாரித்தறிவது?" என்றெண்ணி ஏங்கியவாறிருந்தார். காலையில் ஒரு வேலைக்காரி மட்டும் வந்து வீட்டுக்குழாவில் ஜலம் கொண்டு வந்து சாணமிட்டு மெழுகிக் கோலமிட்டுவிட்டுப் போகின்றாள். அவளைக் கேட்பதற்கோ தாம் ஊமை என்பதை அவள் முன்னமேயே அறிவாளாகையால் என்ன செய்வதென்று யோசித்தவாறு உட்கார்ந்திருக்கிறார். இவ்விதமே சில நாட்களாய்விட்டன. இவரைச் சுற்றி எப்போதும் பத்துப்பேர் வேடிக்கை பார்த்தவண்ணம்சூழ்ந்திருக்கின்றார்கள். ஆகையால் இவர் தனது கையாள் ஒருவனை நடுநிசியில் சந்தித்து, அவனை அங்கு தன்னுடன் தங்கச்செய்து, விடியற்காலையில் வரும் வேலைக்காரியினிடத்தில் "இவ்வீட்டு மனிதர்கள் எங்கே?

...............................................என்ற கேள்விகளை யெல்லாம் கேட்கும்படியாகக் கூறித்திட்டம் செய்தார். அவனும் அவ்விதமே அன்றிரவைப் போக்கினன். உதயமானதும் வேலைக்காரி அங்கு வந்து சாணமிட்டாள். அவளைக் கண்ட கையாள் மெல்லப் பேசத் தொடங்கி, "அம்மா! உன்னைப் பார்த்தால் மிகவும் நல்லவள் போலக் காணப்படுகின்றாய். தற்போது எங்கள் வீட்டிற்குப் பணிமகள் தேவையாக இருக்கின்றது. நீ வருவாயா? இந்த வீடும் காலியா கப் பூட்டியிருப்பதாகத் தெரிகின்றதே! இதில் யாரும் குடி இல்லையா! அல்லது எங்கேனும் சென்றிருக்கின்றார்களா?" என்றான்.

இதைக் கேட்ட வேலைக்காரி "ஐயா! இந்த வீட்டில் நான் என்னுடைய சிறியபிராய முதல் வேலை செய்து பழகிவிட்டேன். அவர்களெல்லாம் தற்போது வெளியூருக்குப் போயிருக்கின்றார்கள். வருமளவும் சாணம் தெளிக்கும் வேலை மட்டும்தான். வந்துவிட்டால் வீடு கூட்டும் மற்ற வேலையும் செய்யவேண்டும். அவர்கள் எப்போது வருவார்களென்று எனக்குத் தெரியாது. திடீரென்று நாளைக்கு வந்தாலும் வரலாம். அல்லது ஒருமாதம் சென்றாலும் செல்லலாம். ஆகையால் நான் ஒரு வீட்டை வைத்திருக்கும்போது வேறு வீட்டிலும் வேலை செய்ய என்னாலாகாது. நான் கிழவியாக ஆய்விட்டேனல்லவா? ஒரு வீட்டு வேலை செய்வதற்கே என்னால் முடியவில்லை சாமி!" என்றாள்.

இதைக் கேட்ட கையாள் அவளை நோக்கி "அம்மா! ஐயோ, பாவம்! தள்ளாத காலத்தில் வேலை செய்வதற்கு முடியவில்லை. கஷ்டமாகத்தா னிருக்கும். உம். இந்தச் சாண் வயிற்றிற்காக வல்லவா படும்பாடெல்லாம். அம்மா! இவர்கள் உனக்கு என்ன சம்பளம் கொடுக்கின்றார்கள்? இவர்கள் மிக்க தனவந்தர்களா?" என்றான்.

வேலைக்கார வீராயி:—"ஐயா! எனக்கு மாதம் இரண்டு ரூபாய் தான் கொடுக்கின்றார்கள். மகாராஜன் வீட்டில் சாப்பாட்டிற்குக் குறைவில்லை. அவங்க சாப்பிடுவது போலவே இந்த ஏழைக்கும் போடுவாங்க. என்னவோ அவுங்க புண்ணியத்தில் தான் என் குடும்பம் பொயக்கிறது சாமி!

கையாள் காளியப்பன்:—ஓகோ! நீ சொல்வதைப் பார்த்தால் அவர்கள் மிகுந்த செல்வவந்தர்கள் என்று தோன்றுகின்றது. தனமும் மனமும் இருப்பவர்கள் ஏழைகளைப் போஷித்துப் புண்யப் பலனை யடைகின்றார்கள். கடவுள் அவர்களைக் காப்பாற்றுவார். அவர்களுக்குக் குழந்தைகளுண்டோ?

வீராயி:—சாமி! ஓர் ஆண்பிள்ளையும் ஒரு பெண் பிள்ளையும் இருக்குதுங்க. பெண்ணைக் கட்டிக் கொடுத்து அது மாமியார் வீட்டுக்குப் போய்விட்டது. மகனுக்கு இன்னும் விவாகமாகவில்லை. உம்! தாய் தகப்பன் சொற்படி நடந்தால் இத்தனை நாளைக்குக் கண்ணுளம் ஆகி கொயந்தையும் பொறந்திருக்கும். அந்த மகன் அவங்க சொல்ரத்தே கேக்கரதில்லீங்க.

காளியப்பன்:—ஏனம்மா! பையன் யோக்யமானவன்தானே! தாய் தந்தையரின் சொல்லை ஏன் கேட்கமாட்டேனென்கிறான்? ஒருகால் இந்தக் காலத்தின் நாகரிகப்படி படிப்பெல்லாம் ஆனதும் விவாகம் செய்துகொள்ள இஷ்டமோ என்னவோ?

வீராயி:—அதல்லாம் இல்லீங்க. பையனுக்கு ஒரு பொண்ணு மேலே ஆசையிருக்குது; இருந்துது. அவங்க அம்மாளும் அப்பாவும் அதற்குச் சம்மதிக்கவில்லை வேறு பெண்ணைக் கட்ட ஏற்பாடு செய்தால் மகன் சம்மதிக்கவில்லை. இதுதான் தகராறு.

காளியப்பன்:—ஓகோ! அப்படியானால் பையன் இஷ்டப்படியே செய்துவிடுவதுதானே? அவன் யாரை இச்சிக்கின்றான்? உறவினரையா, உறவினரல்லாதவரையா?

வீராயி:—உறவுமில்லை ஒன்றுமில்லீங்க. ஐயோ! அந்தக் கொள்ளையை ஏன் கேக்கரீங்க? அந்தப் புள்ளே அதோடே கூட படிச்ச ஒரு பொண்மேலே ஆசைப்பட்டது. அவங்க நம்ப நாட்டு வழக்கத்தையே மறந்து வெள்ளைக்காரரைப் போல் இருக்கிறாங்கன்னு அவங்களுக்குப் பிடிக்கவில்லை. அதையே கட்டணுமுண்ணு பிடிவாதமாக வேறு எந்தப் பொண்ணையும் வாணுமுண்ணுது. இப்போ சேன்னுளா அந்தப் புள்ளே ஊரிலே இல்லை. இதற்காக அது உயிரே உட்டுடும்.

காளியப்பன்:--ஏனம்மா! ஏன் உயிரை விடவேண்டும்? அத்தகைய கஷ்டம் என்ன வந்துவிட்டது?

வீராயி:—ஐயோ! அது எந்தப் பொண்ணைக் கட்டணும்னு பிடிவாதம் செய்ததோ அந்தப் பொண்ணை யாரோ ஒருவன் கொண்ணூட்டானும். அவன் மேலே அந்தப் பெண்ணும் ஆசைப் பட்டதாம். ஏதோ கேஸ் வந்ததாம். என்னமோ சொல்ராங்க. எனக்குத் தகவல் தெரியாது. அந்தப் பொண்ணு இறந்துபூட்ட செய்தியை எங்க ஊட்டுச் சின்னையா கேட்டா அப்பொவே செத்திருப்பாரு. நல்ல வேளையாக அவுங்க அதற்கு முதல்நாளோ அதுக்கு முன்னேயோ ஏதோ காரியமாக ஊருக்குப் பூட்டாங்க.

காளியப்பன்:—(மிக்க வியந்தவனாய்) ஆ! கொலைசெய்துவிட்டார்களா! அதென்ன அநியாயமாக இருக்கிறதே! யார் கொலை செய்தார்கள்? அதை நீ அறியமாட்டாயா? ஐயோ! அந்தப் பிள்ளை இன்னும் இச்செய்தியை அறியமாட்டானா? அவனது பெற்றோர்களுக்குத் தெரியாதா? அவர்கள் சொல்லியிருக்க மாட்டார்களா?

வீராயி:—அவனுடைய பெற்றோர்கள் பெண் வீட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் சென்று ஒரு மாதத்திற்கு மேலாகின்றது. அவர்கள் சென்ற பிறகு பையன் ஓட்டலில் சாப்பிட்டு வந்தான். பிறகு அதுவும் ஊருக்குப் போவதாக என்னிடம் சொல்லிச் சென்றது. இன்னும் வரவில்லை. அப்புறம் தான் எனக்கு இந்தக் கொலைச் செய்தி தெரியும். அது அவுங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ அது எனக்குத் தெரியாது. நான் போரேஞ்சாமி! வீட்டில் வெளியே போகிற பிள்ளைகளுக்குக் கஞ்சிவாக்கணும். நேரமாகிறது—என்று கூறியவாறு புறப்பட்டாள்.

அதற்குள் காளியப்பன் "அம்மா! உன்னைப் பார்த்தால் நல்லவளாய் இருக்கின்றாயே என்ற அவாவினால் என் வீட்டிற்கு வேலைக்கு வருவாயா என்று அழைக்கலானேன். அதனாலே வார்த்தை வளர்ந்துவிட்டது. உன்னுடைய நன்மைக்கு ஈசன் எவ்விதமேனும் படியளப்பான்; குறைக்கமாட்டான். இதோ இந்தப் பக்ஷணங்களை இந்தப் பரதேசியான பைத்தியத்திற்குக் கொடுக்கலாம் என்று இரவு வாங்கிவந்தேன்; இதில் சிறிது கொடுத்தேன். அதைத் தின்னாமல் வீசி எறிந்து சின்னபின்னம் செய்து கூத்தடித்

தது. ஆகையால், மிச்சத்தை நானே வைத்துக்கொண்டேன். இதோ நீ இதைக் கொண்டுபோய் வீட்டில் குழந்தைகளுக்குக் கொடுத்து நீயும் எடுத்துக்கொள்" என்று கூறியவாறு அவள் கையில் பக்ஷணத்தைக் கொடுத்தான். மிக்க ஏழ்மை நிலையை யுடைய வீராயி பக்ஷணத்தைப் பார்த்ததும் சந்தோஷத்துடன் அதை வாங்கியவாறு "சாமி! தங்களைப் போல் தர்ம ப்ரபுக்களாலே தான் எங்களைப்போன்ற ஏழைகள் பொழைக்கணும். எங்க ஊட்டு ஐயாவோடெ பொண்ணுகூட இங்கே வந்தா எனக்குப் பச்சணம்,பல காரம், பழம் எல்லாம் கொணுந்து கொடுக்கும். 'அடி வீராயி! எங்க ஊட்டுக்கு நீ வந்துடு; உனக்கு நான் எல்லாம் கொடுத்து சவரச்சணை பண்ணரேன்' என்று அழைக்கும். என் புள்ளெ குட்டியை உட்டேட்டு எப்படி போறது சாமி! அது மகா நல்ல கொயந்தே" என்று தோத்திரம் செய்தாள்.

காளியப்பன்:—உலகத்தில் எத்தனையோ நல்லவர்களும் இருக் கின்றார்கள்; தீயவர்களும் இருக்கின்றார்கள். அந்தக் குழந்தை அவர்களுடைய தாய் தந்தையைப்போல் இருக்கின்றதுபோலும். அதை எந்த ஊரில் கட்டிக்கொடுத்திருக்கின்றார்கள்? அதற்குக் குழந்தையுண்டா ?

வீராயி:—அந்தக் கொயந்தையைத் தெற்கே கும்பகோணத்தில் கட்டிக் குடுத்திருக்காங்க. அது இப்பொதான் தலைச்சன் உண்டா யிருக்குது. அதோடெ ப்ரசவத்துக்குத்தான் அவுங்க போயிருக் கிறாங்க. அந்தக்கொயந்தையெ புருசன் இங்கே அனுப்பமாட்டே னுட்டாரு. இவுங்க அவுங்க இஸ்டப்படியே அங்கயே போயிருக் கிறாங்க.

காளிப்பன்:—கும்பகோணத்தில் அவர்களும் இவர்களுக்குச் சரியான மனிதர்கள்தானா ?

வீராயி:—ஆகா ! நல்ல பணக்காரரு. பொண்ணு மேலெ அத் தனெ ஆசெயினாலெ அனுப்பமாட்டேன்றாங்க; வேறெ ஒண்ணு மில்லெ.

காளியப்பன்:—ஓகோ ! இனம் இனத்துடன் சேருகின்றது. நல்லவர்களுக்கு ஈசன் நல்லவரின் சம்பந்தத்தைத் தான் சேர்ப்பார். இவர்களுடைய பூர்வீக ஊர் எதுவோ ?

வீராயி:—இவங்க ரொம்ப தலைமுறையா இந்த ஊருலேயே இருக்காருங்களாம். இவங்க ஊரு பாலக்கோட்டையாம். அங்கு இவங்க போறதே கெடையாதாம். இப்போ ஊருலெ இருந்து தானியமும் பணமும் ஆளுங்களெகொண்டு சேக்கராங்க. மத்தபடி இவங்க இங்கிருந்தே எல்லாம் பாத்துக்கராங்க. எப்பவு ஒருவேளெ ஐயா மட்டும் போய்வருவாரு. ஐயா! பேச்சு பெராக்கிலே நாழியாவதே தெரியவில்லை.

காளியப்பன்:—ஆமாம். நேரமாய்விட்டது. இந்தத் திண்ணையில் இரவில் படுத்தால் யாரும் ஒன்றும் சொல்லமாட்டார்களே! ஒருகால் அந்தப் பிள்ளை வந்தால் திட்டுவாரா?—என்று தந்திரமாய் அவன் பெயரைக் கேட்பதற்கு வார்த்தை விட்டான்.

வீராயி:—ஆ! அதெல்லாம் ஒண்ணும் சொல்லமாட்டாங்க. எங்க ஊட்டுச் சின்னய்யா ரொம்ப நல்லவராச்சே.

காளியப்பன்:—பெற்றார் பிறந்தாரைப் போலத்தானே பிள்ளையுமிருக்கும்? ஆனாலும் நான் கேட்க வேண்டியது சகஜமல்லவா? அவருக்கு உத்தியோகமா, படிப்பா? என்ன செய்கிறார்? என்ன வயசு இருக்கும்? அவருடைய பெற்றோருடையவும் அவருடையவும் பெயரென்ன? ஆனால் நீ சொல்வதிலிருந்தே அவர் நல்லகுணமுடையவராயிருப்பாரென்று தெரிகிறது. அதற்குத் தகுந்த பெயர்தானிருக்கும். இத்தகைய நல்ல மனிதர்களைப்பற்றிக் கேள்விப்படும்போது அவர்களுடைய ஊர், பெயர், எத்தனை குழந்தைகள் என்ற விவரங்களைக் கேட்கும்படியாக அவா தூண்டுகின்றது பார்த்தாயா? அயோக்யர்களை எத்தனைதரம் கூறினாலும் அவர்களைப்பற்றி இவ்வித யோக க்ஷேமத்தை எல்லோரும் விசாரிக்க முன்வரமாட்டார்கள். அயோக்யர்களால் யாருக்கேனும் ஏதாவது துன்பம் நேரிட்டவர்களே அவர்களைப்பற்றிக் காரியார்த்தமாக விசாரிப்பார்களேயன்றி, எல்லோரும் இதைப்போல் கேட்பது வழக்கமில்லை. இவர்களுடைய நடத்தை, குணம் முதலியவற்றை நீ சொல்லக் கேட்டதுமுதல் அவர்களைப் பார்க்க வேண்டுமென்னும் அவா என் மனதில் உண்டாகின்றது. இவையெல்லாம் அவர்களுடைய நன்மையின் பயனல்லவா?

வீராயி:—நீங்க சொல்வதெல்லாம் நெஜந்தான் சாமி. அல்லாரும் பொதுவா நல்லவங்களெதான் விரும்புவாங்க. பொல்லாதவங்

களை யார் கேப்பாங்க. அவங்களைப் பொல்லாதவங்கதான் கேப்பாங்க. இந்த வூட்டு ஐயா பேரு முருகேச முதலியார்; சின்னய்யா பேரு முத்துச்சாமி முதலியார்; அம்மா பெயர் சிவகாமியம்மா; கொழுந்தையின் பெயர் மங்களாம்பாள்; எம்பெயர்தான் வீராயி. ஐயா! அதோ பையன் தேடியாரான். நான் வரேஞ்சாமி. உங்க புண்ணியத்திலெ பலகாரம் கெடச்சிது. நாளெ காலையிலெ இங்கிருந்தீங்கண்ணு பாக்கலாம். போய்வாரேன்—என்று கூறி நாயுடுவைப் பார்த்தாள். அவர் தமது முகத்தை ஆயிரம் கோணலாகச்செய்து "பும்பும் பே பே பே ப்ரு ப்ரு ப்ரு" என்று நகைத்துக் கூத்தாடினார். அவரைப்பார்த்த வீராயி சிரித்தவாறு "உம் இவன்பாடு கொண்டாட்டம். உலக விசாரமில்லாமலே கெடக்கான். காதுமில்லே; வாயுமில்லே; பைத்தியமும் சேர்ந்தது, வேறெ என்னவோணும். நான் வரேன் சாமி" என்று கூறியவாறு வீட்டை விட்டுப் போய்விட்டாள்.

இங்கு நடந்த சம்பாஷணைகளை யெல்லாம் வெகு கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த நாயுடுகாரு மனதிற்குள் பலவிதமான யோசனையிலாழ்ந்தார். அன்று பகற்பொழுதில் இன்னும் வேறு சில வீடுகளில் சென்று முன்போலவே மெழுக்கில் விரலடையாளத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் அன்று இரவு இந்த வீட்டிற்கே வந்து சேர்ந்தார். அன்று இரவு நடுநிசியில் தமது கையாட்களைப்பார்த்து "எல்லாம் கேட்டீர்கள். பையன் எந்த ஊருக்குப்போயிருப்பான் என்பதையும், அவர்களுக்கு மனிதர்கள் எங்கெந்த ஊரில் இருப்பார்கள் என்பதையும் தந்திரமாய்க் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். பிறகு கவனிப்போம்" என்று கூறி வைத்தார். அன்று இரவு கழிய மறுநாள் காலையில் வீராயி வந்தாள்.

அவளைக் கண்ட காளியப்பன் "அம்மா! நான் நேற்றிரவு இங்கேயே தான் சௌக்கியமாயிருக்கின்றதென்று படுத்தேன். இந்தப் பயித்தியம் இரவில் எங்கேயோ போய்விட்டது. இப்போது வந்து விட்டது. நேற்றிரவு யாரோ ஒரு மனிதர் வந்து, ஏதோ அவசரமான ஜோலியாக வீட்டுக்காரரைப் பார்க்கவேண்டுமென்றும், அவருடைய உறவினரென்றும், முத்துச்சாமி எந்த வூருக்குச் சென்றிருக்கின்றார் என்றும் என்னை இவ்வீட்டு வேலையாள் என்று எண்ணிக் கேட்டார். "நான் வழிப்போக்கன் எனக்கு ஒன்றுந் தெரி

யாது" என்று கூறிவிட்டேன். ஆனால் உன்னைக் கேட்டால் தெரியும் என்றும் சொன்னேன். அவர் உன்னைக் காணமுடியுமோ முடியாதோ! ஆகையால் என்னை விசாரித்து வைத்துக்கொண்டு தாம் வரும்போது சொல்லும்படி கூறிச் சென்றார். அவர் இப்போது வந்தாலும் வருவார். முத்துச்சாமி எங்கே சென்றிருக்கிறார் உனக்குத் தெரியுமா?" என்று உபாயமாய்க் கேட்டான்.

இதைக் கேட்ட வீராயி! "ஐயா! அவர் ஊருக்குப் போகும்போது என்னிடம் இன்ன ஊரென்று சொல்லவில்லை. ஊருக்குப் போய் வருகிறேன் என்றார். நான் எந்த ஊருக்கு என்று கேக்கவில்லை. அவங்க தங்கச்சி ஊருக்குத்தான் போயிருப்பார் என்று எண்ணுகிறேன். எனக்குத் தெரியாது சாமி!" என்றாள்.

காளியப்பன்:—அவர் சாதாரணமாக அடிக்கடி போகக் கூடிய விடம் எது? உனக்குத் தெரியாதா?

வீராயி:—அவுங்க மனுசாள் எல்லாம் முக்கால்வாசி பெயரும் இங்கேயே பக்கத்திலிருக்கிறார்கள். அதாவது மைலாப்பூர், கோபாலபுரம், வண்ணாரப்பேட்டை, ராயபுரம், திருவல்லிக்கேணி முதலிய இடங்களில் இருக்கிறார்கள். அவருடைய அத்தைச்சார் மாத்திரம் குத்தாலத்திலிருக்கிறாங்க. மாமங்காரன் சேலத்திலே இருக்கறாங்க. மத்தபடி உண்ணம் யாரு எங்க இருக்கராங்க என்று எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிஞ்சது இதுதாஞ்சாமீ! பாலக்கோட்டையும் கும்பகோணமும் தான் அவுங்க ஊரும் பொண்ணு ஊரும் ஆச்சு. அங்குதான் போயிருக்கும் என்னு சொல்லுங்க. நேற்று சேனேரமாச்சுண்ணு புள்ளேங்க திட்டிச்சிங்க. ராத்திரிம்புடிச்சு என் மவன் ஜொரமாய்ப் படுத்திருக்கிறான். நிக்க நேரமில்லை. வர்ரேன் சாமி!" என்று கூறியவாறு தன் வேலையை முடித்துக்கொண்டு போக முயன்றாள்.

காளியப்பன், "அம்மா! என்னிடம் ஒரு மாத்திரை இருக்கின்றது; அதைத் தருகிறேன். தேய்த்துக் கொடு; ஜுரம் நின்றுவிடும். உன் வீடு எங்கே இருக்கிறது சொல்; நான் பிற்பகல் வந்து பார்த்து வேறு மருந்து கொடுக்கிறேன்" என்று கூறி ஒரு மாத்திரையைக் கொடுத்தான். அதை வாங்கிய வீராயி "என் வீடு இதே பக்கத்துத் தெருக்கோடியிலேயே இருக்கும் பின்னமாத்

துக்குப் பக்கத்திலே யிருக்கும் சின்ன வீடுதான் சாமி. நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு அப்புறம் போய்விட்டாள்.

பிறகு நாயுடுகாரு இன்னுமுள்ள மற்ற நேயர்கள் வீட்டையும் பார்த்துத்தன் வேலையைச் செய்து வந்துவிட்டார் எனினும், அவற்றில் அவரது காரியம் ஜெயம்பெற்றுப்பலன் தராமல் வீணாய்விட்டது. சரி, இனிமேல் சும்மாவிருப்பது தகாதென்று எண்ணி, கொலைக் கேஸையும் பத்மவல்லிவீட்டில் எல்லோரும் எவ்வாறுள்ளார்கள் என்பதையும் மாறுவேட மூலமாகவே தெரிந்துகொண்டார். கேஸ் செஷன்ஸுக்கு அனுப்பப்பட்டதையும், பத்மவல்லி தகவல் இன்னும் தெரியவில்லை என்பதையும், செல்லப்பா முன் போலல்லாமல் திருந்திவிட்டான் என்பதையும் அறிந்து இன்பமும் துன்பமும் அடைந்தார்; இந்தக் கொலையின் உண்மையை அறியும் பரியந்தம் இவ்விதமான பயித்தியக் கோலத்துடன் இருத்தலே மெத்த நலம் என்றெண்ணினார். தாம் எவ்விதமாயினும் தம்முடைய கையாட்களுடன் இந்த வீட்டைத் திறந்து உள்ளே புகுந்து சோதனையிட்டு ஏதேனும் சந்தேகாஸ்பதமானது கிடைக்கின்றதா பார்க்கவேண்டும் என்ற அவா அவருக்கு உண்டாயது. அதை நிறைவேற்று வதற்குத் தகுதியான தருணம் இராக்காலமே ஆகையால் அன்று அதைச் செய்தே தீர்த்துவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டு தமது கையாட்களில் சிலரை அவ்விடத்திற்கு வரவழைத்து அந்தக் கதவின் பூட்டிற்குச் சரியான மறு சாவியைத் தயார் செய்து கொண்டு, பாக்கெட்டு விளக்குகளையும் கையில் வைத்துக்கொண்டு தயாராகப் படுத்திருந்தார். இரவு சுமார் 1-மணி சமயத்திற்கு அந்த வீட்டின் கதவைத் திறந்துகொண்டு நாயுடு தம்மோடு ஒருவனைமட்டும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்; கதவைத் தாளிட்டுப் பூட்டிக்கொண்டு படுத்துக்கொள்ளும்படி மற்றவர்களுக்குச் சொல்லித் தம் வேலையைக் கவனித்தார்.

உள்ளே விசாலமான கூடங்களும், அனேக அறைகளும், தாழ்வாரங்களும் காணப்பட்டன. ஒவ்வொரு அறைக் கதவுகளையும் மறு சாவிகளைக்கொண்டு திறந்து பார்த்து மீண்டும் சாற்றிப் பூட்டிவிட்டார். படிக்கும் பிள்ளையின் அறை என்பது அதைத் திறக்கும்போதே தெரியவந்தது. புஸ்தகங்களும், நாற்காலி, மேஜை,

விசுப்பலகைகளும், அனேக சட்டைகள், அங்கவஸ்திரங்கள் முதலி யனவும் காணப்பட்டன. மேஜையின் அறைகள் பூட்டியிருந் தன. இரண்டு ட்ரங்க் பெட்டிகளும், துணிப் பெட்டிகளும் கீழே இருந்தன. நாயுடு அவற்றையெல்லாம் குடைந்து பார்த்தார். காந்தா மணியால் இவனுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் நிறையவிருந்தன. அவைகளில் முக்கியமானவற்றை எடுத்துக்கொண்டார். மற்றொரு பெட்டியில் இன்னொரு முக்கியமான ஒரு கடிதம் கிடைத்தது. அதையும் எடுத்துக்கொண்டார். மற்றபடி கொலையின் சம்பந்த மாக வேறு எதுவும் இவ்விடத்தில் காணப்படவில்லை. ஆகையால் முன்போலவே பூட்டிவிட்டு வீதிக்கதவை ஜாடையாக இடித்தார்; வீதியிலிருந்தவர்கள் திறந்துவிட வெளியில் வந்து எப்போதும் போல் திண்ணையில் படுத்துக்கொண்டார்.

மறுநாள் உதயமானதும் எல்லோரும் ஜாடையாகப் போய் விட்டார்கள். நாயுடுவுக்குப் பெரிய யோசனையாய் விட்டது. "இத் தனை பெயரையும் பார்த்ததில் ஒருவித பலனும் ஏற்படவில்லை. இவன் ஒருவனை ஏன் பாக்கியாக விடவேண்டும்? இதையும் ஆராய்ந்துவிடுவதே நலம். நாம் கொண்டிருக்கும் சந்தேகமானது இந்தப் புகைப்படத்தில் பார்த்தால் சற்று யோசனைக்கிடமாக இருக்கின்றது. இதை நாம் சென்று நிவர்த்தி செய்துவருவதற்கு எத்தனை நாளாகுமோ! செஷன்ஸ் கோர்ட்டு திறக்க இன்னும் ஒரு வாரகாலமே இருக்கின்றது. கோர்ட்டு திறந்ததும் ஒருவேளை இந்தக் கேஸை முதலில் எடுத்துக்கொண்டு விசாரணை செய்தா லும் செய்யலாம். இன்னும் சிலநாள் தவணை கேட்கும்படியாகக் குமாஸ்தாவிற்கு ஒரு கடிதம் எழுதியனுப்பிவிட்டு நாம் உடனே செல்லவேண்டும். பிறகு கடவுளிருக்கிறார்'' என்று தீர்மானித்துக் கொண்டு ஒரு கடிதமெழுதித் தமது ஆள்மூலமாகக் குமாஸ்தாவிற்கு அனுப்பிவிட்டுத் தம்முடன் சில பெயர்களை அழைத்துக்கொண்டு, அன்றே சேலத்திற்குப் பிரயாணமானார். முக்கியமாக இவர்களைச் சேர்ந்த மனிதர்களுடைய விலாசத்தையும் பெயரையும் தெரிந்து கொள்வதற்கே இவர் முத்துச்சாமியின் அறையைச் சோதனை செய்தார். அவனுடைய பந்துக்களிடமிருந்துவந்த கடிதங்களி லுள்ள விலாசங்களை எடுத்துக்கொண்டிருந்தமையால், சேலத்

தை யடைந்ததும், அவர் தம்முடைய வேஷத்தைக் களைந்துவிட்டு ஒரு பெரிய மிராசுதாரர்போல் வேஷம் பூண்டு, தமது ஆட்களில் இருவரையும் பெரிய மனிதர்கள் போல் உடைதரிக்கச்செய்து தம்முடன் அழைத்துக்கொண்டு அங்குள்ள முத்துச்சாமியின் மாமன் வீட்டை யடைந்தார். முத்துச்சாமியின் மாமன் அவ்வூரில் பெரிய வக்கீல். அவரை அவ்வூரில் அறியாதார் யாருமில்லை. அவர் பூபதிமுதலியார் என்ற பெயருடையவர். அவர் வீட்டை யடைந்ததும், வீதியிலிருந்த வாயிற்காப்போன் இவர்களை யார் என்று வினவினன்.

நாயுடுகாரு, "பூபதி முதலியாரைப் பார்க்கவந்தோம். இருக்கின்றார்களோ! உள்ளே போகலாமா?" என்றார். உடனே வேலைக்காரன் 'உள்ளே போகலாம்' என்று கூறி அழைத்துச் சென்றான். நாயுடுவும் அவருடைய ஆட்களும், நகைத்த முகத்துடன் பூபதி முதலியாரிருக்கும் இடத்திற்குச் சென்று, "நமஸ்காரம். முதலியாரவாள்!" என்று கூறிக்கொண்டே சென்றார். பூபதி முதலியார் வந்தவர்களை உபசாரத்தோடு வரவேற்று உட்காரவைத்து "தாங்கள் யார்? எந்த ஊர்? யாது காரியமாக வந்திருக்கின்றீர்கள்?" என்று விசாரித்தார்.

நாயுகோரு:—நாங்கள் ஈரோட்டிலிருப்பவர்கள். நல்ல சுபகாரியமாகத்தான் இங்கு வந்தோம். தங்களுடைய தமக்கைக்கு ஒரு புத்திரனிருப்பதாயும் அவர் விவாக தருணமாயிருப்பதாயும் தற்போது தங்களில்லம் வந்திருப்பதாயும் எனக்கு ஒருவர் தெரிவித்தார். என் தம்பியின் மகள் மிக்க ரூபவதியாயும், படித்துப் பட்டம் பெற்றவளாயும் இருக்கிறாள். அவளுக்கு விவாகம் செய்ய வெண்ணி மாப்பிள்ளை விசாரிக்கையில், இந்த வரத்தையும் தங்கள் மைத்துனர் முதலியோருடைய குணாதிசயங்களையும் அந்தஸ்தையும் கேள்விப்பட்டுப் பையன் இவ்விடத்திலிருப்பதாகத் தெரிவித்தபடியால், இங்கேயே வந்து பையனையும் பார்த்துவிட்டுத் தங்களுடனும் பேசிவிட்டுப் போகலாம் என்று வந்தோம். பையன் எங்கே கூப்பிடுங்கள்—என்றார்.

இதைக் கேட்ட பூபதி முதலியார் நகைத்தவாறு, "ஓகோ! விவாக விஷயமாகவா வந்தீர்கள்? மெத்த சந்தோஷம். பையனை

நான் இங்கு லீவுக்கு வரும்படியாகக் கடிதம் எழுதியிருந்தேன். அவனும் வருவதாக எழுதினன். ஆனல் இங்கு வரவில்லையே! அவன் சென்னையிலேயே இருப்பான். அல்லது கும்பகோணம் சென்றிருக்கலாம். தங்கள் நாமதேயமென்ன? தங்கள் தம்பியின் நாமதேயமென்ன? அவர் என்ன வேலையிலிருக்கிறார்? பெண்ணுக்கு எத்தனை வயது? அவள் என்ன படித்திருக்கிறாள்? அவருக்கு இன்னும் எத்தனை குழந்தைகளிருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

நாயுடு:—நாங்கள் பரம்பரையாக மிராசுதாரர்கள். மேலும் நான் ஸர்க்கார் உத்தியோகத்திலிருந்து பென்ஷன் வாங்கிக் கொண்டிருக்கிறேன். என் தம்பி ஈரோட்டில் இஞ்சினீயராக இருக்கிறான். அவனுக்கு அந்த ஒரே பெண் குழந்தைதான். வயது 17 ஆகியது. பி.ஏ. 2-வது வருஷம் படிக்கின்றாள்; மிக்க எழில் வாய்ந்தவள்; நன்றாகச் சங்கீதம் பாடுவாள்; நல்ல புத்திசாலி—என்றார்.

பூபதி:—மெத்த சந்தோஷம். தாங்கள் சொல்லும்போதே எனக்கு மிகவும் பிடித்தமாக இருக்கின்றது. தாங்கள் நேரே கும்பகோணத்திற்கேனும், சென்னைக்கேனும் சென்று காரியத்தை உடனே முடித்துவிடலாம். நான் என் தமக்கையை வரும்படியாகத் தந்தியடித்து வரவழைத்து விடுவேன். அவளுடைய புதல்விக்கு இது பிரஸவகாலமாகையால் அவள் வருவதற்குச் சாத்தியமில்லை. அவர்களிடம் பேசித்தான் காரியம் முடியவேண்டும். ஆகையால் அவ்விடமே செல்வது உசிதம்" என்றார். பிறகு ஏதோ பொதுவாகச்சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு நாயுடு புறப்பட்டுவிட்டார்; "ஒருகால் கும்பகோணத்திற்குத் தான் சென்றிருப்பானே என்பதற்கு மில்லை. அவன் உண்மையில் இந்தக் காரியத்தைச் செய்திருந்தால் தன் தாய் தந்தை இருப்பிடத்திற்குச் சென்றிருப்பானு?" என்று யோசித்தார். ஒருகால் அவர்களுடன் இருந்தவாறே தான் தப்பித்துக்கொள்ள முயற்சித்தாலும் பொருந்தும்" என்று எண்ணிக் கும்பகோணத்திற்குச் சென்று அங்கு அவர்களுடைய விலாசத்தைத் தெரிந்துகொண்டார்.

நாயுடுகாரு ஒரு பெரிய வியாபாரிபோல் வேடம்பூண்டு வைர மோதிரங்கள் சிலவற்றை ஒரு பெட்டியில் எடுத்துக்கொண்டு அவர்கள் வீட்டிற்குப்போய், "ஐயா! இங்கு முத்துச்சாமி என்

பவர் சென்னையிலிருந்து வந்திருப்பதாயும், அவருக்கு வைர மோதிரம் வேண்டுமென்றும், இந்த விலாசத்திற்குக் கொண்டுவந்தால் அவருடைய பெற்றோரும் தாமும் சேர்ந்து பொறுக்கிப் பிடித்தமானதை எடுத்துக்கொள்வதாகவும் எங்களுக்கு ஓராள் மூலமாய்ச் சொல்லி யனுப்பினர். ஆதலால் இதோ கொண்டு வந்திருக்கிறோம். அவரெங்கே அழையுங்கள்? அவருடைய பெற்றோரையும் கூப்பிடுங்கள்'' என்று பொருத்தமாகக் கூறினர்.

அப்போது அந்த வீட்டில் பெரிய குழப்பமும், அதிக ஜனக்கூட்டமும், இருந்தன. முத்துச்சாமியின் சகோதரி மங்களாப்பாள் பிரஸவ வேதனையால் வருந்தியதால் அந்தச் சந்தடியிருந்தது. முத்துச்சாமியின் தகப்பனர் தமது புதல்வி சௌக்கியமாகப் பிரசவித்துக் குழந்தையும் தாயும் க்ஷேமமாக இருக்கவேண்டுமே என்று கவலையுடன் உட்கார்ந்திருந்த சமயம் நாயுடு நகையை எடுத்துக்கொண்டு சுபமாய் வந்தமையால், அதை அவர் நல்ல சகுனமாக எண்ணி மகிழ்ந்து நாயுடுவை நோக்கி, ''ஐயா! முத்துச்சாமியின் தந்தை நான்தான். பையன் இன்னும் இங்கு வரவில்லை. அவன் வந்தபிறகு தாங்கள் வந்தால் அவனிஷ்டப்படியே வாங்குகிறேன். தற்போது எனக்குப் பேசுவதற்குக்கூட மனம் சரியாகவில்லை. குழந்தைக்கு உடம்பு சரியாக இல்லை. தாயும் குழந்தையும் வேறானல்தான் மனம் நிம்மதியடையும். ஆதலால் தாங்கள் சென்று வாருங்கள்'' என்றார்.

இதைக் கேட்ட நாயுடுகாரு, ''சரி; இவ்விடத்திலும் நமது வேலை பலிக்கவில்லையே'' என்று எண்ணியவாறு அந்த முதலியாரை நோக்கி, ''கடவுள் ரக்ஷிப்பார். யாதொரு குறையும் வராது. கவலை வேண்டாம்'' என்று நல்லவாக்குக்கூறி ''நான் சென்றுவருகிறேன்.'' என்று தெரிவித்து எழுந்தார். அச்சமயம் ஒரு மாது சிரித்தமுகத்துடன் ஓடிவந்து, ''மாமா! ஆண் குழந்தை பிறந்தது; ஆண் குழந்தை பிறந்தது'' என்று ஆரவாரித்தாள். இதுகேட்ட முதலியார் மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்து, நாயுடுகாருவை இருக்கச் சொல்லித் தாம் உள்ளேசென்று ஒரு தட்டில் கற்கண்டும், சர்க்கரையும் கொண்டு வந்து அவருக்குக் கொடுத்தார். நாயுடு இதுவும் தமக்கு நல்ல சகுனமென்று எண்ணி, மரியாதைக்காக அதில்

சிறிது எடுத்துக்கொண்டு உத்தரவு பெற்றுப் போய்விட்டார்.

"சரி; இரண்டிடங்களிலும் அவன் வராமையால் அவன்மீது சந்தேகமதிகரிக்கின்றது. குத்தாலத்திற்கும் ஒருதடவை போய்ப் பார்த்துவிடுவோம். நாம் நேரில் செல்வதைவிடத் தகுந்த சாக்கு இருக்கின்றது. அதாவது, அவர்களுடைய விலாசம் நம்மிடமிருக்கிறது. நான் உடனே தந்தியாபீசுக்குச் சென்று, 'மங்களத்திற்கு ஆண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் சுகம். முத்துச்சாமி அவ்விடத்திலிருந்தால் உடனே இவ்விடம் அனுப்பவும். இல்லாமலிருந்தால் அதையும் மறு தந்தியில் தெரிவிக்கவும்' என்று முத்துச்சாமியின் தந்தை அடித்ததாக அடித்துவிடுகிறேன். பிரசவத்திற்காக வேறு வீடு மாறி இருப்பதுபோல் தெரிவித்து நான் தபாலாபீஸிலிருந்து பதிலை வாங்கிக் கொள்கிறேன். இதுதான் சரியான யோசனை" என்று தீர்மானித்துக்கொண்டு நேரே தபாலாபீஸுக்குச் சென்று பதில் தந்திக்கும் பணம் கட்டித் தாம் தீர்மானித்தபடி தந்தியடித்துவிட்டார். சில மணிநேரத்திற்கெல்லாம் இவர் கொடுத்த விலாசத்திற்குத் தந்தி வந்தது. அதை அவர் ஆவலோடு வாங்கி உடைத்துப் படித்தார். அது பின் வருமாறு:—

தந்தி வந்தது. மங்களமும் குழந்தையும் சுகமாக இருப்பது கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தோம். பத்தியமிட்டதும் கடிதமெழுதவும். முத்துச்சாமி வரவில்லை. வந்தால் அழைத்துக்கொண்டு வருகிறேன்.

குப்புசாமி முதலியார்.

அதை அவர் எடுத்துக்கொண்டு தமதிருப்பிடம் சென்று தமதாட்களுக்குக்காட்டினர். பிறகு தாம் உடனே கேசவ முதலியாரின் குமாஸ்தாவிற்கு ஒரு தந்தியடிக்கத் தீர்மானித்துத் தபாலாபீஸுக்குச் சென்று,

"பத்மவல்லியைப்பற்றிய தகவலும், முதலியாரின் தகவலும் தெரிந்தனவா? செல்லப்பாவின் வழக்கை ஒற்றிவைத்துக்கொள்ள ஒப்புக்கொண்டார்களா? விவரத்திற்கு உடனே தந்தியடிக்கவும்.

நண்பன்.

என்று வரைந்து தந்தி அடித்துவிட்டு தமது விடுதிக்கு வந்து சேர்ந்தார். "நாம் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டு 5, 6-நாட்கள் ஆய்விட்டன. இன்னும் நமக்கு ஆசாமியே கிடைக்கவில்லையே! ஒருகால் நாம் எதிர்பார்ப்பதெல்லாம் வீணாய்விடுமோ? கொலை செய்யாதவனுக்கு அநியாயமாய்த் தண்டனை கிடைத்துவிடப் போகிறதே என்ற பரிதாபத்தினாலேயே நாம் இந்தக் காரியத்தை மேற்கொண்டோம். ஈசன் அருள் எவ்வாறிருக்கின்றதோ தெரியவில்லையே?" என்று சிந்தித்தவாறு இருந்தார்.

பிறகு அவர் சில மணி நேரம் கழித்துத் தபாலாபீஸுக்குச் சென்று தந்தியின் வரவை எதிர்பார்த்தார். தந்தியும் வந்தது. அது பின் வருமாறு:—

"முதலியார், பத்மம் இவர்களுடைய செய்தி எதுவும் தெரியவில்லை. வழக்கை ஒத்திவைக்கும்படியாக எவ்வளவோ சிபார்சுகளுடன் பெரிய பெரிய உத்யோகஸ்தர், வக்கீல்கள் மூலமாய்த் தெரிவித்தேன். முதலில் இதில் கண்டு பிடிப்பதற்கு ரகஸியமில்லாமையாலும், பெரிய மனிதனின் வீட்டு வழக்காகையாலும் இதனை செஷன்ஸ் கோர்ட்டு திறந்ததும் எடுத்துக்கொள்ளப் போவதாயும் தெரிவித்துவிட்டார்கள். பிறகு மிகவும் மன்றாடியதில் ஒருவாரம் தவணை கிடைத்திருக்கின்றது. அதற்குமேல் கடவுளிருக்கிறார்."

குமாஸ்தா.

அதைப் படித்த நாயுடுகாரு கலக்கமடைந்தார்; எனினும் முயற்சியை விடலாகாதென்று எண்ணி வீடு திரும்பினார். "நாம் இவனொருவனையே எதிர்பார்த்திருக்கிறோமே. ஒருகால் வேறு எவனேனும் செய்திருக்கலாமோ? இதற்கு எதிர்பார்த்து இதுவுமில்லாமல் வேறு கண்டுபிடிக்க நேரமுமற்று, கடைசியில் நிரபராதிக்குத் தண்டனை விதிக்கப்பட்டால் என் செய்வது?" என்று யோசித்தார். மீண்டும் தைரியத்தைக் கைவிடாமல் பாலக்கோட்டை என்ற ஊர் எந்தப் பக்கமிருக்கின்றதென்பதை விசாரித்துக்கொண்டு அங்குச் செல்ல அவர் முயற்சித்தார். அதற்குக் கும்பகோணத்திலிருந்து போவதற்கு வழியில்லை; சென்னையிலிருந்துதான் போகவேண்டும் என்றுதெரிந்துகொண்டு சென்னைக்குத் திரும்பி வந்தார். வந்தவிடத்தில்நாயுடுவிற்குக்கடுமையான ஜுரம் வந்துவிட்டது. "அந்தோ! நல்ல

தருணத்தில் இந்த ஜுரமும் காத்துக்கொண்டிருந்ததா? ஆ! இன்னும் சரியாகப்பன்னிரண்டு நாட்கள்தானே இருக்கின்றன? வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நடத்திவிடுவார்களே'' என்று நாயுடு மிக்க வருத்தத்தை யடைந்தார்; தக்க மருத்துவரிடத்தில் சிகிச்சை செய்துகொண்டார். உடம்பு குணப்படவில்லை. ஒரு வாரம் கழித்து ஜுரம் குறைய ஆரம்பித்தது. பிறகு இரண்டு மூன்று தினத்திற்கெல்லாம் மெல்லத் தேறி எழுந்து தம்முடைய கையாட்களுடனும் சாமான்களுடனும் பாலக்கோட்டைக்குப் பிரயாணமானார். வழி நடுவில் நாயுடு ஒரு ரயில் மாறி வேறுவண்டியில் வெகுதூரம் இரண்டு நாட்கள் பிரயாணம் செய்து அவ்வூரை அடைந்தார். அவர் வண்டியினின்றும் இறங்கியதும் நேரே எங்கே செல்வார்? ஊரும் புதிது! பழக்கமுள்ள மனிதருமில்லை. பாலக்கோட்டை என்பது பெரிய ஊர். அதைச் சுற்றிலும் சிறிய கிராமங்கள் நிறைய இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் இவர் எந்தஇடத்தில் செல்வது என்பதை யோசித்துக்கொண்டு நின்றார். பிறகு தாம் பெரிய வியாபாரி என்றும் வியாபாரத்திற்காக அவ்விடத்திற்கு வந்துள்ளதாயும் கூறி ஒரு விடுதி தமக்கென்று வைத்துக்கொண்டு அதற்குமேல் தமது வேலையைச் செய்யத் தீர்மானித்தார்; அவ்வாறே அவ்வூரில் தனிமையாக விடுதி குடிக்கூலிக்குத் தேடினார். நாலைந்து நாட்களாய்விட்டன. விடுதி எங்கும் கிடைக்காமல் ஓட்டலில் சாப்பிடுவதும் சத்திரத்தில் படுப்பதும், அருகிலுள்ள கிராமங்களைச் சுற்றிப் பார்ப்பதுமாகவே இருந்தார். கூட்டுக்குடியிருக்க இடமிருந்ததேயன்றித் தனி வீடு கிடைப்பது அரிதாய்விட்டது. ஒருவாரம் அலைந்த பிறகு பெரிய பங்களா ஒன்று கிடைத்தது. அதற்கு மாதம் 150 ரூபாய் குடிக்கூலி கேட்டார்கள். நாயுடு அதற்கும் ஒப்புக்கொண்டு அதைப் பேசி முடிவுசெய்து தமது ஜாகையை அதில் வைத்துக்கொண்டார்.

நாயுடுகாரு சென்னையை விட்டுப்புறப்பட்டுப்பத்து தினங்களாய் விட்டன. பின்பு அவர் ஒரு கிழவிபோல் வேடம்பூண்டு இடியாப்பம், மூசுண்டை, சுண்டல்,மசால்வடை, தோசை, முறுக்கு முதலியவற்றை வீட்டில் செய்து, அவற்றைக் கூடை, தட்டு முதலியவற்றில் வைத்துத் தலைமேல் கொண்டு அந்தப் பாலக்கோட்டையைச்

சுற்றியுள்ள சிறிய கிராமங்கடோறும் போய் அவற்றை விற்பது போலிருந்து தகவலை விசாரிப்பதெனத் தீர்மானித்தார். அப்பால் ஒருநாள் ஒரு கிராமத்தில் ஒரு மரத்தடியில் கடை போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்; தம்முடைய ஆளைத் தம்மை யறியாதவர் போலவே அங்கு இருக்கும்படி திட்டம் செய்திருந்தார். இவர் தினம் காலையில் ஒரு கூடையும், ஒரு தட்டும் பலகாரம் செய்து எடுத்துச் செல்வர். பகல் பத்து மணிக்குள்ளாகவே அவை விற்பனையாய்விடும். அப்படியிருக்கையில் ஒருநாள் அந்தக் கடைக்கு வருபவர் ஒருவரிடத்தில், சாதாரணமாகப் பேசுவதுபோல் பேசி, சென்னையில் பிரபல தனவந்தரான முருகேச முதலியார் என்பவருடைய பூர்விகவூர் இதுதானா?'' என்று கேட்டார். அவர் "இல்லை." என்றார். பின் நாயுடுகாரு, "ஐயோ! நாம் அந்தக் கிழவி வீராயினிடம் பாலக்கோட்டைக்குப் பக்கத்தில் அவரிருப்பது எந்தக் கிராமம் என்று கேட்காமல் வந்துவிட்டோமே" என்று வருந்தினார். "ஆ! நாம் சென்னையைவிட்டுப் புறப்பட்டு 15 நாட்களாய் விட்டனவே. அவ்விடத்து நிலைமை தெரியவில்லையே! இவ்விடத்திலிருந்து தந்தி யடித்துத் தெரிந்துகொள்வதென்றால் ஒருகால் அந்த முத்துச் சாமி இதை யறிவானேயானால் முழுதுங் கெட்டுவிடுமே! என்ன செய்வது? சமாச்சாரப் பத்திரிகையைத்தினம் பார்த்துத்தான் செய்தியைத் தெரிந்துகொள்ளவேண்டும்'' என்று பலவிதமாக யோசித்துக் கலங்கலுற்றார்.

இவ்வாறாக அநேக கிராமங்களில் கடைவைத்து விற்றுக் கொண்டே வருகையில் ஒரு கிராமத்தில் ஒருநாள், ஒரு பையன் தோசை வாங்க வந்தான். அவன் "நீ வைத்திருக்கும் பலகாரத்தை யெல்லாம் ஒரு விலை சொல்லிப் பணம் பெற்றுக்கொண்டு எனக்குக் கொடுத்துவிடு'' என்றான். இதைக் கேட்ட நாயுடு, சிரித்துக் கொண்டே, "என்னடா! பையா! இத்தனை பலகாரத்தையும் நீ ஒருவனே வாங்குவதற்கு என்ன கிராக்கியப்பா உங்கள் வீட்டில்?'' என்று கேட்டார்.

பையன்.—ஆயா! உனக்கதையெல்லாம் பற்றி என்ன விசாரணை? எப்படியாவது உன் பொருள் விலையாக வேண்டியதுதானே உனக்குக் கவலை. என்னிடமே கொடுத்துவிட்டு நீ நிம்மதியாக

வீடு போய்ச் சேரேன்" என்றான். இதைக் கேட்ட நாயுடு மீண்டும் நகைத்து, "அப்பா! உன் புண்ணியத்தால் நான் இப்போதே வீடு போய்ச் சேருகிறேன். இந்த மொத்தப் பலகாரமும் எனக்கு அசல் விலை இரண்டு ரூபாய் ஆயிற்று. அதைக்கொடுத்தால் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

இதைக் கேட்ட பையன் "என்ன ஆயா! அசல் விலையைக் கொடுத்துவிட்டால் உனக்குக் கஷ்டப்பட்ட கூலி வேண்டாமா? இப்படி விற்றால் நீ எப்படிப் பொயக்கறது? எங்க எஜமானன் கூடையுடன் மூன்று ரூபாய்க்குக் கொடுத்தால் லாபம்! அப்படியே வாங்கிவா என்றாரே! நீ இரண்டு ரூபாய் என்கிறாயே! என்னைக் கேலி செய்கிறாயா என்ன?" என்றான்.

நாயுடு:—அப்பா! எனக்கு என்ன படிக்கத் தெரியுமா? கணக்குத் தெரியுமா? என்னவோ எம்மவ சுட்டுக் கொடுத்து வித்துவரச் சொல்வா! நான் காலணாவுக்கும், ஓர் அணுவுக்கும் தம்பிடிக்குமாக பகல் வரிக்கும் ஆப்படும் சில்லறையைக்கொண்டு கொடுத்துவிடுவேன். நீ இண்ணிக்கி மொத்தமா கேக்கவே இரண்டு ரூபா கேட்டேன். தம்பி, எனக்குக் கணக்கு கிணக்குத்தெரியாது. காலையிலிருந்து இந்தப் பலகாரமுழுதும் பத்துமணி வரையில் வித்தால் என்ன பணம் வருமோ அதை அப்படியே என்மவ கையிலே கொடுத்து விடுகிறேன்—என்றார்.

இதைக் கேட்ட பையன் கடகடவென்று நகைத்து, "ஆயா! பேஷ்! நல்லா கணக்குச் சொல்ரையே! காலைமுதல் பத்துமணி வரையில் அல்லாத்தையும் வித்தாலும் விற்கலாம். அப்படியே இருந்தாலும் இருக்கும். அப்படி கணக்குக் கேட்டால் என்ன சொல்ரது ஆயா! கணக்குத் தெரியாத நீ ஏன் கடைக்கு வருகிறாய்?" என்றான்.

நாயுடு:—தம்பி! என்காலம் முக்கால் வாசியும் ஆயிபூடுது. இன்னுமேயா எனக்குக் கணக்கு வரும்? அது கடக்கட்டும். உங்க ஐயா என்ன சொன்னாரோ அப்படியே எடுத்துப் போப்பா! நானும் ஊட்டுக்குப் போறேன்.

பையன்:—ஆயா! தினம் நீ கூடையோடு கொண்டு வருவதையெல்லாம் என் எஜமானரே வாங்கிக் கொள்கிறாராம். இந்த மூன்று

ரூபா வாயிண்டதாக ஆரானும் கேட்டா சொல்லு. இரண்டு ரூபா ஒனக்கு ஒரு ரூபா எனக்குக் கொடுத்துடு. ஆயா! அப்படி செய்ரையா? என் எஜமானுக்குத் தெரியக்கூடாது.

நாயுடு:—தம்பீ! உன் எஜமானர் யாரு? அவரு பேரென்ன? எங்கிருப்பது? ஊடெங்கே? தம்பி! நீயே ரொம்ப நல்லவனு இருக்கிறேயே. உன் எஜமானனும் மெத்த நல்லவராக இருப்பாரல்ல.

பையன்:—தா! ஆயா! அதெல்லாம் நீ கேக்காதே. அதெல்லாம் சொல்லக்கூடாதுண்ணு எனக்கு உத்தரவு. எங்க எஜமான் என்னைத் திட்டுவாரு. நான் கேக்கரதைச் சொல்லு ஆயா!

நாயுடு:—அப்பா! நீ நல்ல பையனுகிரே! எஜமானுக்கு இப்படி தான் பயப்படணும். எனக்கு 2-ரூபா போதும். மீதி எத்தனை இருக்குதோ அதெல்லாம் நீயே எடுத்துக்கோ! தம்பி! உன் எஜமானுக்கு ஊட்டே நிரய கொயந்தெ யிருக்குதா?

பையன்:—தா! பாத்யா! ஆயா! இதைப்பத்திக் கேக்காதே. உனக்குக் கும்பிடு. இந்தா ரூபா. நாளைக்கு யாரானு வந்து வாங்கினு 3 ரூபாதான்னு சொல்லு. இதை வாங்கிக்கோ. நான் அப்புறம் உன்னைப் பாக்கறேன்.—என்றான்.

இதைக் கேட்ட நாயுடுகாரு பையன் கூறுவதிலிருந்து ஏதோ சந்தேகம் கொண்டு "இதனை இன்றே உறுத்திக்கேட்டால் காரியம் கெட்டுவிடும். தன்னுடைய எஜமானரின் பெயரைச் சொல்ல என் இவன் மறுக்கின்றான்? இதில் நம்முடைய விஷயம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வேறு ஏதோ ரகஸியமிருக்கின்றது" என்று யூகித்தறிந்துகொண்டு இரண்டு ரூபாயை வாங்கிக்கொண்டு எல்லாப் பலகாரங்களையும் கொடுத்துவிட்டனர். பையன் மிகவும் சந்தோஷத்துடன் 1 ரூபாயை மடியில் ஜாக்கிரதையாகச் சொருகிக்கொண்டு பலகாரத்தை எடுத்துக்கொண்டு நாயுடுவுக்குக் கும்பிடு போட்டுக் கூத்தாடிவிட்டு மெல்ல சந்தில் நுழைந்துவிட்டான்.

பிறகு 2, 3 நாட்கள் நாயுடு அவ்வாறே பலகாரங்களைக்கொண்டு வந்துகொடுத்துக்கொண்டே இருந்தார். பையன் கையில் தினம் ஒரு ரூபாய் வீதம் 4 தினத்தில் 4 ரூபாய் சேர்ந்துவிட்டது. அதைக்

கண்டு பையன் மெத்த சந்தோஷமடைந்து நாயுடுவின்மீது அளவற்ற பிரேமை கொண்டான். ஒருநாள் நாயுடு நிரம்பவும் விசனப்படுபவர்போல் நடித்தார்; ஆப்பக்கூடையையும் கவனிக்காமல் ஓவென்று புலம்பிக்கொண்டே இருந்தார். இதைக் கண்ட பையன் மிகுந்த சஞ்சலமடைந்து, 'ஆயா! ஆயா! என் அழுகின்றாய்?' என்றான். இதைக் கேட்ட நாயுடு அப்போதே எதையோ கண்டவர்போல் பிரமித்துப் புலம்பலை நிறுத்தி, "ஆ! என்னருமைத் தம்பி! உன்னை நான் தினம் பார்க்கும்போதெல்லாம் எவ்வளவோ சந்தோஷப்படுகின்றேன். அதாவது என்னுடைய பலகாரத்தைக் கஷ்டப்பட்டு விற்கும் சிரமமின்றி நீயே வாங்குவதை எண்ணி உன்மேல் எனக்கு மெத்த சந்தோஷம். இன்று நான் வரும் வழியில் ஒரு பெண்பிள்ளை வந்து, என்னை வழிமடக்கி, 'தினம் ஒரு பையனுக்கு ஆப்பம் கொடுக்கின்றாயே? இனிமேல் அவனுக்குத் தந்தாயானால் எனக்குக் கோபம் வரும். அந்தத் திருட்டுக் கழுதை என் பேரன். என் சொல்லைக் கேட்காமே கெட்டுப் போவுது. நீ அவனுக்குக் கொடுத்தது தெரிஞ்சால் நாளைக்கி வழியில் எல்லாத்தையும் பிடிங்கி அப்படியே கொளத்திலே கொட்டிடுவேன். நீ பையனுக்குப் பணம் கொடுத்துக் கெடுக்கிறே' என்று சண்டையிட்டா. கண்ணே! நான் என்ன செய்வேண்டா!" என்று ஓவென மீண்டும் புலம்பினார்.

இதைக் கேட்ட பையன் திடுக்கிட்டு வியப்புடன் விழித்து, "ஆ! எங்காயா இங்குமா வந்துட்டா! நீ பாத்தியா!" என்று கேட்டான். இதைக்கேட்ட நாயுடு தமது தந்திரத்திலும் ஏதோ பலித மிருக்கின்றது என்று எண்ணி, பையன் "இங்குமா வந்துட்டா!" என்பதிலிருந்து அவன் இந்த ஊரல்லவென்றும், இதற்குமுன் வேறு எந்த ஊருக்கோ சென்றிருக்கவேண்டும், அதனால்தான் இவன் வியப்புக் குறியோடு கேட்கிறான் என்றும் யூகித்தார்; அதோடு நிற்காமல் மீண்டும் புலம்பிக்கொண்டே, "தம்பி! ஐயோ! நான் என்ன செய்வேன்? இன்று உனக்குப் பலகாரம் கொடுத்தால் உங்காயா நாளைக்குக் கொண்டு வரத்தெ கொளத்தலே கொட்டுவாளாமே! என்ன செய்யறது? உனக்கு நான் கொடுக்கமாட்டேன்னு சொல்றதுக்கு மனம் வல்லயே! யாரோ முத்துச்சாமியாம், உன்னைக் கூட்டிக்கினு வந்தூட்டானும்,'

என்று சொன்னார். அப்போதே, பையனுடைய முகம் திடீரென்று மாறுபட்டது. அவன் தேகத்தில் நடுக்கமுண்டாயிற்று. இதைக் கவனித்த நாயுடு, "ஏண்டாப்பா! தம்பி! உன் யஜமான் பேருதான் முத்துச்சாமியா? அவனுக்குத்தான் நீ வாங்கிக்கினு போறியா?" என்று கேட்டார்.

பையன்:--ஆயா! உன்னை நான் கேக்காதேன்னு சொன்னனே, ஏன் ஆயா கேக்கரே?

நாயுடு:—ஏண்டாப்பா! எனக்கு என்னடா தெரியும்? நான் இத்தனை நாளாய்க் கேட்டேனா? இப்போது உங்காயா சொன்னதனாலே நான் கேக்கறேன். உன் யஜமான் பேரைச் சொன்னா என்ன உனக்குப் பயமா? அவன் என்ன புலியா, கரடியா? நீயேன் அவனுக்குப் பயப்பட்றே. உன் பாட்டி ஏன் திட்றா?

பையன்:—ஆயா! என் பாட்டிக்குப்புத்தி சரியாயில்லே. அதனால் யாரையும் அப்படித்தான் திட்டுவா. நீ அவள் பேச்சை நம்பாதே. என் எஜமானன் பெயர் கண்ணுச்சாமி பிள்ளை. நான் போய் வருகிறேன்.—என்று கூறி வழக்கம்போல் போய்விட்டான்.

நாயுடுகாருக்கு இன்று நடந்த சம்பாஷணையில் சந்தேகம் அதிகரித்தபடியால், அவர் அன்று பையனைப் பின் தொடர எண்ணி அவன் சந்துப்பக்கம் மறைந்ததும் தன்னுடைய கையாளான காளியப்பனை அவன் அறியாதபடி பின்னால் அனுப்பினார். காளியப்பன் யாரோ வழிப்போக்கன் செல்வதுபோல் சென்றான். பையன் அநேக குறுக்குச் சந்துகளைத் தாண்டிக்கொண்டு வேகமாக நடந்தான். காளியப்பனும் அவனைப் பின் தொடர்ந்து சென்றான். பையன் செல்லுமிடம், நாகதாளிப் புதரும், மரமும், செடியும் அடர்ந்திருந்ததேயன்றி, எங்கும் வீடுகள் காணப்படவில்லை. இவ்வழியே காளியப்பனும் தன்னைப் பிறர் காணாவண்ணம் மெல்லச் சென்றான். வெகு தூரம் சென்றதும் பையன் அகஸ்மாத்தாகத் திரும்பிப் பார்க்கும்போது காளியப்பனைக் கண்டுவிட்டான். காளியப்பன் தன்னைப் பையன் கவனித்துவிட்டதும் அப்படியே திடுக்கிட்டு நின்றுவிட்டான்.

## 15-வது அதிகாரம்.

### கல்லும் கரையும்; இரும்பும் கருகும்.

காந்தாமணியின் கொலைக் கேஸ் விசாரணை தினம் வந்துவிட்டது. ஊரெங்கும் ஒரே அமர்க்களமாக இருக்கின்றது. "ஆ! பெரிய ஜெமீந்தாரின் புதல்வன் கொலை செய்துவிட்டு வெட்கமின்றி இன்று தண்டனை அடையப்போகின்றானே! அடாடா! எப்படித்தான் அப்பாவியின் மனம் துணிந்ததோ பச்சைக் கிளிபோன்ற ஒரு பெண்ணைக் கொலை செய்ய" என்று பலபேர் பலவாறாக செல்லப் பாவைத் தூஷித்து அவமதிப்பாக வைகின்றார்கள். சைதாப் பேட்டையிலுள்ள ஜனங்களில் பெரும்பாலோரும் இந்த வழக்கின் விசாரணை வேடிக்கைப் பார்ப்பதற்குச் செங்கற்பட்டு கோர்ட்டிற்குப் போய் சேர்ந்தார்கள். காலை 10 மணிக்குள்ளாக கோர்ட்டில் எள்ளு விழுவதற்கு இடமின்றிக் கூட்டம் நிறைந்துவிட்டது.

அந்தோ! நமது கேசவ முதலியாரின் பங்களாவில் அன்று எவ் விதமிருக்குமென்பதை வரைவதற்கே நமது கையும் எழுதுகோலும் நடுங்குகின்றதென்றால் வேறும் சொல்லவேண்டுமோ? அந்தப் பங்களாவில் ஈ, எறும்பு முதல் கண்ணீர் விட்டுக் கலங்குகிறதென்றே கூறவேண்டும். பணிமக்கள் எல்லோரும் அன்றே வீட்டில் யாரோ இறந்துவிட்டது போலான துக்கத்தையடைந்து கதறுகின்றார்கள். "ஐயோ! என்னப்பனே! சர்வேசா! எங்க சின்ன எஜமானை எப்படியாவது நீ காப்பாற்றமாட்டாயா? ஐயோ! எஜமான் குடும்பம் சீர்குலைந்தாற் போல இந்த உலகத்தில் எந்தக் குடும்பமும் சீர்கெட்டதில்லையே. என்னப்பனே! ஜகதீசா! காருண்யமூர்த்தியே! கமலாயதாக்ஷி! உன்னுடைய அருள் அந்த நிரபராதியாகிய குழந்தையின் மேல் செல்லலாகாதா! என்ன செய்வோம்? ஆ! எங்களுடைய உயிர் முதலில் நீங்கலாகாதா? இன்று மாலை என்ன செய்தி காதில் எட்டுமோ தெரியவில்லையே! நாராயணா! பார்த்தஸாரதே! பரமதயாளா! தீனபந்தோ!" என்று எல்லோரும் கதறுகின்றார்கள். லக்ஷ்மியம்மாள் இந்த விஷயத்தையறியும் சக்தியற்றுப் பெருங்கலக்க முற்று "செல்லப்பா! பத்மவல்லீ!"

என்று கூச்சலிட்டவண்ணமாக ஓரறையில் இருக்கிறாள். கதவு தாளிடப்பட்டிருக்கிறது. குமாஸ்தாவின் நிலைமையை என்ன வென்று கவனிக்கின்றது. அவருடைய தேகம் செல்லப்பாவை விட அதிகமாகமெலிந்து இளைத்துப்போய் விட்டது. நமது சுந்தரனுக்கோ உயிர் இருக்கின்றதா நீங்கிவிட்டதா என்ற சந்தேகமே கொள்ளும்படியாக ஆய்விட்டது. அந்தோ! அவன் பத்மவல்லி, முதலியார், செல்லப்பா ஆகிய மூவரையும் எண்ணி எண்ணி ஏங்கித் தவித்து உருமாறிவிட்டான். ஆகா! குமாஸ்தாவும், சுந்தரனும், நடராஜனும் இந்த வழக்கின் சம்பந்தமாக அலைந்து, திரிந்து, பாடுபடுவதைக் கடவுளொருவரே அறிவார். அவர்கள் ஊணுறக்கத்தை விரும்பி எத்தனை நாட்களாயதோ! வக்கீலிடம் ஓடுவதும், பாரிஸ்டரிடம் ஓடுவதுமா யிருக்கின்றனர். அவர்கள் எந்தவிதமாகவேனும் பாடுபட்டு இந்த வழக்கில் செல்லப்பா நிரபராதி என்பதைக் கடவுள் நிரூபிப்பாரா என்று கவலையுடன் இரவுபகலாகத் திரிகின்றார்கள். இந்திராணியே தற்போது பங்களாவில் சற்று நடமாடுகிறாள் என்றாலும் அவளுடைய கவலையால் அவளும் மெலிந்து சதா அழுத கண்ணும் தொழுத கையுமாய் லக்ஷ்மியம்மாளையும் மற்றவற்றையும் கவனித்து வருகிறாள்.

அந்தோ! செல்லப்பாவின் நிலைமையை நாம் கூறுமலிருப்பதே உசிதம். சிறைவாசத்தினால் நேரிட்ட அவமானத்தைத் தாங்கமாட்டாமையினால் அவனது உயிர் பாதி நீங்கிவிட்டது. தனது அருமைத்தங்கை பத்மவல்லி காணவில்லை என்பதையும், தந்தை உயிர் துறக்கச்சென்றதையும், அவருடைய கடிதத்தையும், தாயின் கதியையும் அறிந்ததன்றிப் பக்கத்துச் சிறையில் தனக்குப் புத்தி போதிக்கவந்த குருபோல் ஒருவர் புலம்பியதையும் கேட்டுத் தாயை நேரிலும் கண்ட அவனுடைய உயிரில் பெரும் பாகமும் நீங்கி விட்டது. அந்தோ! அவனுடைய விசாரணை தினத்தைக் கேள்விப்பட்டு நாள் நெருங்க நெருங்க அவனுடைய மனமானது மிக்ககேவலமான நிலைமையை அடைந்து விட்டது. அவன்பரிதாபகரமாகத்துடிக்கிறான். ''ஐயோ! பாவியான் ஒரு பாவமும் அறியாத உத்தமியாகிய பத்மவல்லியைக் குடிகாரனாகிய ரத்னசாமிக்கு மணஞ்செய்து வைப்பதாகச் சபதம் கூறி அவளை உதாசீனமாக உதைத்துத் தள்ளிவிட்டு

அந்தக்காந்தாமணியின் மோகத்தி லீடுபட்டுச்சென்றதல்லவா முதற் கொடுமை? அதன் பயனே நான் இவ்வித தண்டனைக்குள்ளானேன். அந்தோ! எனது விதியால் உற்ற யாவற்றையும் என்னுருயிர்த் தாய் தந்தையர்மேல் துர்ப்புத்திகொண்டு அவர்களே செய்தார்கள் என்று சொல்லி அவர்கள் வயிறெரிய அவர்களை வைததநின் த்விதீய பலனே இத்தகைய பெரியமீளாத பழியையும் அவமாத்தையும் தூக் குத்தண்டனையையும் அடையும்படி செய்துவிட்டது. ஆ! சண்டாளன் என்னுடைய பாபத்தை நான் எங்கேபோய் எவ்விதம் தீர்ப் பேன்? ஐயோ! என் கண்ணே! பத்மவல்லி! உன்னை உயிருடன் வைத்துப்பார்க்கச் சகியாத இப்பாவிக்குத் தூக்கு தண்டனையே கிடைத்து நீ என்னைத் தூக்கிலிடுங் காலத்திலேனும் எதிரில் நின்று உனது தரிசனத்தையும் எனக்குக் கொடுத்துப் பாவி எனக்கு இத்தகையதண்டனை வேண்டுவதுதான் என்று கூறினல் என் மனம் சற்று ஆறுதலடையுமே என் கண்மணீ! உன்னை நான் சகோதரி என்றும் பாராமல் சொல்லிய கடூரமொழிக்கும், செய்த கொடுமைக்கும், சிறியவளென்பதையும் பாராமல் உன்னைப் பலமுறை நமஸ்கரித்து என்னுடைய தப்பிதத்திற்கு நானே நேரில் உன்னிடம் மன்னிப்புக் கேட்க என் மனம் தவிக்கின்றதே! அந்த பாக்கியம் பாவிக்கு இனி கிடைக்குமோ? ஆ! எனதாருயிர்ப் பிதாவே! பத்மவல்லி! காந்தாமணி! ஐயோ! உன்னுடைய காதல் வலையில் விழுந்ததனலல்லவா எனக்கு என்னருமைத் தாய் தந் தையர் பத்மவல்லியின் மூலமாய்ப் புத்தி புகட்டி அனுப்ப அவளை நான் உதைத்துத் தள்ள நேர்ந்தது. பின் பல ஆபத்துக்களெல் லாம் ஒன்றன் பின்னென்ருக உண்டாயின. ஐயோ! நான் உல கத்தவரைப்போல் பெற்ரேரின் பிரியப்படியே நமது முன்னேரின் கொள்கையை அநுஷ்டித்து வருவதற்கு என் புத்தி ஏன் கெட் டுப் பாழடைந்து விடவேண்டும்? நான் ஆதிமுதல் சரியான நிலை மையில் இல்லாத கொடுமையன்ரே இவ்விதமான துன்பங்களுக் கெல்லாம் காரணம்? ஆ! காந்தாமணி! என் கண்மணீ! என்னு டைய இருதய கமலத்தில் உன்னுடைய காதலான வைரம் எப்படி பதிந்துவிட்டதென்பதைச் சாக்ஷாத் ஈசன் அறிவானேயன்றி, அதை எப்படி பிறரறியக்கூடும்? உன்னுடைய மனம் மட்டும்

கல்லோ ! இரும்போ ! கடினமான பெரும்பாறையோ ? தெரியவில்லையே ! நீ என்னை மீண்டும் நேசிக்காமல் மறுப்பதைப்பற்றியும் நான் துயரப்படவில்லை. என் பேரில் அபாண்டமாக வந்து சுமந்த பழியை உண்மையென்றே நீ நம்பிவிட்டதுமல்லாமல் என் வார்த்தையைச் சற்றேனும் மதியாமலிருந்ததுடன் உன்னுயிருக்கும் இத்துணை துரிதமாக எந்த ஏமனே காத்திருந்து உன்னைக் கொன்று அந்த விபரீதமான பழியையும் என் தலைக்கே வைத்துவிட்ட துக்கம் என்னைத் தூக்கிலிட்டாலும் தீராதே ! ஆ ! நான் என் செல்வத் தங்கையைக் கூசாமல் கொலை செய்துவிடும்படியாகக் கூறியும் மனத்தில் எண்ணியும் வந்த கொடுமையின் பயனே இது வன்றி வேறில்லை. ஐயோ ! இந்த ஜென்மத்தில் என்னால் பலருக்கும் துன்பமேயன்றி இன்பமென்பது சற்றுமுண்டோ? ஜகதீசா ! பாவி என்னை இப்புவியில் ஏன் சிருஷ்டிக்கவேண்டும் ? பெற்றோருக்கும் உடன்பிறந்தவளுக்கும் துரோகம் நினைத்த சண்டாளப் பாவியென்று என்னைக் கண்டோர் நகைத்துக் காரி யுமிழவோ என் பிறவியேற்பட்டது ? அந்தோ ! அந்த மட்டுமெல்லாமல் காதலித்த கன்னிகையைக் கொலை செய்தான் என்ற வசையும் எனக்குப் பாக்கியாகவிருந்ததோ ? ஏ! கருணாகரா ! நானாக உன்னுடைய வைபவப் பாடல்களைப் படித்துத் துதிக்காத பாவியாக விருந்தும் எனதருமைப் பத்மவல்லி தன்னுடைய குயில்போன்ற குரலினால் உன்னைப் பற்றி அற்புதமான பாடல்களைப் பாடக் கேட்ட காலத்தில் அவை என்காதில் நாராசம் காய்ச்சிவிட்டதுபோல் பாய்ந்தனவே ! அந்தப் பாழுங் காதிற்கு பக்கத்துச் சிறையிலுள்ள புண்ணியவான் பாடிய பாட்டுகளொவ்வொன்றும் இனிமையாயிருந்தனவே ! அவை என் மனத்தை யுருக்குகின்றனவே ! இவையெல்லாம் உன்னுடைய மாய வல்லமையல்லவா ? என்னப்பனே ! ஜகத்ரக்ஷகா ! ஆதிமூலமே !

"தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும்
நோயே பட்டொழிந்தே னுன்னைக் காண்பதோராசையினால்
வேயேய் பூம் பொழில்சூழ் விரையார் திருவேங் கடவா !
நாயேன் வந்தடைந்தேன்; நல்கிஆளென்னைக் கொண்டருளே !"

என்று பிரார்த்தித்த பக்தரைக் காப்பாற்றிய காருண்யவள்ளலே ! என்னுடைய உடலைத் தூக்குமரத்தில் தூக்கி என் உயிரை மாய்த்

திட்டேனும் என்னுடைய பாபங்களை மன்னித்து என்னை உன்னடியில் சேர்த்துக்கொள்வாயா? என்னப்பனே! பெரிய ஜெமீந்தார் பிள்ளை கொலைசெய்து தூக்குத் தண்டனையடைந்து இறந்தான் என்ற வசைக்கு என்னை ஆளாக்காமல் என்னுயிரை இப்போதே கொண்டு போகமாட்டாயா? ஏ பரம்பொருளே! அண்ட பிண்டாண்டத்தையும் உனது குட்சியில் வைத்து அடக்கம் செய்து நீயே ஓர் ஆலமரத்தினிலை மேல் ஒரு பாலகனாய்ப் பள்ளிகொண்டு உனது திருக்கோலக் காட்சி தந்தருளிய வள்ளலாகிய உனக்கு என்னுடைய வினையைப் போக்குவது பெரிதாகுமோ? ஆ! என் செய்வேன்? நிமிடம் ஏறவேற என்னுயிர் நிலை துடிக்கின்றதே! தேகம் பற்றி எரிவதுபோல் இருக்கின்றதே! ஜகன்னாதா! ஜகதீசா!" என்று துடித்து, வாடி, வருந்தி, இடிந்து, கண்ணீர் வழிந்து கதறும் தறுவாயில் இரண்டு சேவகர்கள் செல்லப்பாவிருந்த சிறைச்சாலையைத் திறந்துகொண்டு உள்ளே பிரவேசித்து அவனை நோக்கி, "ஐபா! எழுந்திரு. வா வெளியில்" என்று அழைத்தார்கள்.

அதைக் கேட்ட செல்லப்பா இன்றே தனது முடிவுநாள் தெரியும் தினம் என்று எண்ணினான். உடனே அவன் தேகம் திடுக்கென்று ஆடியது. அவனுடைய தேகமுற்றும் வெயர்வை வெள்ளமாகப் பொங்கி வழிந்தது. அவனது இருதயம் இன்னும் அதிகமான வேகத்துடன் படபடவென்று அடித்துக்கொண்டது. அவன் அந்த நிலைமையில் பதில் பேசாமல் எழுந்து வெளியே வந்தான். சேவகர் இருவரும் செல்லப்பாவின் கையில் விலங்கை மாட்டி செஷன்ஸ் கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றார்கள்.

கோர்ட்டில் பெருங் கூட்டம் கூடியிருக்கிறது. செல்லப்பா கண்ணீர் பெருக்கியவண்ணம் தலை குனிந்தபடியே நடந்துவரச்சேவகரிருவரும் அழைத்துவந்து குற்றவாளியின் கூண்டில் நிறுத்தினார்கள். செல்லப்பா வருவதைக்கண்ட ஜனங்களில் சிலர் அவனுக்கு அநுதாபப்பட்டும், சிலர் அவனைத் திட்டி ஏளனமாகப் பேசவும் ஆரம்பித்தனர். சிலர் வழக்கு எப்படி முடிகிறது பார்ப்போம் என்று வேடிக்கையின் மீதே கண்ணாக இருந்தார்கள்.

செல்லப்பாவின் வீட்டுக் குமஸ்தாவும், சுந்தரனும், நடராஜனும் ஒன்றுகூடிப் பாடுபட்டு பெரிய பிரபலமான வக்கீலை யமர்த்தினார்கள்.

இருதரத்து வக்கீல்களும் வந்து கூடினார்கள். சரியான மணிக்கு நியாயாதிபதியும் தமதாசனத்தி லமர்ந்தார். சாக்ஷிகளும் வந்து சேர்ந்தார்கள். சட்ட முறைமைப்படி எதிர் தரப்பு வக்கீல் வழக்கின் சாராம்சத்தை எடுத்துக் கூறினார். முதலில் நியாயாதிபதி செல்லப்பாவை நோக்கி, "நீ குற்றவாளியா, அல்லவா?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட செல்லப்பா கண்ணில் நீர் தாரை தாரையாகப் பெருகியோடிய வண்ணம் குனிந்தபடியே "நான் குற்றவாளியல்ல" என்று கூறினான். உடனே முதல் சாக்ஷியாகப் பச்சையை அழைக்க பச்சை வந்தவுடன் அவனைக் கூண்டில் நிறுத்திப் பிரமாணம் செய்வித்து "இந்த வழக்கில் உனக்குத் தெரிந்த சகலமான விஷயத்தையும் விடாது கூறுவாய்" என்றார். உடனே பச்சை தனக்குத் தெரிந்த விஷயம் முற்றும் ஒன்றுவிடாது அன்று போலீசாரிடம் தெரிவித்தது போல இங்கும் தெரிவித்தான். செல்லப்பாவின் தரப்பு வக்கீல் பச்சையைக் குறுக்கு விசாரணை செய்தபின் இரண்டாவது சாக்ஷி, மூன்றாவது முறையே அன்று அடையாற்றில் போலீஸார் அழைத்தபடி இங்கும் அழைத்து விசாரித்தார்கள். அங்கு செல்லப்பாவிற்கு அனுகூலமாகச்சாக்ஷி சொல்லக்கூடியவர்கள் யாருமில்லாமையினாலும், அங்கு விசாரித்த சாக்ஷிகளின் வாக்குமூலங்களும் வழக்கு ஜோடித்திருப்பதும் எல்லாம் செல்லப்பாதான் கொலைசெய்த குற்றவாளி என்பதற்கு அனுகூலமாகவே இருந்தமையாலும், இந்த வழக்கிற்கு முதல் ஆதாரமாகச் செல்லப்பா காந்தாமணிக்குக் கடித மெழுதியதற்கு அவள் மறுத்ததையும், கடற்கரையில் கண்டு பேசியதையுமே கொண்டு அந்தக் காந்தாமணியின்மீது அவன் கடும் பகை கொண்டு அவளைக் கொலை செய்திருப்பான் என்று தீர்மானம் செய்துகொண்டார்கள். செல்லப்பாவின் தரப்பு வக்கீல் சாமர்த்தியமாகக் குறுக்கு விசாரணை செய்தும் பயனற்றதாய்விட்டது. ஜூரர்களும் அவன் குற்றவாளி தான் என்று யோசித்துக் கூறிவிட்டனர். நியாயாதிபதியும் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்புப் பத்திரமெழுதிப் படித்துவிட்டார். அந்தோ! அங்குக் கூடியிருந்த ஜனங்களுள் பெரும்பாலோர் பெருந்துயரத்திலாழ்ந்தனர். "ஐயோ! இவன் முகத்தைப் பார்த்தால் எப்பேர்ப்பட்ட கல்லும் கரைந்துருகுமே! இவ

னுக்கு இத்தகைய தண்டனையா வரவேண்டும்'' என்று கலங்கினர் பலர். சுந்தரன், நடராஜன், குமாஸ்தா இன்னும் அவனைச் சேர்ந்த மனிதர்களெல்லாம், அவ்விடத்தில் தாங்கள் நிற்பதையும், இடம் நீதிஸ்தலம் என்பதையும் மறந்து, நெருப்பின்மீது புழுவைப்போல் துடித்துத் தவித்தனர். அங்குள்ள ஜனங்களில் சிலர் இவர்களுக்குத் தேறுதல் கூறித் தேற்றுகின்றூர்கள்.

செல்லப்பாவுக்குத் தூக்கு தண்டனை விதித்ததும், அவனுடைய மனம் ஒருவிதத்தில் இன்பமும் மற்றொரு விதத்தில் துன்பமும் அடைந்தது. பிறகு கோர்ட்டும் கலைந்தது. ஜனங்களில் சிலர் 'என் அப்பொழுது மனந்துணிந்து கொடுமை செய்தான்? இப்பொழுது தூக்குமரத்தில் மாள்கிறுன். 'அடாது செய்தவன் படாது படுவான்' என்பது கேட்டதில்லையா?'' என்று பேசிக்கொண்டனர். சிலர் வழக்கின் ஜோடிப்பைப் பார்த்தால் இவன்தான் கொலை செய்தான் என்று எண்ணும்படியாக விருக்கின்றது. அவன் முகத்தைப் பார்த்தால், இவன் குற்றம் செய்திருப்பானென்று சிறிதும் எண்ண இடமில்லாமல் இருக்கிறது'' என்று அனுதாபப்பட்டனர். இவ்வாருகப் பேசிக்கொண்டே எல்லோரும் நீதிஸ்தலத்தை விட்டகன்றனர். செல்லப்பாவையும் சிறைக்கு அழைத்துச் சென்ருர்கள்.

வீடு திரும்பிய சுந்தரம் முதலியவர்கள் தாங்கமாட்டாத துயரமேலிட்டுக் கதறிப் புலம்பித் துடித்தார்கள். அவர்கள் தமது வக்கிலைக்கொண்டு யோசித்து ஒரு மனு எழுதி ஐகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

சுந்தரனே பத்மவல்லியைப்பற்றிய தகவல் எதுவும் தெரியாமல் தவிக்கிருன். அவன் செல்லப்பாவின் விஷயமாக அலைவதுடன் பத்மவல்லியைப்பற்றியும் தன்னுல் கூடிய முயற்சிகளைச் செய்து எங்கெங்கோ புலன்கள் விசாரித்து எவ்வளவோ கஷ்டப்படுகின்றுன். எத்தனை செய்தும் அவள் செய்தி ஒன்றும் தெரியவில்லை. அதே ஏக்கங்கொண்டு சுந்தரன் துரும்பிலும் துரும்பென இளைத்துவிட்டான். சதாகாலமும் பத்மவல்லியையே எண்ணியெண்ணிக் கண்ணீர் விட்டான். ''ஆ! உன்னை நான் எங்குக் காண்பேன்? என்று காண்பேன்? ஊருக்குச் செல்லுமுன் நீ என்

னைப் பிரிந்திருக்க முடியாதென்றும் சீக்கிரம் வந்துவிட வேண்டு மென்றும் கூறினையே! என் கண்ணே! என்னையே தனித்து விடுத்து நீ எங்கு மாயமாய் மறைந்தனையோ! அல்லது, என்ன ஆபத்தில் சிக்கி இருக்கின்றாயோ! அல்லது, உனது உயிர் எந்தவிதமான நிலைமையில் இருக்கின்றதோ, தெரியவில்லையே! கண் மணி! பத்மம்! எனதின்ப பத்மா! எனதாசைப் பத்மா! என் னுருயிர் பத்மா! எனதன்பைக் கொள்ளைகொண்ட கோகிலத்வனி பத்மா! ஐயோ! உனது பிரிவைத் தாங்கமுடியவில்லையே! என் னுயிர் நிலையே! என் காதற்கிளியே! நான் என்ன செய்வேன்? எவ்விதம் மண்மீதுய்வேன்? உன் பிதாவினுடைய தகவலும் ஒன் றும் தெரியவில்லையே! உன் தாயினுடைய சித்தப்பிரமைக்கு எவ்விதமான சிகிச்சை செய்தும் உன்னுடைய பிரிவாற்றாமையி லும் உனது அண்ணனின் துயரத்திலேயும் மூழ்கிக் கிடப்ப தால் ஒன்றும் பலிக்கவில்லையே! ஏ கருணாநிதே! இவ்விதமான சோதனை செய்வது உனது கருணைக்கழகோ? உன்னை இடை விடாது பஜிக்கும் பக்தர்களுக்குத் துன்பமில்லை என்று கூறி யுள்ள பெரியோரின் வாக்கியம் பொய்த்துப் போகலாமோ! மேலும் உன்னை ஒரு விநாடிகூட மறக்காமல் தோத்திரம் செய்துகொண் டிருக்கும் என் கண்மணியையும் அவளுடைய பெற்றோரையும் நீ இவ்விதத் துன்பத்திற்கு ஆளாக்கலாகுமா? ஏ ஜகதீசா! உன்னு டைய அருள்மாரியை இவ்விடம் சற்றுப் பொழியலாகாதா? என் கண்ணான கண்மணியைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைக் குமோ!" என்று மிகுந்த விசனத்தில் மூழ்கித் தவிக்கின்றான். அவன் தினம் இருமுறை துப்பறியும் நாயுடுவின் இல்லமேகி விசா ரித்து வருவான். இவ்விதமே நாட்கள் சென்றுகொண்டிருந்தன. ஒருநாள் இவன் துப்பறியும் நாயுடுவின் வீட்டிற்குச் சென்றிருந்த காலையில் அங்குள்ள நாயுடுவின் குமாஸ்தாவிற்கு ஒரு கடிதம் வந் தது. அதில் தந்திபோலச் சில வரிகளே காணப்பட்டன.

"எத்தனையோ பிரயாசைப்பட்டு நான் முயற்சிக்கின்றேன். கடவுளிருக்கிறார். செல்லப்பாவின் வழக்கு அப்பீலில் இருப்பதைக் கேட்டு இன்பமும் துன்பமுமடைகின்றேன். பத்மவல்லியின் உயி ருக்கு ஹானியில்லை என்று யூகிக்கின்றேன். நிச்சயமாக மறுத

பாவில் தெரிவிக்கிறேன். இச்செய்தியை வெளிப்படுத்த வேண்டாம். செல்லப்பாவின் வழக்கிற்கு வேண்டிய விஷயம் ஒன்றுமே இன்னும் புலப்படவில்லை. கடவுள்தான் காப்பாற்றவேண்டும்.''

R. R. N.

மேற்படி கடிதம் வந்ததைக் குமாஸ்தா படிக்கும்போது சுந்தரன் பின்புறம் மறைந்து நின்று தெரிந்துகொண்டான். அவன் 'பத்மவல்லியின் உயிருக்குஹானியில்லையென்று யூகிக்கின்றேன்' என்ற வாக்கியத்தைக் கண்டு மெத்த மகிழ்ந்தானெனினும் திட்டமான செய்தி எதுவும் தெரியவில்லையே! என்று ஏங்கியவனாய், அந்தக் கடிதம் வந்த உரையைக் கவனித்தான்; பாலக்கோட்டை என்ற முத்திரையைக் கண்டுகொண்டு ஒன்றையுமறியாதவன் போல் உட்கார்ந்தான். நாயுடுவின் குமாஸ்தா கடிதம் வந்த செய்தியையே சுந்தரனுக்குக் கூறாமல் ஏதோ பேச்சுக் கொடுத்து அனுப்பிவிட்டார். அங்கிருந்து நேரே வந்த சுந்தரன், பாலக்கோட்டை எங்கிருக்கிறதென்று விசாரித்துக்கொண்டு தானும் அங்குச் சென்று செய்தியை அறியவேண்டுமென்று எண்ணி அன்றே பாலக்கோட்டைக்குப் பிரயாணமாய் விட்டான்.

சிறையிலிருக்கும் செல்லப்பாவின் கதியைக் கூறவும் வேண்டுமோ! அவன் மனமானது அலைகடல் துரும்பென அலைகின்றது. பத்மவல்லியின் தகவல் இன்னும் ஒன்றும் தெரியவில்லை என்பதைக் கேட்ட அவன் மனம் முன்னிலும் அதிகமாகத் துடிக்க ஆரம்பித்தது ''ஆகா! நான் மூடமதியினால் சொல்லிய வார்த்தையைத் தன் காரியமாகும் பொருட்டு முடித்துக்கொண்ட ரத்தினசாமி பிறகு இவ்விடம் எட்டிப் பார்த்தானா! சே! சே! என்ன சிநேகம்! என்ன நம்பிக்கை! ஐயோ! பாவி ஏன் ஆதியிலிருந்து நல்வழியில் நடக்காமல் பலவிதமும் கெட்டலைந்து கடைசியில் சிறைவாசம் செய்து தூக்கிலிடப்பட்டு மாளவும் என் கதியாய் விட்டதே! ஐயோ! என்னப்பனே! இச்சிறு வயதில் இச்சிறையில் யான் இதுகாறும் பட்ட துன்பமும், அடைந்த அவமானமும் போதுமே இனி என்னை இவ்விடத்திலேயே உன்னடிக்குப் பாத்திரமாக்கலாகாதா? கடப்பாறையை விழுங்கி சுக்குக்கியாழம் குடித்ததுபோல் நான் மலைகளைப்போலப் பாவங்களைச் செய்துவிட்டு அவற்றையெல்

லாம் மன்னிக்கும்படிக்கு மன்றாடுகிறேன்; அது தகாததென்று நினைக்கின்றாயோ? அப்பனே! அவ்விதம் நினைக்காதே. உனது நாமமாகிய அவுடதத்தை உட்கொண்டால் எப்பாவமும் நீங்குமென்று பெரியார் பாடியுள்ளதை என்னுருயிர் பத்மம் பாடியபோது கேட்டவையெல்லாம் பாவி எனக்கு இப்போது நன்றாக ஞாபகத்தில் வருகின்றனவே! என்னப்பனே!

"பற்றேலொன்று மிலேன் பாவமே செய்து பாவியானேன்
மற்றேலொன்றறியேன் மாயனே! எங்கள் மாதவனே!
கல்தேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா!
அற்றேன் வந்தடைந்தேன் அடியேனை யாட்கொண்டருளே!

திருவேங்கட நாதனே! மானிட ஜன்மங்கொண்ட ஒவ்வொருவருக்கும், நல்ல மதியுள்ளவன் என்று புகழக்கூடிய பொருளாகிய மதி எனப் படைத்துள்ளது என்மட்டில் எவ்விதமுள்ளதெனில் மதி - சந்திரன், மதி - மாதம், மதி - மனிதரை மதிப்பது இதுபோன்ற மதியாக ஏற்பட்டதேயன்றி நல்வினையைச் செய்து பெற்றோரைப் போற்றி மகிழ்வித்து, உன்னுடைய நாமாம்ருதத்தை யுண்டு பிறவி நீத்துப் புனிதமடையக்கூடிய கருவியாக இல்லையே! பாதகனாகிய நான்,

"தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்
பெரியேனாயினபின்பிறர்க்கே யுழைத் தேழை யானேன்
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா
அரியே! வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே!

என்னப்பனே! வேங்கடவா! அறிந்துமறியாலும் அநேக கோடி பாவச் செய்கைகளையே செய்து என்னுடைய வாணாளிற் பாதியும் போக்கிவிட்டேன். என்னப்பனே!

"எப்பாவம் பலவும்இவையே செய்திளைத் தொழிந்தேன்
துப்பா! நின்னடியே தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன்
செப்பார் திண்வரைசூழ் திருவேங்கட மாமலை என்
அப்பா! வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே"

ஐயோ! பாவி எனக்களித்த உறுப்பில் ஒன்றையேனும் ஒரு வினாடி கூட உன்னுடைய வழியில் அர்ப்பணம் செய்யாத சண்டாளனாய்விட்டேனே! என் வாயினால் நாராயணா என்று ஒருதரம் கூறியிருப்

பேனு! அல்லது உனது திவ்விய மங்கள விக்கிரகசேவையை என் கண்ணாரக் கண்டிருப்பேனு! அல்லது, நல்ல சத்பாத்திரங்களி ஞல் உனது எழில் நிறைந்த பிரபாவங்களைக் கூறவாகினும் இக் காதால் கேட்டிருப்பேனு! அல்லது, நானே புத்தகத்தில் கண்டு மனதால் கவனித்திருப்பேனு! ஒன்றுமில்லையே. என் செல்வத் தங்கை பத்மவல்லி கூறித் துதிக்கும் காலத்தில் அதைக் காதால் கேட்கச் சகியாமல் அவளைத் திட்டும்பொருட்டு அத்தரு ணம் எதிரில் நின்ற காலத்தில் செவியில் விழுந்த இப்பாடல்களின் ருசியைப் பாவி யான் இப்பொழுதுதானே தெரியப் பெற்றேன். ஐயோ! துஷ்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக்கொண்டு குடிப்பதும், பீடி பிடிப்பதும், பணத்தை வாரி இறைப்பதும், மேனுட்டு நாகரிகத்தில் மூழ்கிப் பலவிதமான கேளிக்கைகளில் ஈடுபட்டு உன்னை நினையாமலிருந்த நெஞ்சை என் செய்தாலும் தீராதே! அதை அத்தூக்குமரத்திலிடுவதும் போதாதே! ஆ! என்னப்பனே! என்னையறிந்தே நான் பாவச்செயலைச் செய்திருந்த போதிலும், கொலை, களவுமட்டும் செய்தறியேன். ஆ! என் பத் மத்தைக் கொலை செய்யும்படி கூறியது இவ்வாயினுலன்ருே? அது பாவத்திலும் பெரும் பாவமல்லவா? என்னப்பனே! புது நாகரிக மயக்கத்திலீடுபட்டு நான் தெரிந்தும் தெரியாமலும் செய்துள்ள பாவங்களைப் போக்கி மன்னித்து என்னை உன்னடிக்குச் சேர்த்துக் கொள்ளலாகாதா? உனது திருநாமத்தைச் செப்பிய எவர்க்கும் பாவமற்றுவிடும் என்று,

"கண்ணுய் எழுலக்குயிராய வெங்கார் வண்ணனை
விண்ணேர் தாம்பரவும் பொழில் வேங்கடவேதியனை
திண்ணர் மாடங்கள்சூழ் திருமங்கையர் கோன்கலியன்
பண்ணர் பாடல்பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே!"

சொல்லியிருக்கின்றதே. இப்பாவின் கடைசியில் தெரிவித்த என்னப்பன் கலியனென்ற நாமம் பூண்ட திருமங்கையாழ்வாரின் திருவடி சரணமடைந்து உன்னைவேண்டுகிறேன். என்னப்பா! வேங் கடவா! என்னுடைய மானத்தை இழந்து தவித்தது போதும். அப்பனே! இனி என்னை இத்தருணமே உனதடிக்குச் சேர்த்துக் கொள்வாய். உலகத்தில் எல்லா ஜென்மத்தையும் விட மானிட

ஜென்மமே பெரிதென்று கூறுவது என்வரையில் வித்தியாசமாய்க் கேவலமாய்விட்டதே! மானிட ஜென்மமெடுத்து நானாவித பாபம் செய்வதற்கே புத்தி செல்வதேயன்றி உண்மையாகிய உன்னைத் துதிப்பதில் செல்லவில்லையே! கேவலமான பூச்சி, புழுக்கள், பக்ஷி, பறவை, கல், மரம், செடி, மலை முதலிய ஜென்மமெடுத்தால் பாவம் செய்வதற்கேனும் ஏதுவில்லாமலிருக்காதா? என்னப்பனே!

"ஊனேறு செல்வத் துடன் பிறவி யான் வேண்டேன்
ஆனேறேழ் வென்றா னடிமைத் திறமல்லால்
கூனேறு சங்க மிடத்தான் தன் வேங்கடத்து
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே.

என்னப்பனே! ஜகதீசா! இனிப்பாழும் இச்செனமமின்றி,

"ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே"

உனது தடாகத்தில் மீனாய்ப்பிறந்து நீயன்பாயணியும் தாமரைப் புஷ்பத்தின் அருகாமையிலிருந்து அதையேனும் தினம் வணங்கித் துதித்து மகிழ்வடைய அருள்வாயே! கானாற்று வெள்ளமாகிய சம்சாரத்தில் பொத்தலுள்ள தோணிபோன்ற மானிட ஜென்மமெடுத்து மீளாவகையின்றி மூழ்கிடாமல்,

"ஒண்பவள வேலை யுலவுதண்பாற் கடலுள்
கண்டுயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்
செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே."

கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமிகும் செல்வமும் மிவ்வரசும் யான்வேண்டேன்
எம்பெருமா னீச னெழில்வேங் கடமலைமேல்
தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே..

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கு
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

என்னப்பா! திருவேங்கடமலையானே! எனது துயரத்தைக் கண்டு செய்த குற்றங்களைப் பொறுத்து அன்னையின் தயையை அடியேன் பால் காட்டி ஆதரிக்கமாட்டாயா? உன்னையின்றி எனக்கு வேறு துணையுண்டோ? என்னை விட்டாலும் தொட்டாலும் உன்னடியே சரணம் புகுந்தேன். என்னப்பனே! என்பாவி ஜன்மத்தில் இதுகாறும் உன்னை நினையாது பாழாக்கியது போல இனியும் நான் உன்னை மறப்பேனோ?

என்னுயிரே! அமுதே! என்னையாளுடையப்பனே! என் பிழையைப் பொறுத்தருள்வாயே! என்னண்ணலே! பாவியிச் சடலமேந்திப் பாவமே செய்தொழிந்தேன். பாவியின் மனம் பதறுகின்றது. என் செய்வேன்? ஈசனே! ஏதுமறிந்திலேன். முன் செய்த வினையும் மூண்டு இச்சிறையில் கண்ணீர் விட்டுக் கதறியே புலம்பப் பண்ணிய பாவத்தின் பயனோ அறிகிலேன். ஆ! ஜகதீசா!

"படமுடியா தினித்துயரம் படமுடியாதரசே
பட்டதெலாம் போதுமிந்தப் பயந்தீர்த்தப் பொழுதென்
உடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்டுன்
உடலுயிரா தியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண்
மணியேயென் குருமணியே மாணிக்க மணியே
நடனசிகா மணியேயென் னவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே."

என்னப்பனே! என்னுடைய மனத் துயரத்தைத் தாங்கமுடியவில்லையே!" "பாவியின் மனம் வெடித்துவிடும் போல இருக்கின்றதே யன்றி வெடிக்கக் காணவில்லையே! இதுவும் உண்மையல்லவா! ஐயோ! என் செய்வேன்! எப்படி உய்வேன்! என்னப்பனே! என் தந்தையின் முகத்தையும் என் கண்ணன சகோதரி பத்மவல்லியின் மதிபோன்ற முகத்தையும், சித்தக்கலக்கம் நீங்கிச் சிரித்த முகத்துடன் என் அருமை அன்னையாரையும், இத்துணைத் துன்பத்தை யனுபவிக்க ஏதுவாகவிருந்தாலும் என் உள்ளத்தைக் கொள்ளைக்கொண்ட காந்தாமணியின் அழகிய முகத்தையும் இனி இப்பாவி காண்பேனா? ஐயோ! இவை யெல்லாம் நினைக்கும் போதே என் நெஞ்சம் பகீர் என்கின்றதே! என் மனம் பாகா

யோடுகின்றதே! பத்மா! பத்மா! அப்பா! ஐயோ காந்தாமணீ! என்னுருயிர்த் தந்தையே! தாங்கள் இத்தருணம் எந்த இடத்தில் எந்த நிலைமையில் இருந்தபோதிலும் அடியேன் சரணமடைந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்வதை அங்கீகரித்து க்ஷமிக்கவேணும். அப்பா! பத்மா! உனக்குமதுவே. ஆனல் நீ என்னைவிடச் சிறிய வளாகையால் சரணமடைவதை நீக்குகின்றேன். என் பத்மவல்லி யின் புகைப்படத்தை யேனும் கொண்டுவரச் சொல்லி அதைக் கண்டு களித்தால்தான் என் மனம் நிம்மதியடையும். ஐயோ! என்னை யறியாது என் மனமும் தேகமும் பதைத்துத் துடித்துச் சித்திரவதைக்கு ஆளாகின்றதே! என்ன செய்வேன்? என்னப்பனே! ரக்ஷகா! என்னுடைய துயரை ஆற்றமாட்டாயா? என் மனதைத் தேற்றமாட்டாயா?" என்று புலம்பிக் கண்ணீர் விட்டுப் புரண்டு துடிப்பதும், பின்னும் எழுந்து தொழுது நிற்பதுமாகத் தவிக்கின்முன் செல்லப்பா.

இப்படியிருக்கையில் அப்பீல் செய்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்கள். செல்லப்பா தரப்பின் வக்கீல் முன்னிலும் அதிக சாமர்த்தியமாயும், சாதுர்யமாயும் வாதித்தும் ஐகோர்ட்டார் கீழ் கோர்ட்டாரின் தீர்ப்பைச் சரியானதென்றும் அவனே குற்றவாளி என்பது நிதர்சனமாகச் சாக்ஷிகளால் ருஜுவாய்விட்டதென்றும், தாமும் கீழ்கோர்ட்டின் தீர்ப்பையே ஆமோதிப்பதாகவும் கூறிச் செல்லப்பாவுக்குத் தூக்குதண்டனை விதித்ததை ஊர்ஜிதப்படுத்தி விட்டார்கள்.

அந்தோ! அதைக்கேட்டவர்களுடைய மனமும், செல்லப்பாவின் மனமும், பணிமக்களின் நிலைமையும் இந்தவிதமாயிருந்ததென்று நாம் விவரித்துக்கூறுவதைவிட அதை யூகித்தறிந்து கொள்வதே மெத்த நலம். நல்ல கோடைகால வெயிலில் பாலை வனத்தில் அகப்பட்டுக்கொண்ட மனிதனின் நிலைமையும் இவர்களுடைய நிலைமையும் ஒன்ருக விருந்ததென்றே கூறலாம்.

---

# 16-வது அத்தியாயம்

## வீரசிங்கத்தின் சூரச்செயல்

பலகாரங்களை வாங்கிக்கொண்டு செல்லும் பையன் தன்னை யொருவன் பின் தொடர்ந்து வருவதைக் கண்டதும் அப்படியே அசைவற்று நின்றுவிட்டான். பையன் தன்னையே அவன் தொடர்ந்து வருவதாய்த் தெரிந்துகொண்டான். அவன் தன்னைத் தொடர்ந்து வந்தவனை விரைக்க விரைக்கப் பார்த்து, "ஏனையா! என்னைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றுவிட்டாய்? ஏன் என்னோடு வருகின்றாய்?" என்று கேட்டான். இதற்குப் பின்னால் நாயுடுவும் வந்து சேர்ந்தார். நாயுடு பையன் தம்மைக் கண்டுகொண்டதை யறிந்து தாம்அவனைத் தொடர்ந்து வந்ததாகத் தெரிவித்துக் கொள்ளாமல் தந்திரமாய்ப் பதில்சொல்ல எண்ணி, "அப்பா! தம்பீ நில்லடா! நில்லடா! என்று நான் கூறுவது உனக்குக் கேட்கவில்லையா? ஓடுகின்றாயே! நான் ஒரு முக்கிய காரியமாகத்தான் வருவேன். அநாவசியமாய் வரமாட்டேண்டாப்பா! நீ ஆப்பம் வாங்கிக்கொண்டு வந்ததும், உன் பாட்டி அங்கு தூரத்தில் வந்தாள். அதைக் கண்டு நான் உடனே உனக்கு அதைத் தெரிவிக்க இவனை அனுப்பினேன். அதற்குள் அவள், என் கடையையே நாடி வந்தாள். நான் அவளைக் கடையில் தந்திரமாய் உட்கார வைத்துவிட்டு "இதோ தேகபாதைக்குச்சென்று வருகிறேன்" என்று கூறி ஓடிவருகிறேன். உன்னை என்னவோ அவள் பார்த்து விட்டாள். என்னைக் கேட்டால் நான் என்ன பதில் கூறுவது என்பதைத் தெரிந்துகொள்ளவும், வந்தவன் நீ தான், அல்லது, வேறு பையன் என்று அவளுக்குத் தெரிவிப்பதா என்பதைக் கேட்கவுமே வந்தேன். நீ என்ன சொல்லுகிறாய்?" என்றார்.

இதைக் கேட்ட பையன், சற்று மாறுதலையடைந்தவனாய், "ஆயா! வந்த பையன் நானல்லவென்று கூறிவிடு" என்றான்.

நாயுடு:—பையனுடைய ஊரைக் கேட்டுத் தெரிந்துகொண்டால் அனுகூலமாக விருக்கும் என்று எண்ணிப் பேசத் தொடங்கி, "ஏண்டாப்பா! இப்படி செய்யலாமே. உன்னை வேறு பையனென்று

நான் சொன்னால் ஒருகால் அவள் நம்பாமல் உன்னைத் தேடு வதற்காக என் கடைக்கு நீ நாளைக்கு வரும் வேளையில் வந்திருந் தாலும் இருப்பாள். அப்போது என்ன செய்வது? ஆனதால உன்னைப்பற்றிக் கேட்டால் நான் உன்னுடைய ஊருக்குப் போய் விட்டதாகச் சொல்லிவிடுகிறேன். உடனே உன்னைக் காண ஆசை கொண்டு ஊருக்கே போய்விடுவாள். இது நல்ல உபாயமில்லையா? உன்னுடைய ஊர் எது? உன் தாயின் பெயரென்ன?'' என்று தந்திரமாகக் கேட்டார்.

**பையன்:**—ஆமாம்; ஆயா! இது நல்ல உத்திதான். நீ என்ன சேரேன்னுகா நானு நேத்தே ஊருக்குப் பூட்டதாகச் சொல்லிடு. எங்க ஊரு மருத்தாம்பூண்டி. எங்கம்மா பேரு பாப் பாத்தி; இதுதாஞ்சரி; ஆயா! சீக்கிரம் போ. இங்கே வந்துடப் போரா!''—என்றான். பிறகு நாயுடு அதை ஆமோதித்தவர் போல் நடித்து, அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டார். கூட வந்தவனும் திரும்பிவிட்டான். பின்னும் தாம் துரத்திச் செல்வது சரியல்ல; பையன் நம்மீது சந்தேகங் கொள்வான். பிறகு காரியமே கெட் டுவிடும்—என்று எண்ணியவராய்த் திரும்பி அவர் நேரே வீடு வந்து சேர்ந்தார்.

அவர் அன்று முழுதும் ஆழ்ந்த யோசனைசெய்து மிக்க வருந் தினார்; அப்பீல் கேஸ் என்னவாயிற்றோ ஒன்றும் தெரியவில் லையே என்று கலங்கினார்; தாம் அந்தப் பையனுடைய ஊருக்கு ஓர் ஆளையனுப்பி அவனுடைய தாய் தந்தையை வரவழைத்துத் தமது பையனை அக்கிரமமாக இவர்கள் அழைத்து வந்துவிட்ட தாக மோசடியான வழக்கு இவர்கள்மேல் தொடர்ந்து போலீ ஸாரை அழைத்துக்கொண்டு தாமம் கூடச் சென்று அவர்களைப் பிடிக்கவும் உண்மையை அறியவும் இதுவே தக்க யோசனை என்று எண்ணி, அன்றே தமது ஆட்களில் ஒருவனைப் பையனின் ஊருக்குத் துரத்தினார். பிறகு வழக்கம்போல் பையனும் பல காரம் வாங்கிக்கொண்டு போனான். ஊருக்குச் சென்ற நாயுடு வின் கையாள் ஒருவாரமாயும் திரும்பி வரவில்லை. இது நாயுடு விற்கு அதிகக் கவலையை யுண்டாக்கியது.

ஒருநாள் சமாச்சாரப் பத்திரிகையைப் பார்க்கையில் அதில் "செல்லப்பாவின் கொலை வழக்கு அப்பீலில் ஐகோர்ட்டார் கீழ்க் கோர்ட்டார் சொல்லிய தீர்ப்பையே ஆமோதித்துத்தண்டனையைஊர் ஜிதப்படுத்தி விட்டார்கள்" என்ற செய்தி இருக்கக் கண்டார். கண்டதும், அவர் மனம் நெருப்பின்மீது விழுந்த புழுவெனத் துடித் தது. "ஐயோ! நாம் எத்தனை பிரயாசையாய்ப் பாடுபட்டும் பயன் கிடைக்கவில்லையே! சில வழக்குகள் எத்தனையோ மாதக் கணக்கில் இழுத்துக்கொண்டு கிடக்கின்றன. இவர்களுடைய வழக்கு இத்தனை துரிதமாக முடிந்துவிட்டதே! ஐயோ! என்ன செய்வேன்'! என்று தண்டனை நிறைவேற்றுவார்களோ தெரியவில்லையே! நாம் எப் பாடு பட்டேனும் இன்னும் சீக்கிரம் இரண்டு மூன்று தினத் தில் செல்லவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு மறுநாள் பையனுடைய வரவை எதிர்பார்த்திருந்தார்.

காலையில் பையன் வந்ததும், வழக்கம்போல் பலகாரங்களை வாங்கிக்கொண்டு திரும்பிவிட்டான். அன்று நாயுடு உடனே தமது மடியிலிருந்த தூரதிருஷ்டிக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு பையன் அறியாதபடி வெகு ஜாக்கிரதையாய்ப் பின்னே அந்தக் கண்ணாடியை வைத்துப் பார்த்துக்கொண்டே, சற்று தூரத்திலேயே சென்றார். பையன் எத்தனையோ பெரிய புதர் களையும், தோப்புகளையும், ஒற்றையடிப் பாதைகளையும் அங்குக் குறுக்கிட்ட ஒருகால்வாயையுந் தாண்டி அப்பால் சென்று சுமார் அரைமயில் தூரம் வரையில்சாதாரணமான பாதையில் நடந்த ஒரு சிறிய குடிசையில் நுழைவதையுங் கண்டார்.

இப்படி, பின்தொடர்ந்து தூரத்திலிருந்து பார்த்துக்கொண் டிருந்த நாயுடு அங்கிருந்த ஒரு பின்னைமரத்தின்மறைவில் நின்று கொண்டு அந்தக் குடிசையையும் இடத்தையும்கூர்ந்து கவனித்துக் கொண்டார். தாம்எவ்விதம்அவ்விடம்சென்று அங்குள்ள உளவுகளைக் கண்டுகொள்வது என்றயோசனையே அவருக்குப்பெரிதாய்விட்டது. அவர் மெல்ல அந்தப்பின்னைமரத்தின் மேல் ஏறி உட்கார்ந்தார். அவ் விடத்தில் இந்தக் குடிசைக்குள்ளிருந்து பையனும் வேறொரு கிழவி யும் அடிக்கடி வெளியில் வந்து போகிறார்களேயன்றி வேறு யாரை

யும் காணவில்லை. நாயுடுகாருமரத்தின் மீதேவெகுநேரம் உட்கார்ந்து யோசனைசெய்தபின் எழுந்து மரத்தைவிட்டு இறங்கித் தமதிருப் பிடத்திற்குச்சென்று தமதுபோஜனுதிகளைமுடித்துக்கொண்டுதமது கையாட்களையழைத்து "உங்களில் சில பேர் நான் செல்லுமிடத் திற்கு என்னேடு கூடவந்து நான் சொல்கிறபடியே கேளுங்கள். வேலை சீக்கிரமாக முடிய வேண்டும்" என்று கூறிவிட்டுத் தாம் முன் போல் பைத்தியக்காரக் கோலத்தைப் பெண்வேடத்துடன் கொண் டார். தேகமுற்றும் ஏதோ விகாரமான வஸ்துவைப் பூசிக்கொண்டு, தலையில் ஜடையை நிறையத் திரித்துவிட்டுக் கொண்டு, ஏதேதோ முக்கியமான சாமான்களை யெல்லாம் எடுத்து மடியில் வைத்துக் கட்டிக்கொண்டு, ஒரு கால் ஊனமுள்ளவர் போல் அக்களில் வைத்தூன்றி நடக்கும் கொம்பை எடுத்துக்கொண்டு நொண்டியைப் போல் கோலம் பூண்டு தயாரானுர்; அன்று நன்ருக இருள்வந்த பின்னர் அவ்விடத்தை விட்டுத் தம்மையோர் போர்வையால் மூடிக் கொண்டு கிளம்பிவிட்டார். அவருடன் ஆயத்தமாகச் சில வேலை யாட்களும் கிளம்பினுர்கள். இவர்கள் நாயுடு சென்ற வழியே சென் ருர்கள். நாயுடு இவர்களை அங்கு மரங்கள் அடர்த்தியாயிருந்த ஓர் இடத்தில் தங்கச்செய்து அவர்களுடன் ஏதோ விஷ யங்களைக் கூறிவிட்டுத் தாம் போர்வையை நீக்கி அவ்விடத்தி லிருந்து கிளம்பிச் சற்றுதூரம் சென்றதும் தான் கையில்வைத்துக் கொண்டிருந்த தடியை ஊன்றிக் கொண்டு கண்தெரியாதவர்போலத தத்தளித்து "ஐயா! அம்மா! பரதேசியப்பா! வவுத்தெ பசி தாங்க முடியலே தொரிங்களே! சாமி! இப்போ இரவா பகலா! நானு சிம் மாசனத்து மேலேஇருக்கறேனு? அல்லது சும்மாகீழே நடக்கறேனு! ஒ யப்பா! நான் சந்தனமவாராஜாவாச்சே! ஐயோ! பசி பிராணம் போவுதே! யம்மாடீ! எப்பாடா! திக்கி வேறே இல்லே. ஐயனே! என்னெ ரச்சிபாரில்லே. அப்பனே! இதென்ன காடா! வூடா! செடி யா! மரமா! குளமா! கடலா! அடியாத் தேடுர்ர்ற்ர் இத்தான். நம்ப ளோடே அரமனெக் கட்டிடம். ஐயோ! பசிக்குதே!" என்று தாறுமாருக சம்பந்தமில்லாத வார்த்தைகளைக் கூறிக்கொண்டு அந்தக் குடிசையிருக்கும் இடத்தை நோக்கி இன்னு மதிக மான கூச்சலிட்ட வண்ணம் நடக்கின்ருர். ராஜாங்கள்ளாம்

வசிக்கு மரமனே இதுதானே? யப்பா! நானும் ராஜா! எம் பொண்டாட்டி ராஜாத்தி! எம் பிள்ளே எனக்குப் புள்ளே. எம் பொண்டாட்டிக்கு மவன். ஐயோ! பசிக்கறதே! சாப்பாடு போட்றவங்க இல்லேயா!

சாப்பாடு போடலேயா! சானு வவுத்துக்கு
சாப்பாடு போட்டாக்க சந்தோசமாத்திம்பேன்—சா

அம்மா! யப்பா! பசிக்குதே! வவுத்தே பசிக்குதே என்னு செய்வேன்? இந்த ராஜாங்கத்திலே வந்தவங்களைக் கேக்ரவங்க இல்லேயா?'' என்று பேசிக்கொண்டே, பாடிக்கொண்டே வருகிறார். அந்தக் குடிசைக்குச் சமீபத்தில் வந்து விட்டார். இவருடைய பாடலேயும் கோஷத்தையும் கேட்டுத் திடுக்கிட்டவர்களான குடிசைக்குள்ளிருந்தவர்கள் அலறியவாறு வெளியில் வந்து பார்த்தார்கள். அவர்கள் வெளியில் வந்ததை யறிந்த நாயுடுகாரு முன்னிலும்அதிகரித்தகூச்சலுடன்''எப்பாடி!எம்மாடி!கால்தான்மொண்டிய்யா! நான் நொண்டி ராஜா; என்பேறு திருநீறு. எம்மாடீ! பசிக்குதே! இந்த ஊர்லே ராஜா இல்லேயா? மந்திரி இல்லேயா? செவுரு இல்லேயா? என் வவுத்துக்கு சோறு இல்லேயா; யம்மா!பசிக்குதே! என் பசி ஒங்களுக்குத் தெரியலேயா! ஐயோ! அப்பா! அம்மா! தாயே! தல்லீ! தண்டீ! நேனுபெத்த கொப்பஓசத்தி ராஜாமவன். எங்கப்பன்பேறு சடையாண்டி. ஐயோ!பசி; ப்சி; புசி என்னு சொல்லாத ராஜா என்னுதுக்கு?''என்று பலமாகக் கூச்சலிட்டுக் கத்தினர். இதற்குள் அங்கிருந்து வழக்கமாக வரும் பையன் இவரண்டை வந்து இவரைக் கவனித்து உற்றுப் பார்த்தான். இவர் பையனைக் கண்டதும் பெரியதாக நகைத்து அவனே விரைக்க விரைக்கப்பார்த்து முகத்தைக்கோணல்மாணலாகவைத்துக்கொண்டு உதட்டைப் புதுக்கி மூக்கை உருஞ்சியபடியே! ''ஓய்ப்பா! நீ தான் இந்த ஊருக்கு ராஜாவோ! யம்மாடீ கொள்ளேயப்பா! கொள்ளே! கொள்ளேயப்பா! கொள்ளே! நானும் எரியூருக்கு ராஜா! என்னேப் பார் எம்மூஞ்சியைப்பார்னு. நான்இராஜாவாட்டும் தெரியல்லே. குர்ர்ர்ர்ட்ப்ட்ப்ட்ப் என்று கூறி மீண்டும் நகைத்துக்கொண்டே கம்பை யூன்றியவாறே கூத்தாடிப் பையனேச் சுற்றிச் சுற்றிக் குதித்தார்.

இந்த வேடிக்கையையும் அவருடைய குதிப்பையும் பேச்சையும் கண்ட பையன் வியந்து, சிரித்து இவர் பைத்தியம் என்று ஊகித்துக்கொண்டே, "ஏ கிழவி! என்ன பேசரே! என்றான்.

**நாயுடு:**—ஏ கிழவி! என்ன பேசரே!—என்று முகத்தைக் கோணல் செய்தார்.

**பையன்:**—என்ன கிழவி! நான் சொல்லரத்தையே சொல்ரயே! நீ யாரு என்ன சொல்ரே!

**நாயுடு:**—என்ன கிழவி! நான் சொல்ரத்தையே சொல்ரயே! நீயாரு என்ன சொல்ரே!

**பையன்:**—இதென்னடா! பைத்தியம்போல் இருக்குதே! ஏ பைத்தியம்!

**நாயுடு:**—இதென்னடா! பைத்தியம்போல் இருக்குதே! ஏ பைத்தியம்!

**பையன்:**—ஏ! ஒனக்குப் பேசத் தெரியாதோ! நான் சொல்ரத்தையே நீயும் உளர்ரே.

**நாயுடு:**—ஏய்! ஒனக்குப் பேசத் தெரியாதா! நான் சொல்றத்தையே உளர்ரையே!

**பையன்:**—இதென்ன! சொன்னத்தைச் சொல்லும் கன்னப்பித்தம்! ஏ! ஆயா! இதோபாரு இந்தப் பைத்தியத்தை. இங்கே வா.—என்று கூவினான். உள்ளிருந்து ஒரு கிழவி ஓடிவந்தாள். அவளைக் கண்ட நாயுடு தமது கொம்புடன் ஓடிவந்து கிழவியின் எதிரே விழுந்து வணங்கி, "என்னம்மாடீ! என் ராணியாரே! இந்த ஊர் ராணி நீ தானா! நீ தானா! மவாராணீ! நீதானா மவாராணீ? ரா ரா ரா ரா ரா ணீ ணீ ணீ ணீ ராணீ! டுர்ர்ர்ர் இப்பா இம்மா! கண்டேன் கண்டேன் டுர்ர்ர்ர் ஏ! மவாராணிங்களே! உன் வவுறு கோணிங்களே! என் ஒயரம் ஏணிங்களே! ங்களங்கள ங்கள ங்களே! யம்மாணீ! வவுத்தெ பசிக்கிது! ஒரு தலை அன்னம் போட்டால் பாவம் வராதா!" என்று இவர் பேசுவதைக் கேட்ட அந்தக் கிழவியும் இவரை உண்மையிலே பயித்தியமென்று எண்ணிக் கலகலவென்று நகைத்தபடியே, ஏ! கயிவி! நீ எந்த ஊரு? என் இவ்விதம் தாறுமாறு உளருகிறாய்?" என்றாள்.

நாயுடு:—அப்டித்தாயம்மா! அப்டித்தாயப்பா! அரெ க்பா போல்தே தும் நானு ரென்று சொல்லப்போறேன். ஆணைக்கு பேரு அத்தி, உனக்கு பேரு முத்தி. எனக்கு ஊரு சுத்தி. வாட்பூட்டு கத்தி. ஓ யம்மாடி யோய்! யப்பாடி யோய்! ராணியாரே! அரசியரே! அரிசி அரை டும் டும் டும் டும் குகு கருபுக் திம் திம் ரோர்ர்ர்—என்று பாடினார். இதைக் கேட்ட பையன் “கிழவி இருவரும் கொல்லென நகைத்து நாயுடுவின் உன்மத்தக் கோலத்தையும் செய்யும் சேஷ்டைகளையும் கண்டு வியந்து நிற்கிறார்கள். இதற்குள்ளே உள்ளேயிருந்து இரண்டு பேர் வெளியே வந்து ‘இதென்ன கூச்சல்?’ என்று ஆர்ப்பரித்தார்கள். இதைக்கேட்ட நாயுடு காலை நொண்டியபடியே கொம்பை கட்கத்தில் ஊன்றிக்கொண்டு குதித்தவாறு,

“இந்த ஊரு மூஞ்சியே பாருயப்பா! காரிதுப்ப! டுற்டுற்டுற்டுற் செப்ப! எங்கப்ப! சிரிப்ப! உப்பா! புளிப்பா! அடியோ! யம்மாடியோ!

இவருதான் ராஜாவாமே! ராஜவாமே! அவருதான் மந்திரியாமே! மந்திரியாமே! பும் பும் புரும் புரும் புரும் டக டக டக டக டக நானும் ராஜா! செடியிலேயும் ரோஜா! தண்ணீர் கூஜா ஹீ ஹீ ஹீ ஹீ ஹீ ஹீ யப்பா சோறு பசிகிதே!” என்று ஆடிப்பாடுவதைக்கண்ட உள்ளிருந்தவர்கள் அங்குநிற்கும் கிழவியைக் கண்டு “ஐயோ! பாவம்! இதெப்படியோ வழிதப்பி வந்துவிட்டது, முழுப் பைத்தியம்போல் இருக்கிறது. அதோடு காலும் நொண்டி. அன்னமிருந்தால் போட்டுத் துரத்துங்கள். அதை வேடிக்கைப் பார்க்கவேண்டுமா?” என்றார்கள்.

இதைக்கேட்ட கிழவி “யப்பா! நான் இதைக்கவனிப்பதும் ஓர் காரியமாகத்தாம்பா! இன்னென்ன நாம்ப இங்கிருக்கரத்தெபத்தியாராணும் பாத்துட்டா நம்பமேலே சந்தேகம் படுவா! அதுக்காவா இந்தப் பயத்தியத்தை இங்கெயே வச்சிக்கினு இதுக்கு வயித்தியம் பாக்ரத்து இருக்கோ முண்ணும் சொல்லலாம், இந்தப்பயித்தியத்தை பார்த்துகிணே நம்பபோதும் கடுவபூடும். இன்னென்றெ! அதுக்குதான் பாக்கறேன்” என்றாள். இதைக்கேட்டதும் அவர்கள் சற்றுயோசித்து இதுவும் சரியான யோசனைதான் என்று எண்ணியவர்களாய்க் கிழவியை நோக்கி, “நீ சொல்வது சரிதான். இதுதான் பயித்தியமாயிற்றே! இது இங்கெயே நிலைத்து இருக்கும் என்று எவ்விதம் நம்புவது? ஓட்டமெடுத்தால் என்ன செய்வது?” என்றார்கள்.

இதைக்கேட்டகிழவி “நாம்ப நல்லாவவுத்துக்குப் போட்டிவச்சிகினு போவுமா? மேலும் இதுக்குத் தான் காலு நொண்டியாச்செ! அந்த கட்டெடயெ புடுங்கிவச்சிட்டா இது எப்படி நடக்கும்? குந்திக்கிணபடியே எப்படி போவும்?” என்றாள். அந்த மனிதர்கள் அதை ஆமோதித்தார்கள்.

182838


# இனாம்! இனாம்!

## முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்! 'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்

இனாம். இனாம்.




எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ 5. இக்கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்.

---


ஒரு மாதம்

# பாதிவிலை! பாதிவிலை!

வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7,




22 காரட் ரோல்டு கோல்டு கைக்கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும்; இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்.

தபால் நெ, 508, பி, டி மதராஸ்.

# லோகோபகாரி.

முப்பத்திமூன்று ஆண்டுகளாய் நிலவும்.

## வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்—பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புது வாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அறநெறியும், அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்துவருகிறது. இதனைத் தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டும்.

வருஷ சந்தாரூபாய் நாலு. வெளிநாட்டுக்கு ரூபாய் ஆறு.

மாதிரிப் பிரதி இனாம்.

காரியஸ்தர்,

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

---

# "கிருஷிகன்."

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள் :—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலிசேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,

"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

இனாம்! ஒரு அணா ஸ்டாம்பு அனுப்புவோர்க்கு இனாம்!

ஸ்ரீமான் வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா அவர்கள் எழுதிய

**போலீஸ்கிலி பொதி ராயர்.**

சிரிப்பைத்தரும் துப்பறியும் நாவல்.

இதில் கயிற்றைக்கண்டு பாம்பெனப் பயப்படும் போலீஸ்புலி படும் திண்டாட்டம் படிக்கப்படிக்க ஓயாச் சிரிப்பைத்தரும்.

வத்ஸா கம்பெனி
திருவல்லிக்கேணி, மதராஸ்.

---

நயம்! வெகு நயம்!

உயர்தரமான பம்பாய் கெட்டிச்சாயமுள்ள

**கலர் புடவைகள்.**

இவைகள் தினந்தோறும் தோய்த்து அணியத் தக்சவை. செம்பு ரோஸ், கருப்பு, ஆரஞ்சு, பச்சை, சாக்லேட் நிறங்களில் கிடைக்கும். பெண்மணிகளைத் திருப்திப்படுத்த பளபளப்பும் வசீகரத்தோற்றமும் கொண்ட இவ்வாடைகளை வாங்குதலே சரி. அளவு $18\times2\frac{3}{4}$ முழங்கள்.

கெட்டி சாயம்! உயர்ந்த உடை!! விலை நயம்!!!

முதல் ரகம் விலை ரூ. 5-8-0; 2-வது ரகம் ரூ. 4-8-0. பூக்கொடிக்கரை செய்து முந்தாணியில் பூவேலை செய்திருக்கும் உருப்படி 1-க்கு ரூ. 1-8-0. அதிகம்.

ஜர்மன் சில்க் புடவைகள்

பிளேன்: பயில் கழுத்து, பொன் வண்டு, மேகவர்ணம், மாந்துளிர், பச்சை, அரக்கு, கருப்பு, முதலிய எல்லாக் கலர்களிலும் கிடைக்கும்; பெங்களூர் முந்தாணி போட்டது; கலர்கெடாது; மனோகரமான மழமழப்பு; பளபளப்பு மாறாது; ரம்மியமான தோற்றமுள்ளது, நேர்த்தியான நெசவு கொண்டது; நீடித்து நிற்பது; உறுதியானது; அளவு $18\times2\frac{3}{4}$ முழங்கள். விலை ரூ. 12-8-0. ரவிக்கை துண்டு 1-க்கு 12 அணா.

கோட்டடி: கரைகளில் பேட்டு வைத்து உடலில் பவழக்கொடி, தந்திக்கம்பி, டில்லி தர்பார், முதலிய தினுசுகள்.

$18\times2\frac{3}{4}$ விலை 13 8 0.
ரவிக்கை 1 முழம் 0 14 0.

மேற்படி பிளேன், கொட்டடி தினுசுகளில் ருத்திராக்ஷப் பேட்டு வைத்து தலப்பிலும் ஜரிகை (கருக்காதநு) வேலை செய்த உருப்படி 1-க்கு 3-8-0 அதிகம்.

ஏஜண்டுகள் தேவை.

குறிப்பு:—உத்தம உடைகளுக்கு உத்தரவாதம்; ஆகவே நல்ல சரக்குகளை இங்கேயே வாங்குங்கள். ஆர்டருடன் கால்பங்கு முன் பணமனுப்புக. தபால் கூலி வேறு.

ஸிட்டி நெசவுச் சாலை,
65, அரமனைக்கார வீதி, ஜி. டி. சென்னை.

# ரக்ஷையும் மந்த்ர சக்தியும்

துரதிஷ்டத்தையகற்றி சுகஜீவனத்தை நாடுவோர்க்கு அவசியமானவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| கௌரவம், தனம், கல்வி பெருமைக்கு | 7 | 8 |
| ஆரோக்கியம், சரீரபலம்பெற | 7 | 8 |
| வாக்சாதுர்ய சக்திக்கு | 7 | 8 |
| நீதிவிவகார கெலிப்புக்கு | 10 | 0 |
| விளையாட்டு, பந்தயம் சீட்டு | 7 | 8 |
| விவகாரங்களில் ஜயிக்க | 10 | 0 |
| மாதரிடம் ஆடவரன்பு பெருக | 7 | 8 |
| ஆடவரிடம் மாதரன்புபெருக | 10 | 0 |
| ஆடவராயினும் ஸ்திரீயாயினும் முறையே வசீகரித்துக்கொள்ள | 7 | 8 |
| நல்ல யாகுல் அறுவடையாக | 7 | 8 |
| ரப்பி ஸாலமனின் ரக்ஷை | 15 | 0 |
| ஜயவீரஹீப்ருவினாலணியப் பெற்ற ரக்ஷை இரண்டாவது ரகம் | 21 | 0 |
| முதலாவது ரகம் | 30 | 0 |

**குறிப்பு** :-மணியார்டராவது கவர்ன்மெண்ட் கர்ரென்ஸி நோட்டாவது அனுப்பினால், வீட்டிற்கே நேராக ரக்ஷை வந்து சேரும். ரக்ஷைவேண்டுவோர் முழுக்கிரயத்தையும் அட்வான்ஸாக அனுப்பிவிடவேண்டும். வி. பி. யில் அனுப்ப முடியாது.

D.A. RAMA DUTH,
**Astrologer**
*No. 30 and 55, (J) Chekku St.*
COLOMBO, Ceylon.

---

## மதனசிங்கர்

*அல்லது*

### உரிமை இழந்த சீமான்.

(திருத்தமான இரண்டாம் பதிப்பு.)

இந்த துப்பறியும் அபூர்வமான செந்தமிழ் நாவலை படிக்கத் துவக்கியவர்கள் முடிக்கிறவரையில் வேறெவ்விதமான அவசர வேலைகளிருப்பினும் அவைகளை மறந்து, இந்த நாவலிற் செறிந்துள்ள சொற்சுவை பொருட்சுவைகளால் வசியமாக்கப்பட்டு, வாசித்து முடித்த பின்னரே அவைகளைக் கவனிக்கச்செய்யும் என்பது நிச்சயம். விலை ரூ. 1 4 0.

## சுந்தரவதனி

*அல்லது*

### தர்மமே ஜெயமளிக்கும்,

இது ஓர் அதியற்புத சிங்காரமான காதல் ததும்பும் துப்பறியும் தமிழ் நவீனம். படித்தவுடன் திடுக்கிடச்செய்து, மனதைக் கவரும் ஆச்சரிய சம்பவங்களாலும், ரகஸ்யக் கடிதங்களாலும் நிறையப்பெற்றது. விலை அணா 12.

### வசந்த சமுத்திரம் அல்லது இரண்டு ஜெகன் மோகினிகள்.

இந்த இனிய துப்பறியும் நாவலில் துப்பறியும் சிங்கமாகிய ஸிம்ஹள நாதர் தாம் முன்னமே காதலித்த வசந்தமாலை என்பவளை வேறொரு திருடன் காதலிப்பதும் ஜயசிங் என்னும் பரதேசி வருதலும், திலகசமுத்திரம் தோன்றி சில விஷயங்களை உரைத்தலும், ஸிம்ஹள நாதரை கொலை செய்ய முயற்சிப்பதும் இந்நாவலின் கண் ரஸங்குறைவு படாமல் ஆரம்ப முதல் முடிவுவரையில் படிப்பதற்குத் தூண்டும் இயல்புடையதாக எழுதியிருக்கிறது. விலை 0 12 0

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை.



Sri Panduranga Press, Triplicane.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# சௌந்தரகோகிலம் 3-ம் பாகம்

புதுமை புதுமையான திடுக்கிடும் சம்பவங்களை நிறைந்து கதை ஆநந்தமாக முடிவடைகிறது. இதன் விலை ரூ. 2-4-0. முதல் பாகத்தின் விலை ரூ. 1-8-0. இரண்டாம் பாகத்தின் விலை ரூ. 2-4-0. மூன்றையும் சேர்த்து ஒரே தடவையில் வாங்கினால் தபால் செலவு சேர்க்கிறதில்லை. ரூ. 6 அனுப்பினால் போதும்.

ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள் எழுதிய

## இதர நாவல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாயாவிநோதப் பரதேசி 1, 2 | 5 | 0 | கன்காம்புஜம் 1, 2 | 2 | 12 |
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | 7 | 8 | மாயாசுந்தரி | 0 | 12 |
| மதன கல்யாணி 1, 2, 3 | 4 | 8 | வஸந்தமல்லிகா | 1 | 8 |
| கும்பகோணம் வக்கீல் 1, 2 | 3 | 0 | வித்தியாஸாகரம் | 1 | 4 |
| மேனகா 1, 2 | 3 | 0 | திலோத்தமா | 0 | 12 |
| விலாசவதி 1, 2 | 3 | 0 | மாணிக்கவாசகர் | 0 | 8 |
| பாலாமணி | 2 | 8 | வஸந்தகோகிலம் | 1 | 0 |
| காளிங்கராயன்கோட்டை 1,2 | 4 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |

"ஜகன்மோகினி" சந்தாதாரருக்கு ஓர் அறிவிப்பு—

வெளிவந்து விட்டது! புதியநாவல்!! வெளிவந்து விட்டது!!!

நாவலிற் சிறந்த நவீன நாவல்! சித்திரப்படம் சேர்ந்த சிறந்த நாவல்!!

பத்தி போதிக்கும் புதிய நாவல்!!!

## அமிர்தமாலினி.

(அழகிய ஆப்டோன் படத்துடன் கூடியது)

நவீனமாக வெளிவந்திருக்கும் இந்த "அமிர்தமாலினி" மிக்க மிக்க இனித்திடும் நாவலாகும். அதியற்புதமான ஆனந்த கர்பிதம், பாச்சுவை பரவிய நடையுடையது. அமிர்தமாலினியின் குளிர்ந்த குணங்களையும், ...ம்மாளின் கடூர குணங்களையும், படிக்கப்படிக்க ஆனந்தமளிக்கும். "... கப்பட்ட சேயிழையாள்" என்னும் அத்தியாய மொன்றே இதன் சி... வெளிப்படுத்தும். கொஞ்சம் காப்பிகளே அச்சிட்டிருப்பதால் ஆர்டருக்கு முந்துங்கள். இதன் விலை அணு 4.

குறிப்பு:—ஜகன்மோகினி சஞ்சிகையில் 4-வது மலர் 4-வது இதழில் மேல் கண்ட நாவல் வெளிவந்திருக்கிறபடியால் மேற்படி நாவலின் முடிவைத் தெரிந்துகொள்ள, இந்தியா 4-அணு ஸ்டாம்பு அனுப்பினால் தபாற் செலவு இல்லாமல் அமிர்தமாலினி என்னும் நாவல் அனுப்பப்படும்.

வத்ஸா கம்பெனி,

திருவல்லிக்கேணி, மதராஸ்.

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்




சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10. ரூ 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

## உடனே முந்துங்கள்

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து — டப்பி 1-க்கு 0—6—0

பல்பொ[illegible] — டப்பி 1-க்கு 0—[illegible]—0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

**அமிர்தாஞ்சன் டிபோ,**
**7· தம்புச் செட்டி வீதி, சென்னை**

Edited and Published by V. M. Parthasarathy Iyengar,
PRINTED AT THE 'NOBLE PRESS.' TRIPLICANE, MADRAS S.E.